# கலைச்செல்வி

# kalai chelvi


1964

6-1

6-1



# பீடி உலகிலேயே ஒரு புரட்சி!




என்ன ?

## யானை பீடி

ஸ்பெசல்

நீங்கள் சோம்பலின்றி துரிதமுடன் செயலாற்ற எப்பொழுதும் எந்நேர முமு புகைக்க உகந்தது

யானை பீடி ஸ்பெசல்




பீடி உலகில் தனக்கென ஒரு
தனி இடத்தை வகுத்துக்
கொண்டதும் இலங்கையில்
வெற்றிக் கொடி நாட்டி
வருவதும்

யானை பீடி ஸ்பெசல்

தொலைபேசி : 7651

தயாரிப்பாளர்கள் :

1964 - 6-1

அ. கிருஷ்ணசாமி,
33, பெரிய கடை,
யாழ்ப்பாணம்,


# S. V. Ponnampalam & Sons

345, MAIN STREET, COLOMBO - 11

Dealers in Nestles products, Direct Importers, Wholesale & Retail Merchants for Provisions, Grocery & Tinned food




நெஸில்ஸ்

தயாரிப்புகளின் விநியோகஸ்தர்கள்

உணவுப்பொருட்கள், சாப்புச்சாமான்கள், தகர உணவுகள்.

முதலியவற்றின் மொத்த, சில்லறை, விற்பனையாளர்கள்.

# ச.வே.பொன்னம்பலம் அன் சன்ஸ்

345, பிரதானவீதி, கொழும்பு

தொலைபேசி 4475 தலைமை அலுவலகம்.

,, 6522 இல்லம்.

# MODERN RADIO SERVICE

Technician: **T. S. THILAGARATNAM**
(A. M. I. E. T London)

# றேடியோ பாவனையாளர்கட்கு
## எங்கள்
# மனமார்ந்த வேண்டுகோள்!

கருவிகள் தேர்ச்சியற்ற தொழிலாளர்களால் சிதைபட்டு இறுதியில் கொழும்புக்கும் அனுப்பி இது இனி திருத்த முடியாதென்று கழிக்கப்பட்டு விடுகின்றன. கொழும்பு என்று சொல்லும் ஊர் இதைப் பழுதுபார்ப்பதில்லை. அங்கும் தொழிலாளர்களின் திறமையைப் பொறுத்திருக்கிறது. இதை நிரூபித்துக்காட்ட எம்மிடம் ஒருமுறை விஜயம்செய்து பார்க்கவும்.

றேடியோ எவ்விதம் சீர்கேடான முறையில் இருந்தாலும் சரி மீண்டும் அதை நல்ல சத்தஉணர்ச்சியுடன் சீர்ப்படுத்தி உத்தரவாதமுடன் கொடுப்போம்,

தற்கால அதிநுட்ப ட்றான்சிஸ்ரரால் இயங்கும் கருவிகளை கெடுத்துவிடாமல், பழுதுவந்ததும் எம்மிடம் கொண்டுவந்தால் எந்தச் சாமான் எடுக்கமுடியாதென்றாலும் சரி அதை நல்லமுறையில் இயங்கவைக்கும் வசதி உங்களுக்கு கிடைக்கும்.

அத்துடன் கார்களில் இயங்கும் றேடியோ அநேகம் தெளிவற்றும் ஏகப்பட்ட சத்தத்துடன் வேலைசெய்யுமாயின் அதை நல்ல சத்த உணர்ச்சியுடன் செய்து கொடுப்போம் என்பதையும் அறிவிக்கிறோம்.

மின்சாரத்தினால் இயங்கும் எவ்வித பொருளும் இவ்விடம் சீர்ப்படுத்தலாம்.

பெட்டி, டயல் இல்லாதவற்றிற்கு இவ்வூரில் தயாரித்ததென்று சொல்லமுடியாத நிலைமையில் அவற்றைச் செய்து தரவும் முடியும்.

# செ. திலகரத்தினம்
A. M. I. E. T. London.

## மோடேன் றேடியோ சேவீஸ்,
சாவகச்சேரி.

# எஃப் ஜீவாஜி சகோதரர்கள்

## மொத்த சில்லறை வியாபாரிகள்:

- எல்லாவிதமான கடதாசி வகைகள்
  போர்ட் வகைகள்
- அச்சு மை வகைகள்
- பாடசாலை உபகரணங்கள்

## தயாரிப்பாளர்கள்:

- அப்பியாசக் கொப்பிகள்
- கணக்குக் கொப்பிகள்

உங்கள் தேவைகளை திருப்திகரமான முறையில் தந்து உதவுகிறோம்.

**தயவுசெய்து ஒருமுறைவிஜயம் செய்யுங்கள்.**

---

# எஃப். ஜீவாஜி சகோதரர்கள்

இல. 9-11, ஜுபிலி பஜார் (ராணி தியேட்டருக்கு வலதுபுறம்)

**யாழ்ப்பாணம்.**

---

**தலைமைக்காரியாலயம்:**
ஜீவாஜி சகோதரர்கள்
50, புதிய சோனகத்தெரு
கொழும்பு-12.
தொலை பேசி: 78861

**கிளை:**
இன்டிப்பென்டன்ரேடிங் கொம்பனி
51A, முதலாம் குறுக்குத்தெரு
கொழும்பு-11.
தொலைபேசி : 79097

**தொழிற்சாலை:**
146, புதிய சோனகத்தெரு. கொழும்பு-12.

இலங்கையின் முதல்தரமான உன்னத தயாரிப்பு இதுவே!




ஆலயதேவைகளா? அலங்கார வைபவங்களா?

இன்றேல் சுபகருமங்களா?

புதிய நறுமணம் கமழும் மிருக நெய் கலப்பற்ற உண்மையான
பிரீடம் மார்க்

# கற்பூரம்

உங்களது சகல தேவைகளையும் பூர்த்திசெய்யத்
தயாராயிருக்கிறது.

இஃது அரசாங்க அனுமதி பெற்ற ஒரேயொரு
உள்நாட்டு உற்பத்தியென்பதை மறக்கவேண்டாம்!

விபரங்களுக்கு. Grams: **KANKEYAN**

# Free Lanka Industries


**MINUWANGODA - CEYLON.**

டிராக்டர்களையும் விட

1.500.000

க்காரர்களிஞல் மிகச்சிறந்த

அறிவிக்கப்பட்டுவிட்டது!



**மஸ்சி - பெர்குசன்**

**ஆர்ன்கோ அக்ரிகல்சரல் இன்டஸ்றீஸ்**

**பரந்தன் - வவுனியா**

சிறந்த முறையில்

சிலேடுகள்

புளொக்குகள்

விளம்பர போர்டுகள்

செய்வதற்கு

யாழ்ப்பாணத்தில் முன்னணியில்
நிற்பவர்

# ஓவியர் கே. பத்மா

(விளம்பர போர்டுகள் செய்வதில் விசேடம் பெற்றவா்)

**95/2 கே. கே. எஸ். ரோட், யாழ்நகர்.**

*The Leading*

**ARTIST**

IN THE NORTH

# K. PADMA

*(Specialist in Sign Board Printing)*

95/2. K. K. S. Road, JAFFNA.

# உள்நாட்டுக் கைத்தொழிலை ஆதரியுங்கள்

## சோவியத் ரஷ்யாவிடமிருந்து விசேஷமாகத் தருவிக்கப்பட்ட மின்சார ஒட்டுவேலை

## (Electric Welding) இயந்திரத்தைக் கொண்டு உங்கள்

- லொறி, வான் செஸிகளும் உழவுயந்திர (ட்ராக்டர்) உடைந்த உறுப்புகளும், சீனச்சட்டி, இரும்பு, மற்றும் இயந்திர உபகரணங்களும் ஒட்ட
- பணத்தைப் பாதுகாக்க இரும்புப்பெட்டி (Iron Safe) செய்ய.
- நவீன அமைப்பு வீடுகளுக்கு கிறில் யன்னல்கள், கேற்றுகள், கதிரை, மேசை, கட்டில் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் செய்ய

யாழ்ப்பாணத்தில்
சிறந்த தொழில் ஸ்தாபனம்

# யாழ்ப்பாணம் உலோகத் தொழிற்சாலை

உரிமையாளர்: **பொ. செல்வத்துரை**

(ஆரியர் குளம் குருநாத சுவாமி கோவிலுக்கு முன்னால்)

45, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:

இங்கு நவீன இயந்திரங்கள் மூலம் குறைந்த செலவில் உங்கள் விருப்பம் போல் உலோகம் (METAL) சம்பந்தப்பட்ட சகல வேலைகளும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

# இலங்கா நிதி லிமிற்றெட்

## 10 ஆண்டு நிரந்தர சேமிப்பு மூலம்

ரூ 500-00, 10 ஆண்டில் ரூ. 1000-00 ஆகும்
ரூ. 1000-00, 10 ,, ரூ. 2000-00 ,,

**நிரந்தர சேமிப்பு ஒருமாத அறிவித்தலின் பின் கீழ்க்கண்ட தொகையை எடுக்கலாம்**

| சேமிப்பு | | ரூ 500-00 க்கு | ரூ. 1000-00 க்கு |
|---|---|---|---|
| 1 | ஆண்டின் பின் | 535-00 | 1070-00 |
| 2 | ,, | 572-00 | 1144-00 |
| 3 | ,, | 611-00 | 1222-00 |
| 4 | ,, | 652-00 | 1340-00 |
| 5 | ,, | 695-00 | 1390-00 |
| 6 | ,, | 745-00 | 1490-00 |
| 7 | ,, | 800-00 | 1600-00 |
| 8 | ,, | 860-00 | 1720-00 |
| 9 | ,, | 925-00 | 1850-00 |
| 10 | ,, | 1000-00 | 2000-00 |

தலைமை ஆபிஸ்: திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
கிளை: வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

புத்துணர்வை அளிக்கும் உயர்ந்தபீடி,
இலங்கை மக்கள் விரும்பிப் பாவிக்கும் பீடி

## ஸ்டீம்
## ஸ்பெஷல்
## 903



# கபூர்
# பீடிகள்

பீடிகளிலேயே காரம் மிகுந்தது

பீடிகளில் குணம் மிகுந்தது

பீடிகளில் மிகச் சிறந்தது

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்த
பீடி இலைகளும், புகையிலைகளும்

எங்களிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

தலைமைக் காரியாலயம்: திருச்சி.
கிளைகள்: திருநெல்வேலி; கொழும்பு.

## என். பி. அப்துல் கபூர்

102/2, ஆட்டுப்பட்டித்தெரு,
**கொழும்பு-13**

தந்தி: GAFOORBIDI  போன்: 4929

# பாடசாலை காகிதாதிகள்

## மற்றும் இடங்களிலும் பார்க்க மலிவான விலைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

அப்பியாசக் கொப்பிகள்—40 & 80 பக்கங்கள்
வரைதல் கொப்பிகள், பெரிய, நடுத்தர, சிறிய அளவில்
பென்சில் வகைகள் (லட் & காப்பியிங்)
வரைதல் பென்சில் வகைகள்—நிறம் (பெட்டிகளில் 6, 12, 24)
கணித அளவைப் பெட்டிகள்
வெண்கட்டி, வெள்ளையும் நிறமும்.

காரியால எழுதுபாவனைப் பொருட்கள் (office stetionery)

தட்டெழுத்துக் கருவி "Consul" 19," 12"
கார்பன் கடுதாசி "பெலிக்கன்" மொனேப்பல்" & 'அசோகா'
(ஒற்றை இரட்டைப் பகுதிகள்)
(எழுதுவதற்கும் தட்டச்சுப் பாவனைக்கும் உரியபலஅளவுகளில்
தட்டச்சு றிபன்
போல்பெயின்ட் பேனுக்கள்
ஊசி (ஒரு குத்தல் பெட்டிகள்)
பன்சர்
தட்டை பைல்கள் (கால், முழுத்தாள் அளவுகளில்)
இதரவகைகள்,

பிறிஸ்டல் போட் நிறங்களில்.

மணிலாபோட்
பொக்ஸ் போட் 250 கிறும்
புத்தக அட்டைகள்

இதர உபகரணங்களும் எம்மிடம் கிடைக்கும்.

விபரங்களுக்கு:

அதிபர்

**சீ. டபிள்யூ. ஈ. ஸ்ரேசனறி இலாகா,**

**மக்கலம் வீதி, கொழும்பு-10**

போன்: 4267.






தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்

—பாரதியார்


| கலை: 6 | 1964 ஐந்தாவது ஆண்டு நிறைவுப் பொங்கல் மலர். | காட்சி: 1 |
|---|---|---|

**JANUARY 1964.**


## மலரில் எழுதியவர்கள்

1 சஞ்சீவி.
2 சம்பத்
3 யாழ்ப்பாணம் ந. வீரமணி.
4 இராஜ அரியரத்தினம்.
5 யூ. செயின்.
6 க. த. திருநாவுக்கரசு.
7 சத்யன்.
8 எம். ஏ. ரஹ்மான்.
9 க. பரராஜசிங்கம்.
10 மணிவண்ணன்.
11 தேவன்–யாழ்ப்பாணம்.
11 சாரு.
13 சிற்பி.
14 சு. வே.
15 ரீ. பாக்கியநாயகம்.
16 உதயணன்.
17 அன்புமணி.
18 யாழ்நங்கை.
19 செங்கை ஆழியான்,
20 செம்பியன் செல்வன்.
21 கா. கைலாசநாதக் குருக்கள்.
22 முனியப்பதாசன்.
24 சத்தியசீலன்.
24 மஹாகவி.
25 அம்பி.
26 திமிலைத்துமிலன்,
27 நீலாவணன்.
28 ச. வே. பஞ்சாட்சரம்.

தமிழுலகின் ஒரே சித்திரக் கலண்டர்

**லீலா பஞ்சாங்க சித்திரக் கலண்டரே**

பல அரிய புதிய
விஷயங்கள் அடங்கியுள்ளது.

வியாபாரத்திற்கு தகுந்த
கமிஷன் உண்டு.

இன்றே வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்.

**ஒன்றின் விலை ரூபா 1.85**




டிசம்பர்

# 22

| மார்கழி | ஷஃபா |
|---|---|
| 8 | 17 |



ரிஷி பத்தினி

அன்னை

சாரதாதேவி

அவதார்; 22-12-1853
சமாதி: 20-7-1920

செவ்வாய் TUES

—சதுர்த்தி, சித்தம் இரவு 12-09 வரை—
பூசம் பகல் 9-05 வரை
இராகுகாலம், 3-25—4-55 சுபநேரம், 9-55—11-25

எந்தநாளும் நின்மேல் தாயே!—இசைகள்பாடி வாழ்வேன்.
கந்தனைப் பயந்தாய் - தாயே!—கருணை வெள்ளமானாய்


**லீலா பிளாஸ்டிக் டயறி, லீலா டெஸ்க் டயறி,**
**லீலா பேர்ஸ் டயறி, ஆகியவையும்**
அழகிய முறையில் தயாரிக்கப்பட்டு விற்பனையாகின்றன.

ஏகவிநியோகஸ்தர்கள்: **லீலா ஸ்டோர்ஸ்**

போன் : 5924/7452 249, நொறிஸ் வீதி,
தந்தி : காங்கேயன் கொழும்பு-11

# கருத்தோட்டம்.

மனித வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையவை கலைகள். இலக்கியக்கலை மனிதனைச் செம்மைப்படுத்துகின்றது. மனிதனை உயர்ந்தோனாக ஆக்க வேண்டும் என்ற நோக்கமுடன் இலக்கியம் படைக்க விரும்பும் எழுத்தாளர்கள், தம் சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றில் தூய்மை யுடையவர்களாக இருக்க வேண்டும். யதார்த்த வாழ்வில் பலாத்காரத்தையும் அடக்குமுறையையும் கையாள்வோர், தம் இலக்கியத்தில் அன்பையும் பண்பையும் பற்றிப் போதிப்பதிற் பயனில்லை. முதலில் உள்ளத்தில் உண்மையொளி உண்டாகட்டும்; பின் வாக்கினில் ஒளி உண்டாகும். இத்தகைய ஒளிதான் மக்களுக்கு வழி காட்டும்.

✲ ✲ ✲

உண்மை பேசுவதையே தன் பழக்கமாகவும் பண்பாகவும் கொண்டவன், ஞாபக மறதியைப் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. எப்பொழுதும் நேர்மையுடன் நடப்பவன் எதையும் ஒளித்து மறைத்துச் செய்யவேண்டிய அவசியமில்லை. மனச் சாட்சிக்குக் கட்டுப்பட்டுத் தன் கடமையைச் சரிவரச் செய்பவன் பிறருக்கு அஞ்சத் தேவை யில்லை.

✲ ✲

மனிதனுக்கு உணவு இன்றியமையாதது. அனைவர்க்கும் உணவு கிடைக்கவேண்டும் என நினைப்பதும் அதற்காக முயல்வதும் உயர்ந்த பண்புகள். "தனியொருவனுக் குணவில்லை யெனிற் செகத்தினை அழித்திடுவோம்" என்று பாரதியாரும் பாடினர். ஆனால் ஒருவன், தன் மானத்தைத் தானஞ்செய்து மடிப்பிச்சை எடுக்கவேண்டும் என்றோ, தன் இனத்திற்கும் மொழிக்கும் துரோகஞ்செய்து வயிற்றை வளர்க்கவேண்டுமென்றோ பாரதியார் எந்த இடத்திலாவது கூறவில்லையே! மானமா? சோறா? என்ற பிரச்சனையில், பாரதியார் மட்டுமல்லாது, மனிதாபிமானம் மிக்க பெரியார்கள் அனைவரும் மானத்தின் பக்கமே நிற்கின்றார்கள்.

# அன்பார்ந்த நேயர்களே

வணக்கம் 'தைத் திருநாளாம் தமிழ்ப் பொங்கல் நன்னளில் நித்திய மகிழ்வுடனே நீடூழி வாழ்க' என உங்களை வாழ்த்துகின்றேம். வாழ்த்து மடல்கள் அனுப்பிய அன்பர்களுக்கு நன்றியையுந் தெரிவிக்கின்றேம்.

காலதாமதமின்றிக் 'கலைச் செல்வி" பொங்கல் மலரை உங்கள் கரங்களில் தவழவிட முடிந்ததை நினைத்து மகிழ்கின்றேம். பழையவர்களும் புதியவர்களும் சந்திக்கும் அரங்கமாக இம் மலர் திகழ்கின்றது. நிலவைப் பற்றிய நினைவையெழுப்பும் இராஜ—அரியரத்தினம் ஈழத்தில் எழுத்தாளர் பலரை உருவாக்கிய பெருமையுடையவர். அவர் அளித்த உற்சாகத்தினல் "ஈழகேசரி"யில் எழுத ஆரம்பித்த பலர் இன்று சிறந்த எழுத்தாளர்களாக விளங்குகின்றனர்கள் இலங்கை வானெலியில் தமிழ் நாடகப் பிரிவின் பொறுப்பாளராக இருந்து சமீபத்தில் ஓய்வுபெற்றிருக்கும் "சானு"வும் ஈழகேசரிப் பண்ணையில் வளர்ந்தவர், 1944ம் ஆண்டளவில் அவர் எழுதிய ஒரு நடைச் சித்திரத்தை இம்மலரில் மீண்டும் வெளியிடுகின்றேம். "தை பிறந்தது. ஆனல் எனக்கு வழி பிறக்குமா?" என்று கேட்பதுபோல அமர்ந்திருக்கும் ஒரு பெண்ணின் தோற்றத்தை இந்திய ஓவிய பாணியில் "சானு" வரைந்து நமது அட்டையை அணிசெய்கின்றனர் தமிழிலக்கிய உலகின் சிறந்த உருவகக் கதை எழுத்தாளராகிய சு. வே. தரும் "வனமுல்லை" வாசகர்களின் மனத்தில் மணம்பரப்பும் என்பதற்கையமில்லை. தமிழனின் பழம் பெருங் கலைகளைப்பற்றிச் சுவையான முறையில் ஆராய்ந்து விளக்கும் "கலைகளின் உறைவிடங்கள்" என்ற கட்டுரைத்தொடர் இம்மலரில் ஆரம்பமாகின்றது. கட்டுரை ஆசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், இலங்கைப் பல்கலைக் கழகத்தில் வடமொழி விரிவுரையாளராகப் பணிபுரிகின்றர். காலஞ்சென்ற கல்கியாசிரியரைப் போன்று, தன் எழுத்தாலும் பேச்சாலும் இந்தியாவையும் இலங்கையையும் இணைத்து வருபவர் "கல்கி" துணையாசிரியர் மணியன். அவர் போடும் "புதிய பாலம்" வழக்கம்போல் ஓர் இலட்சிய உலகிற்கு வாசகர்களை அழைத்துச் செல்லும். இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளராக விளங்குபவர் தேவன்—யாழ்ப்பாணம் அவருடைய நல்ல கதைகளுள் ஒன்ருகிய "கொடுத்துவைக்காத"வனைப் படிப்பவர்கள் கொடுத்துவைத்தவர்கள்! முன்பு "கலைச்செல்வி" நடாத்திய நகைச்சுவைக் கட்டுரைப் போட்டியில் முதலாம் பரிசைப் பெற்ற ரீ. பாக்கியநாயகம், க. பராராஜசிங்கம் ஆகிய இருவரும் தரமான நகைச் சுவைக் கட்டுரைகளை எழுதியுள்ளார்கள். சத்யன், யூ.செயின் ஆகியோர் வளர்ந்துவரும் எழுத்தாளர்கள். முன்னவர் சென்னையில் வாழ்கின்றர் இந்தியப் பத்திரிகைகள் பலவற்றில் எழுதியுள்ளார். பின்னவர் மட்டக்களப்பில் வாழ்கின்றர்; "புரட்சிமாறன்" என்ற புனைபெயரில் கவிதை எழுதுபவரும் இவரே. எம். ஏ. ரஹ்மான், அரசு வெளியீட்டின் நிர்வாகி; இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம் நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்றவர். ஒரு புதிய கோணத்தில் அவர் "நீதி"யைப் பார்க்கின்றர். திருக்குறள் கீர்த்தனைகளைப் போல், அருட்கவி விநாசித்தம்பி (சஞ்சீவி) யின் கீர்த்தனைகளும் "கலைச்செல்வி" யில் தொடர்ந்து வெளியாகும் "ஏன் மறைத்தேன் என் பெயரை?", 'கவிதைப் பொங்கல்"—ஆகியவை மலருக்காகத் தயாரிக்கப்பட்ட சிறப்பு அம்சங்கள். இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற சிறுகதையும் மலரில் வெளியாகின்றது. சென்

ளைக்குச் சென்று எழுத்தாளர் மகாநாட்டிலும் இசை விழாக்களிலும் கலந்துகொள்ளும் வாய்ப்பைப் பெற்ற ஷண்முக—குமரேசன் யாழ்-மத்திய கல்லூரியில் ஆசிரியராக இருக்கின்றார். அவருடைய கட்டுரை அடுத்த இதழில் வெளியாகின்றது.

நாவல் போட்டிக்கு வந்த நாவல்கள், ஈழத்து நீதிபதிகளின் பரிசீலனையின் பின், இப்போது "அகிலன்" அவர்களின் பரிசீலனையிலிருக்கின்றன. போட்டியின் முடிவுகளை இம் மலரில் வெளியிடலாம் என எண்ணியிருந்தோம். ஆனால் மலர் வேலைகள் முடியும்வரை அவரிடமிருந்து தகவல்கள் எதுவும் வரவில்லை. முடிவுகளை விரைவில் வெளியிட முடியும் என நம்புகின்றோம்.

காகிதத் தட்டுப்பாடு காரணமாக, மலர் வேலைகள் பாதிக்கப்பட்டுவிட்டது. நாம் எதிர்பார்த்த அளவிற்குப் பக்கங்களை அதிகரிக்க முடியவில்லை. மலருக்கென வந்த கதைகள், கட்டுரைகளை நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது. எம்.ஏ.எர். சுக்ரி எழுதிய "பாரசீக இலங்கி.யப் பூங்கா" பொ. சண்முகநாதன் எழுதிய நகைச்சுவைக் கட்டுரை, "பட் பட்", முதலியவை அடுத்த இதழில் வெளியாகும்.

சிறுகதை எழுத்தாளர்க்கு ஒரு நல்ல செய்தி. ஒவ்வொரு மாதத்திலும் "கலைச்செல்வி"யில் வெளியாகும் கதைகளுட் சிறந்ததற்கு 25/- ரூபா பரிசுகொடுப்பதெனத் தீர்மானித்துள்ளோம். புதுமையும், இனிமையும் நிறைந்த சிறுகதைகளைக் கவர்ச்சிகரமான மொழிநடையில் எழுதிக் கலை அலுவலகத்திற்கு அனுப்புங்கள். சித்திரைப் புதுவருட மலரிலிருந்து இத்திட்டம் அமுலாகும்.

வணக்கம்

—ஆசிரியர்.

## திருக்குறள் கீர்த்தனை 14

ஏரின் உழா அர் உழவர் புயல் என்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

இராகம்: ஹிந்தோளம். தாளம்: ஆதி

பல்லவி

மாரி மழை குன்றின் மாநிலத்தில் உழவர்
ஏரின் எழிலான தொழிலேது? — நன்

அனுபல்லவி

வாரி வாரிச் சொரிந்து வளங்கள் செழித்திடவே
வானின் அருள் எனவே வந்திங்கு வீழ்ந்திடும்.

சரணம்

உழுதிடார் உழவர் உணவும் இராதுலகில்
உள்ளவர் அனைவரும் உழன்று வருந்திடுவார்
பழுதிலாத் தொழில்களின் பண்புகள் மறையும்
புயலென வருமழை பயனுறப் பெய்யும்.

—யாழ்ப்பாணம் ந. வீரமணி




எந்த விளையாட்டிலென்றாலும் முன்நோக்கிச் சென்றால்தான் வெற்றியீட்டலாம். பின்னாலே செல்பவர்கள் தோல்வியடைய நேரிடும். ஆனால், ஒரு விளையாட்டில் பின் நோக்கிச் செல்பவர்கள் வெற்றியீட்டுவார்கள்; முன்னோக்கிச் செல்பவர்கள் முழுத்தோல்வியடைவார்கள். அந்த விளையாட்டு எது என்று குறிப்பிட முடியுமா?

(விடை, இப்பகுதியின் முடிவில்)

∴ ∴ ∴

கடந்த ஆண்டுகளில் திருமுறை விழாவையும், திருக்குறள் மகாநாட்டையும் சிறப்பாக நடாத்தி வெற்றிகண்ட வேலணைமக்கள் இவ்வாண்டு சித்திரை மாதத்தில், மிகப் பெரிய அளவில் முத்தமிழ் விழா ஒன்றை நடாத்த முயன்று வருகின்றார்கள். வேலணை முத்தமிழ்க்கலா மன்றத்தின் ஆதரவில் நடைபெறவிருக்கும் இவ் விழாவிற்குத் தமிழ் நாட்டிலிருந்து டாக்டர் மு. வ., பேராசிரியர் அ சீனிவாசராகவன், பி. ஸ்ரீ, பேராசிரியர் ந. சஞ்சீவி ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனராம்.

∴ ∴ ∴

பேராதனையிலுள்ள இலங்கைப் பல்கலைக் கழகத்திற் பயிலும் தமிழ் மாணவர்கள் சிலர், இக்காலச் சிறுகதை இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க தொண்டாற்றிவருகின்றார்கள். பல்கலைக்கழக மாணவர்கள் எழுதும் சிறந்த சிறுகதைகளைத் தொகுத்து, சிறுகதைப் பூங்கா, விண்ணும் மண்ணும் ஆகிய தொகுதிகளை முன்பு வெளியிட்ட அவர்கள், இவ்வாண்டில் காலத்தின் குரல்கள் என்ற தொகுதியை வெளியிடவிருக்கின்றார்கள்.

∴ ∴ ∴

கீழைத் தேசத்தவர்களிடம் மூடப் பழக்க வழக்கங்களும் மூடக் கொள்கைகளும் நிறைய இருக்கின்றன என்று பொதுவாகச் சொல்லிக்கொள்ளப்படுகின்றதல்லவா? இந்தக் கருத்தைப் பரப்பிவரும் ஆங்கிலேயர்களிடையேயும் பல அசட்டு நம்பிக்கைகள் இருந்துவருகின்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. மாடிப்படிகளில் ஏறும்போது ஒரு கன்னிப்பெண்ணுக்கு கால் இடறினால், அவளுடைய காதலன் அவளை நினைத்துக்கொண்டிருக்கிறான் என்று பொருள். ஒரு பெண்ணுக்குக் காதலன் இருக்கின்றானா இல்லையா என்பதை அறிய விரும்பும் அவளுடைய சிநேகிதிகள் அவளுடைய விரலைப் பிடித்து இழுப்பார்கள். நெட்டி முறிந்தால் அவளுக்குக் காதலன் உண்டு; முறியாவிட்டால், காதலனும் இல்லை.

∴ ∴ ∴

மானிட சாதியின் நன்மைக்காக விஞ்ஞானத்தைப் பயன்படுத்தவும் மனிதப் பிரச்சனைகளை பகுத்தறிவுக் கண் கொண்டு ஆராயவும் சிந்தனைச் சுதந்திரததைக் காக்கவும் இங்கிலாந்தில், பகுத்தறிவு வெளியீட்டு மன்றம் என்ற ஒன்று இயங்கிவருகின்றது. பிரபல

அறிஞர்களும் எழுத்தாளர்களும் உறுப்பினர்களாக விளங்கும் இம் மன்றத்தின தலைவராக ரஸ்ஸல் பிரபு பணியாற்றுகின்றார். இலங்கை எழுத்தாளர் ஒருவர் ஆங்கிலத்தில் எழுதிய ஒரு நூலை ஆழ்ந்து ஆராய்ந்த இம்மன்றம் அந்நூலுக்குத் தன் பூரண அங்கீகாரத்தையும் வழங்கியிருக்கின்றது. "விவிலியம், கடவுளின் வாக்கா?" என்ற இந்த நூலினை எழுதிய திரு டி. எஸ். இரத்தினநிக்கம், திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் ஆசிரியராகப் பணிபுரிகின்றார்.

∴ ∴ ∴

"கம்பரிடம் தீர்க்கதரிசனம் இருந்தது. இராமாயணத்தை வருங்காலத்தில் நாடகமாக நடிப்பார்கள். சீதை வேடதாரி, ஆணாக இருந்தாலும் சரி, பெண்ணாக இருந்தாலும் சரி பொய் மயிரை டோப்பாகவோ, சவுரியாகவோ வைத்திருப்பார். இராவண வேடதாரி, ஞாபக மறதியாக சீதையின் தலைமயிரைப் பற்றி யிழுப்பார். அப்போது டோப்போ, சவுரியோ கையோடு வந்துவிடும். இழுத்த வேகத்தில் இராவண வேடதாரி நிலை தவறிப் பின்னே விழுவார். இதன் பலனைப் பத்துத் தலைகளில், ஒன்பதும் பனங்காய்களாகச் சிதறிவிடும். இராமர் வந்து அந்தத் தலைகளைச் சித்திர இலக்கமாகக் கொண்டு அறுத்துத் தள்ளுவதற்குள், இராவணனின் தலைகள் மண்மீது உருண்டால், அது விபரீதம் அல்லவா? இதையெல்லாம் முன் கூட்டியே யோசித்த கம்பர், சீதாபகரண 'டெக்னிக்'கையே மாற்றி விட்டார்!

—'மகர'த்தின் நகைச்சுவை

∴ ∴ ∴

விடை : கயிறிழுத்தல்.

## தாயே சரணம்!

**-சஞ்சீவி-**

இராகம்: நாட்டை | தாளம்: ஆதி

**பல்லவி**

சஞ்சலம் தீர்க்கும் சஞ்சீவியே—மன
தாமரை மேவிய சாந்தசொரூபியே (ச)

**அனுபல்லவி**

அஞ்சலென் றருளும் அபயவ ரதங்காட்டி
ஆனந்தத் தாண்டவம் ஆடிடும்சீ மாட்டி (ச)

**சரணம்**

தொல்லுல கெங்கணும் சுகநிறைந் றுருவாய்
தூய, பர வெளியில், சோதியினுருவாய்
வல்ல முனிவர் பெறும் மாதவத் திருவாய்
வந்திடும் தாயேயுன் மலர்ப்பதம் தருவாய் (ச)

# நிலவே, நீ கேள்!

## இராஜ. அரியரத்தினம்

காதல் வாழ்வில் நிலவு முக்கிய இடம் பெறுகின்றது. தமிழ் சினிமாவிற்கூட பூரணசந்திரன் பால் பொழியத்தவறுவதில்லை! வெள்ளித் திரையில் காதற் சோடிகள் அதன் குளிர்மையை அனுபவிப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதில் இரசிகர்களுக்குக்குத்தான் எவ்வளவு இன்பம்.

தமிழ் மொழியில்அகப் பொருள் நூல்களுக்குக் குறைவேயில்லை. சங்கத் தமிழ் நூல்களும் கோவை நூல்களும் அகப் பொருட் சுவையுடன் இன்பத் தேன் பிலிற்றுவன.

இந்த வகையில் சந்திர விலாசம் என்னும் நூலும் ஒன்று. அந்நூல் பழனிப் பதியில்தோன்றிய மாம்பழக் கவிசிங்கநாவலர் அவர்களால் ஐம்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பெற்றது. 'சந்திரனைக் குறித்து எழுந்த நூலாதலால் 'சந்திரவிலாசம்என்ற' காரணப் பெயர் பெற்றுள்ளது.

அன்றொருநாள் பாட்டுடைத் தலைவனாகிய வேளுக்குறிச்சிவேலப்பதுரை மாலைவேளையில் பவனிவருகின்றார். அந்த அற்புதக்காட்சியைப் பார்ப்பதற்கு வீதியின் இருமருங்கும் ஒரே கூட்டம், கூட்டத்துடன் கூட்டமாக மங்கையர்களும் அந்தக்காட்சியைக் கண்டு களிக்கின்றனர் அவர்களுள் மங்கைப் பருவமடைந்த சித்தினி என்பவள் வேலப்பர் மீது காதல் கொண்டு மயங்கிவிடுகின்றாள்,

வேலப்பவேந்தன் அம்மங்கையின் மனத்துட் புகுந்து நின்று தனது உலாவை முடித்துக்கொண்டு மாளிகையைச் சென்றடைகின்றான்.

மாலையும் வந்தது அந்தி வானம் பூக்கின்றது மறுகணம் மெல்ல மெல்ல இருள்சூழுகின்றது. உள்ளத்தைப் பறிகொடுத்த மங்கை நல்லாள் இல்லம் சென்றடைகின்றாள்.காதல்நோயால் பீடிக்கப்பட்ட மங்கைக்கு உறக்கமே வரவில்லை. பார்க்கும் இடமெல்லாம் வேலப்பரின் உருவமே நீக்கமறத்தென்படுகின்றது. அப்போது குளிர் நிலவு தோன்றுவதைக் கண்டு அதனிடம் தனது ஆற்றாமையைத் தெரிவிக்கின்றாள். பின்பு துயின்றுஎழுந்து, தான் துயிலும் போது கண்டகனவை விரித்துரைக்கின்றாள். ஆமாம், நிலவுக்குத் தான்.

''நிலவே, நீ, கேள்! நான் துயிலும்போது கனவில் ஒரு பெண் தோன்றினாள். 'உனக்கு என்ன வேண்டும்' எனக்கேட்டாள். 'என் காதலரை அணையச் செய்யென்றேன்' அவள் என்குறிப்பு அறிந்து வேலப்பஏந்தல்பாற் சென்று என் மனநிலையை எடுத்துரைத்தாள். அவரும் 'அப்படியா? நல்லது? என்று சொல்லி ஏற்றுக் கொண்டார். நான் கழிபேருவகை கொண்டேன், ஆடை அணிகளை அணிந்து கலவைச் சாந்தை அள்ளிப் பூசிக்கொண்டு மலர் மெத்தையிற் படுத்திருந்தேன். எனதருமை காதலரும் வந்தார்...'

மனது கனிந்து கனவில் வந்த
  மகரா சேந்த்ரன் மலரணைமேல்
வலிதில்அடுத்தென் றனையெடுத்து
  மடியில் இருத்தி முத்தமிட்டுத்
தனது கரங்க ளாலுடம்பைத்
  தடவி வருந்தந் தனைத்தணித்துத்
தயவாய்ப் பேசிப் பரிமள சந்
  தனங்கள் பூசித் தார்சூட்டி
எனது சிவந்த வாய்க்கினிக்க
  ஏல இலவங் காதிகள் சேர்த்
திருந்த சுருளுந் திருந்தவளித்
  திட்ட மனைத்து நிறைவேற
உனது மதம்பின் னிடத்திடம் பெற்
  றேங்கும் புயவே லப்பதுரை
உசிதக கலவி செயத் தொடுத்தான்
  உலகின் அதற்கொப் பிலைநிலவே!

என்று இருவரும் பெற்ற இன்பத்தை நினைந்து நிலவைப் பார்த்து வாழ்த்துகின்றாள் மின்னற் கொடி போன்ற அம்மங்கை.


மாம்பழக் கவிச்சிங்க நாவலர் பாடிய இப்பாடலில் அழகு தவழ்ந்து நறுந்தேன் றனி சொட்டுகிறன் தல்லவா?


# கிருஷ்ண  பவான்

உரிமையாளர் : சி. ந. முத்துத்தம்பி
35, காங்கேசன் துறை வீதி, **யாழ்ப்பாணம்.**

- **சுவையான சிற்றுண்டிகள்**
- **சுத்தமான போசனம்**
- **குளிர்பானங்கள்**
- **பசும்பால்**

கல்யாணங்கட்கும் மற்றும் விசேட வைபவங்கட்கும் பலகாரங்கள் குறித்த நேரத்தில் ருசியுடன் செய்து கொடுக்கப்படும்.


உங்கள் மேனியின் மினுக்கத்திற்குப் புதுவாழ்வு
நவீன வாழ்க்கை முறை
மானது, தூசு, உஷ்ணம், வியர்வை ஆகியன
வற்றின் தாக்குதலிலிருந்து உங்கள் சரு
மத்தைப் பாதுகாப்பதற்கு, ஆரோக்கியத்தை
விருத்தி செய்யும் இயற்கையான எண்ணெய்
வகைகள் தேவை. ராணி சந்தன சோப், இந்
தப் பாதுகாப்பையளித்து, உங்கள் மேனியின்
மினுக்கத்திற்குப்புத்துயிர் ஊட்டுகிறது. ராணி
சந்தன சோப், சருமத்தை ஊடுருவிச்சுத்தி
கரிக்கிறது-மறந்து விடாதீர்கள்;
ஊடுருவிச் சுத்திகரிக்கிறது
ராணி
சந்தன
சோப்
இன்றே எழுதி,
ராணி பரிசுத்திட்டப்
புத்தகத்தைப் பெறுங்கள்
சுதேசி இன்டஸ்ட்ரியல் வேர்க்ஸ் லிமிட்டெட்,
தபாற் பெட்டி 21, கொழும்பு
GC/S/2

# பொய்யாகுமோ?

## -யூ. செயின்-

நிலவோடு உறவாடி நானிருந்து-என்
நெஞ்சத்து நினைவோடு பேசிக் கொண்டு
மலரோடு விளையாடும் நேரத்திலே - நீ
மதிமுகம் தந்தது பொய்யாகுமோ?

பெற்றவர் அறியாமல் ஓடிவந்து -- எனைப்
பின்வாசல் வழியாகத் தேடிவந்து
மற்றவர் காணாத நேரத்திலே - என்
மனத்தைக் கவர்ந்தது பொய்யாகுமோ?

உள்ளத்தி னுக்குள்ளே அன்புவைத்து -என்றும்
உந்தனுக்கே என்னை அடகுவைத்து
கள்ளம் இல்லாப் பெருங் காதலிலே - நாம்
கட்டுண்டு போனது பொய்யாகுமோ?

தென்றல் உனக்கு நற்றூது சொல்ல - நீ
தெம்மாங்கு பாடியே சேதி சொல்ல
முன்றில் மணலிலே பேசுகையில் - நான்
முத்தங்கள் தந்தது பொய்யாகுமோ?

வெல்லமாய் இனித்திடும் உன் மொழியில் - நான்
வெல்ல முடியாமல் விழிக்குகையில்
செல்லமாய்க் கிள்ளியே சிரித்திருந்து - உன்
செவ்விதழ் தந்தது பொய்யாகுமோ?

கனவிலும் நினைவிலும் கண்புகுந்தாய் - என்
கருத்து முழுதிலும் கலந்துவந்தாய்
மனத்தில் நிறைந்த என் மாதரசே - உனை
மறந்திடத் தான் எந்தன் மனம் வருமோ?

தெ
ன்
னி
ந்
தி
யா
வ
ம்

## 12. பாண்டியநாட்டு அரசியலில் சிங்களவர் தலையீடு-

கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் பாண்டிய நாடு இருபகுதிகளாகப் பிரிந்து இருந்தது. தென்பாண்டி நாட்டைத் திருநெல்வேலியைத் தலைநகராகக் கொண்டு சடையவர்மன் குலசேகர பாண்டியன் (1162) ஆண்டுவந்தான். அதே காலத்தில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டிய நாட்டின் வடபகுதியை பராக்கிரம பாண்டியன் ஆண்டுவந்தான். இவ்விருவருக்கும் அரசுரிமை காரணமாகப் பகைமை உண்டாயிற்று. குலசேகரன் மதுரையை முற்றுகையிட்டான். பராக்கிரமபாண்டியன் இலங்கையின் வேந்தனாகிய பராக்கிரமபாகுவைத் தனக்குப் படையனுப்பி உதவிசெய்யுமாறு வேண்டினான் அவனும் பாண்டியன் வேண்டுகோளுக்கிணங்கி, இலங்காபுரித் தண்டநாயகன் தலைமையில் பெரும்படையொன்றை அனுப்பினான். அச்சிங்களப்படை பாண்டிய நாட்டிற்கு வருவதற்குள், மதுரையை முற்றுகையிட்டிருந்த குலசேகரபாண்டியன் பராக்கிரமபாண்டியனையும் அவன் மனைவியையும கொன்று, அத்தலைநகரைக் கைப்பற்றிக்கொண்டான். இச்செய்தியை அறிந்த சிங்களப்படைத்தலைவன் பெருஞ்சினம் கொண்டான். இராமேச்சுரம், குந்துகாலம் என்ற ஊர்களைக் கைப்பற்றிப் பாண்டிய நாட்டைச் சிறிது சிறிதாகப் பிடித்துக்கொண்டுவந்த சிங்களப்படைக்கும் குலசேகர பாண்டியன் படைக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. போரில் பாண்டியன் இருமுறை தோல்வியுற்றான். இலங்காபுரித் தண்டநாயகன் வெற்றிபெற்று மதுரை மாநகரைக் கைப்பற்றினான். கொலையுண்ட பராக்கிரமபாண்டியனின் கடைசி மகனும், மலைநாட்டில் ஒளிந்து கொண்டிருந்தவனுமாகிய வீரபாண்டியனை அழைப்பித்து அவனைப் பாண்டிய நாட்டின் அரசனாக முடிசூட்டினான்.

சிங்களப்படைத்தலைவன் பாண்டிய தென்பகுதியில் இருந்த கீழைமங்கலம், மேலை மங்கலம் முதலான ஊர்களைப் பிடித்து அவற்றைக் கண்டதேவமழவராயன் என்ற பாண்டிய படைத்தலைவனுக்கும். தொண்டி, கருந்தங்குடி, திருவேகம்பம் முதலான ஊர்களைப் பிடித்து அவற்றை மழவச்சக்கரவர்த்தி என்ற பாண்டியர் படைத்தலைவனுக்கும் கொடுத்து ஆளுமாறு செய்தான். இவ்வாறு குலசேகரபாண்டியனின் படைத்தலைவர்களைத் தன்வயப்படுத்திக் கொண்டான்.

மீண்டும் குலசேகரபாண்டியன் போருக்குப் புறப்பட்டான். மேற்கண்ட படைத்தலைவர் இருவரும் தங்கள் அரசனான குலசேகர பாண்டியனோடு சேர்ந்து கொண்டனர். மூவரும் கூடி மதுரையைத் தாக்கினர். வீரபாண்டியன் மதுரை மாநகரை விட்டு ஓடினான். இதையறிந்த இலங்காபுரித் தண்டநாயகம் இலங்கையிலிருந்து தனக்குத்

துணைப்படை அனுப்புமாறு பராக்கிரமபாகுவிற்கு ஒரு கடிதம் அனுப்பினான். அவ்வரசன் சரத்விசயதண்டநாயகன் தலைமையில் ஒரு பெரும் படையை அனுப்பிவைத்தான். சிங்களப் படைத்தலைவர் இருவரும் சேர்ந்து குலசேகர பாண்டியனைத் தாக்கினர். குலசேகரன் புறமுதுகிட்டு ஓடினான். சிங்களப் படைத்தலைவர் இருவரும் மீண்டும் வீர பாண்டியனையே மதுரையின் மன்னனாக முடிசூட்டினர்.

சிங்களவரிடம் பன்முறை தோல்வியுற்ற குலசேகர பாண்டியன் கி. பி. 1167ல் சோழநாட்டிற்குச் சென்று, அப்போது ஆட்சிபுரிந்துகொண்டிருந்த இரண்டாம் இராசாதி இராசனைத் தனக்கு உதவிபுரியுமாறு வேண்டினான். சோழனும் அவன் வேண்டுகோளுக்கிசைந்தான். இராசாதி இராசன் ஒரு பெரும்படையைத் திருச்சிற்றம்பலமுடையான் பெருமானம்பிப் பல்லவராயன் தலைமையில் பாண்டி நாட்டிற்கு அனுப்பினான். சோழரின்படை சிங்களப்படையைத் தொண்டி, பாசிப்பட்டணம் முதலிய இடங்களில் தாக்கியது. இருதிறத்தார்க்கும் இடையே கடும்போர் நடந்தது. அப்போர்க்களங்களில் சிங்களப் படைத்தலைவர்கள் வெற்றி பெற்றனர். பிறகு நடந்த போரில் பல்லவராயன் சிங்களப் படைகளைப் புறமுதுகு காட்டி ஓடச் செய்தான். சிங்களப் படைத்தலைவர் இருவரையும் கொன்று அவர்களின் தலைகளை யாவருங்காணுமாறு மதுரைக் கோட்டை வாயிலில் காட்சிப் பொருளாக வைத்தான். குலசேகர பாண்டியனை மதுரையிலிருந்து அரசுபுரியுமாறு செய்தான்.

பராக்கிரமபாகு தனக்குண்டான பெரும் மானக்கேட்டைப் போக்கிக் கொள்ளுவதற்காகவும், சோழ பாண்டிய அரசர்களைப் பழிவாங்கவும் கருதினான். அதற்காக அவன் முயன்றுகொண்டிருப்பதை அறிந்த சோழனின் படைத்தலைவனான பல்லவராயன், இலங்கையின் அரசுரிமை பற்றிப் பராக்கிரமபாகுவோடு பகைமை கொண்டு சோழநாட்டிற்கு வந்து தங்கியிருந்த அவ்வரசனின் மருமகன் சீவல்லவனுக்கு ஆற்றல்மிக்க பெரும்படையை யுதவி, இலங்கையின் மீது படையெடுத்துச் செல்லுமாறு செய்தனன். ஈழநாட்டிற்குச் சீவல்லபனோடு சென்ற படை ஊருத்துறை, வலிகாமம், மட்டிவாழ் முதலிய ஊர்களிலே புகுந்து புலைச்சேரி மாதோட்டம் முதலிய ஊர்களை அழித்து, சில சிங்களத் தலைவர்களைக் கொன்று பெரும் பொருளுடன் சோழநாடு திரும்பியது.

இதனால் பேரதிர்வும் பேரிழப்புமுற்ற பராக்கிரமபாகு இனியும் வீரபாண்டியனை ஆதரிப்பதால் தனக்குத் துன்பமே உண்டாகும் என்பதை உணர்ந்தான். எனவே மதுரையிலிருந்து அரசாண்ட குலசேகரனை பாண்டிய மன்னனாக ஏற்றுக்கொண்டு, அவனோடு நட்புறவு கொண்டாடத் தொடங்கினான். அவன் சிலமதிப்புவாய்ந்த பொருள்

களை அன்புப் பரிசாகப் பாண்டிய னுக்குத் தூதர் மூலம் அனுப்பி வைத்தான். இதைக்கண்டு மகிழ்ந்த பாண்டியன் தனக்குதவியாக இருந்த சோழனுடைய உடன் பாட்டைப் பெருது, சிங்கள அரசன் அனுப்பிய பரிசுகளை மனமுவந்து பெற்றுக் கொண்டான். மேலும்சிங்கள அரசனி டத்துத் திருமணத்தொடர்பு கொள்ள விழைவதாகவும் தெரிவித்தான். மேலும் வேறு சில உள்நாட்டு விவகாரங்களில் சோழ மன்னனுக்கு வெறுப்புண்டாகுமாறு குலசேகரன் நடந்துகொண்டான், அதனுல் சினமுற்ற சோழன் குலசேகரனைப் போரில் வென்று வீரபாண்டியனுக்குப் பாண்டியநாட்டை அளித்து ஆண்டு வருமாறு செய்தான்.

## 13. இலங்கையின் மாட்சி

பராக்கிரமபாகுவின் பன்னிரண்டாம்ஆட்சியாண்டில்சிங்களவருக்கும் பெகுநாட்டினருக்கும் யானை வாணிகத்தில் தகராறு உண்டாயிற்று. மேலும்,காம்போசத்திற்கு(Cambodia) இலங்கையிலிருந்து அனுப்பப்பட்ட இளவரசியைப் பெகு நாட்டுப் படையினர் கைது செய்தனர். இவ்விரு காரணங்களால் பெருஞ்சீற்றம் கொண்ட பராக்கிரமபாகு பெரும் கப்பற்படையைத் திரட்டிக் கொண்டு சென்று பெகுவின் நகரமான குசுமியா (Cosmiu) வைத் தாக்கினுன். ஐந்து மாதங்கள் சிங்களவர் படை அங்கு முற்றுகையிட்டிருந்தது. பெகுவின் அரசன் கொலை செய்யப்பட்ட பிறகு இருநாடுகளும் ஓர் உடன்பாட்டிற்கு வந்தன. சிங்களப் படைத்தலைவனுக்குப் பரிசாக பெருநிலப்பரப்பு பெகுவினுல் கொடுக்கப்பட்டது. அக்கொடைக்காக வெட்டப்பட்ட கல்வெட்டொன்று கேகல்லா (Kegella) மாவட்டத்தில் உள்ள தேவநகலம் (Devanagala) என்னுமிடத்தில் ஒரு பாறையில் இன்றும்காணப்படுகிறது.

பராக்கிரமபாகுவினுடைய ஆட்சியின் பிற்பகுதி சிங்களத்தின் பொற்காலம் என்று போற்றத்தக்க சிறப்புடையதாகும். அவனுடைய காலத்தில் மூன்று கூட்டங்களாகப்பிரிந்து பூசல் விளைவித்துக் கொண்டிருந்த பௌத்தசமயத் துறவிகளைப் பெரிதும் முயன்று ஒன்றுசேர்த்தான். அவர்களிடையே ஓர் உடன் பாடு உண்டாகுமாறு செய்தான். இதனுல் புத்த சமயத்தினுள் புகுந்திருந்த தீய சக்திகள் களைந்தெறியப்பட்டன. பொலநறுவாவில் சமயக்குரவர்கள் தங்குவதற்காக பல மடங்களை அவன் அமைத்தான். அவற்றிற்கிடையே அவன் தூபிகளைக் கட்டினுன். மேலும் இலங்கையின் வடபகுதியில் ஒரு புத்தவிகாரத்தைப், பராக்கிரமபாகு கட்டியதோடு, அனுராதபுரத்திலிருந்த கோயில்களையும் புதுப்பித்தான்.

அவன் பொலநறுவா நகரைப் பேரழகும் பெருஞ்சிறப்பும் உடைய

### சரித்திரத் தந்தை!

என்னடா சரித்திரப் புத்தகம் சரித்திரப் புத்தகம் என்கிருய் தரித்திரமே! இங்கே இருப்பது போதாதோ?"

"அவைமுதலாம் புத்தகமும் இரண்டாம் புத்தகமுந்தானே. எனக்கு மூன்ரும் புத்தகமும் வேண்டும் அப்பா?"

"ஒன்றும் இரண்டும் மூன்று தானே!" —பொசன்

நகரமாக மாற்றியமைத்தான். பல அழகிய அரண்மனைகளையும் கட்டினான். அந்நகரின் பல பகுதிகளில் இன்பப் பூங்காக்கள் பலவற்றை அழகுற அமைத்தான். மேலும்வேளாண்மைக்கு உதவும் பொருட்டு நீர்ப்பாசன வசதிக்காக ''ஆகாய கங்கை'' எனப்படும் வாய்க்காலை வெட்டிப் பேருதவி புரிந்தான், பராக்கிரமன், பல புதிய ஏரிகளைக் கட்டியும், நாட்டிலிருந்த பல பழைய ஏரிகளைப் புதுப்பித்தும் நாட்டில் உழவுத் தொழில் சிறந்து விளங்குமாறு செய்தான் அவன் நாட்டின் ஆட்சி முறை அமைப்பை மாற்றிச் செம்மைப் படுத்தினான். இவ்வாறு பராக்கிரமனுடைய ஆட்சி சிங்களத்தினை சிறப்புறச் செய்தது. தாடியுடைய பெருந்தன்மை வாய்ந்த துறவி ஒருவர் ஓலைச்சுவடியைக் கையிலேந்திப் படிப்பதைப் போன்று காட்சி வழங்கும் $11\frac{1}{2}$ அடி உயரமுள்ள கற்சிலைஒன்று பொலநறுவாவில் காணப்படுகின்றது அச்சிலை பராக்கிரமபாகுவினுடைய உருவச் சிலையாக இருக்கலாம் என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாகும்.

பராக்கிரமபாகுவிற்குப் பிறகு சிங்களத்தில் அரசியல் குழப்பம் உண்டாயிற்று. அதைத்தக்கமுறையில் பயன் படுத்திக் கொண்டு நிசங்கமல்லன் என்ற சிற்றரசன் சிங்களத்தின் அரசனானான். அவன் கலிங்க நாட்டில் பிறந்தவன் என்றும், பராக்கிரம பாகுவின் மகளைத் திருமணம் செய்துகொண்டமையால்இலங்கையில் முடியேறினான் என்றும் கூறுவர். இவனுடைய முன்னோர்களின் சாதனைகளை எல்லாம் தன்னுடைய அரசியற் செயல்கள் என்று கூறிக் கொள்வதில் பெருவிருப்பமுடையவன் என்பதை அவனுடைய கல்வெட்டுக்கள் காட்டுகின்றன. இவன் சில தாதுகோபுரங்களைக்கட்டியதாகத் தெரிகின்றது. இவனுடைய காலத்தில் பாண்டிய நாட்டு ஆட்சியுரிமை காரணமாகச் சோழமன்னன் மூன்றாம் குலோத்துங்கனுக்கும் இவனுக்கும் போர் நிகழ்ந்தது. இவன் இராமேசுவரத்தில் 'நிசங்கேச்சுரம்' என்னும் கோயிலைக் கட்டியதாகப் பெருமை அடித்துக்கொள்ளுகிறான்.

நிசங்கனுக்குப் பிறகு அவனுடைய மாற்றாந்தாய் மகனான சாகசமல்லன் சிங்களத்தின் அரசனானான் அவன் கி. பி. 1200 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் இருபத்து மூன்றாம் நாள் முடிசூட்டிக் கொண்டான். இலங்கையின் வரலாற்றிலேயே முதன் முதலாக உறுதியாக வரையறுக்கப் பட்ட ஆண்டு சாகசமல்லன் ஆட்சிக்கு வந்த ஆண்டேயாகும்.

இலங்கையில் இவனுக்குப் பிறகு போரும் பூசலும் தாண்டவமாடின. நிலையாக ஆளக்கூடிய அரசர்கள் யாரும் தோன்றவில்லை. அரசமரபைச்சார்ந்த பல கிளையினரிடையே உண்டான பதவிப் போராட்டம் நாட்டின் அமைதியைக் குலைத்தது. இலங்கை மக்கள் அல்லற்பட்டு ஆற்றாது கண்ணீர்வடித்தனர்.

கி. பி. 1215ல் மக்கா (Magha) என்ற கலிங்க இளவரசன் கேரளத்து வீரர்களின் உதவியைப்பெற்று பொலநறுவாவில் தன் ஆட்சியை நிலைநாட்டினான். அவன் புத்தசமயத் துறவிகளைத் துன்புறுத்தியதால் வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கிறான். இவனது கொடுங்கோலாட்சி மக்களால் வெறுக்கப்பட்டது. இவனோடு, இலங்கையில் இருந்து ஆண்ட இலங்கை அரச மரபின் வரலாறு முடிவுற்றது.

(தொடரும்)

# உஷா

சத்யன்

தனுர் மாதத்தின் சிலுசிலுப்பை ஏந்திவந்த அதிகாலைக் காற்று ஜன்னல் ஓரமாகக் கட்டிலில் படுத்திருந்த உஷாவின் வதனத்தைத் தடவிச் சென்றது. முன் நெற்றியில் சுருண்ட கேசம் பட்டுப்போன்ற முகத்தைத் தடவிக் கொடுக்கும் ஆவலில் அசைந்தது. திடீரென்று விழிப்புக்கொடுக்கவே உஷா இமைகளை மெல்ல திறந்தாள். புலர்ந்தும் புலராத அக்காலை நேரம் மனதில் சிலிர்ப்பை ஏற்படுத்திற்று. மார்கழிமாதத்தின் சுகந்த மணத்தை ரசித்தபடி எழுந்து படுக்கையைச் சுருட்டினாள் அறையைத் தாண்டும் போது கண்களை நிரப்பும் அவள் வனப்பிற்கு அஞ்சலி செலுத்துவது போல் திரைச் சீலை மெல்ல அசைந்தது.

பல் துலக்கி, முகம் கழுவிக் கொண்டு தோட்டத்திற்கு வந்தாள் உஷா. இருட்திரை முழுதும் அகற்றப்பட்டாத நிலையில் பனிப்படலம் மெல்லப் படர்ந்தது. ஊரின் நடுவே உடலெல்லாம் நாமம் தரித்து நிற்கும் நாமக்கல் மலையையேபனிப்போர்வை மூடி மறைத்து விட்டது. மல்லிகைப் பந்தலின் அருகே வந்து நின்றாள் உஷா. நட்சத்திரக் கூட்டம் போல் மலர்ந்து கிடந்த பூக்களின் இதழ்களில் உருண்டோடத் தயாராய் நிற்கும் பனித்துளிகளில் தன்முகம் தெரிகிறதா என்று குழந்தையின் உற்சாகத்துடன் பார்த்தாள். பனித்திரையினூடே மிதந்து வந்த உஷை அவளைக் கண்டு பிரமித்தாள் வனப்பு மிக்க உடலின் செழுமை, பந்தல்காலைப் பிடித்திருந்த விரல்கள். இதயத்தைச் சுண்டியிழுக்கும் நீள்விழிகள் நெற்றியின் இருபுறமும் கொக்கி போல் வளைந்து நிற்கும் கேசச்சுருள், தளிருடலைச் சுற்றி இருக்கும் ரோஜா வண்ண 'ஷிபான்' சேலை இவற்றையெல்லாம பார்த்து பெருமூச்சு விட்டபடி அவளுடலைத் தடவிச் சென்றாள் உஷை. கிளுகிளுப்பான அந்த உணர்வை கண்களை மூடி ரசித்த உஷாவின் மனத் திரையில் மோகனின் எழிலுருவம் படர்ந்தது.

'இதோவந்துவிடுவார்". தன்னை அறியாமலே சற்று உரக்கக் கூறிவிட்ட உஷா நாக்கைக் கடித்தபடி சுற்றுமுற்றும் பார்த்தாள். நல்ல வேளை. யாரும் இல்லை. உள்ளத்தில் எழுந்த குறு– குறுப்பை அடக்கமாட்டாது பந்தலைப் பற்றிக் கொண்டு தலையைச்சாய்த்து உடலைவளைத்தாள். அவள் கன்னச் சிவப்பைக் கண்டு வெட்கி, தன்னை மேகத்திரையிட்டு மறைத்துக் கொண்டான் ஆதவன்.

"உஷா, உஷா" என்று உள்ளிருந்து குரல் வந்ததும், "இதோவருகிறேன் அத்தை" என்ற வண்ணம் துள்ளியோடினாள். பளிச் சென்ற முகத்துடன் தன்முன் நின்ற அவள் கன்னங்களைத் தட்டி, "காலங்காத்தாலை உன் முகத்தைப் பார்த்தாலே மனம் நிறைந்தமாதிரி இருக்கு' என அன்பு ததும்ப கூறிய அன்னம்மாள் அவள் கைகளில் காப்பி டம்ளரை வைத்து மாமாவிடம் கொடுக்கச் சொன்னாள்.

அத்தையின் வார்த்தைகளில் மனம் பூரித்து காப்பியுடன் வாயிலுக்

வந்தாள் உஷா. அங்கே சாய்வு நாற்காலியில் சாய்ந்தபடி பேப்பர் படித்துக் கொண்டிருந்த மகேஸ்வரனுக்கு முன்னால் ஸ்டூலை இழுத்துப் போட்டு காப்பியை வைத்தாள். அவளைப் புன்னகையுடன் பார்த்துவிட்டு காப்பி டம்ளரைக் கையில் எடுத்துப் பருக ஆரம்பித்ததும், உள்ளே போகத் திரும்பிய உஷா வண்டி வாசலிலே நிற்கும் சத்தம் கேட்டுத்திரும்பினாள் அங்கேதான் அந்தக் குதிரை வண்டி நின்றது. அதிலிருந்து எட்டிக் குதித்தான் ஓர் இளைஞன் நல்ல உயரம், சிவந்த உடல், அலை அலையான கிராப் இவற்றுடன் பளபளக்கும் கருநிற ஷுக்களின் கம்பீர ஒளியுடன் அலட்சியமாக நடந்து உள்ளே வந்தான்.

"அடேடே, வாடா மோகன்" என்று அன்புடன் வரவேற்றபடி எழுந்தார் மகேசுவரன். சப்தம் கேட்டு வெளியே வந்த அன்னம்மாளும்' "வாடாமோகன்" என்றாள் அன்புடன். மோகன் சிரித்தவண்ணம் "இப்பதான் வந்தேன், அதற்குள் என்னைப் பார்த்த மகிழ்ச்சியில் ஒரு சுற்று பருத்துவிட்டாயே அம்மா" என அன்னம்மாளின் ஸ்தூல சரீரத்தைக் கேலிசெய்தபடி நிமிர்ந்தவன் உஷாவைக் கண்டு திகைத்தான். கண்ணிமைக்காது அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த உஷா வெட்கினாள். அவன் திகைப்பை உணர்ந்த அன்னம்மா "என்னடா அப்படி பார்க்கிறே? டில்லியிலே இருந்தானே உன் மாமா, அவன் பெண் உஷா" என்றாள்.


"அட, உஷாவா? அப்போ பாவாடை கட்டிண்டு இருந்தா" என்று மோகன் சொன்னதும் "ஆமாண்டா புத்திசாலி, அப்போ பாவாடை கட்டிண்டிருந்தா இப்பவும் கட்டிக் கொண்டிருப்பாளா என்ன?" என்றாள் அன்னம்மாள். நாணத்துடன் உஷா உள்ளே ஓடிவிட்டாள். "போம்மா கிண்டல் செய்யிறியே" என முகம் சிவக்க மோகன் நகர்ந்தான்.

அன்னம்மாளின் அண்ணன் மகள்தான் உஷா. அவர் டெல்லியில் நல்ல வேலையிலிருந்தார். அடிக்கடி வரமுடியாவிட்டாலும் ஏதோ நல்லபடி இருக்கிறாரே என்று நினைத்து திருப்தியடையும்போது பேரிடி போல் வந்தது அந்தச் செய்தி. அண்ணி திடீரென்று காலமாகிவிட்டாள். மகேசுவரனும் அன்னம்மாளும் கிளம்பிப் போனார்கள். மோகனுக்குத் தேர்வுகாலமாக இருந்ததால் அவனால் போக இயலவில்லை. அங்குசென்றதும் அவர்களுக்கு மற்றொரு அதிர்ச்சி காத்திருந்தது. மனைவியைப் பிரிந்தது முதல் அந்த வேதனையில் நிலைகுலைந்த அன்னம்மாளின் அண்ணன், அலர்ந்த மலராக நின்ற உஷாவை அவர்களிடம் ஒப்படைத்துவிட்டு மனைவியைப் பின் தொடர்ந்தார். உஷா அந்த ஆண்டுதான் பி.ஏ. இறுதித் தேர்வு எழுதியிருந்தாள், தாயையும் தந்தையையும் கணப் பொழுதில் இழந்துவிட்டு கலங்கி நிற்கும் அந்தப் பெண்ணை அழைத்துக் கொண்டு நாமக்கல் வந்து சேர்ந்தார்கள் இடையே நண்பனுடன் பல ஊர்களையும் சுற்றிப் பார்க்கப் கிளம்பிவிட்ட மோகன், வட இந்தியக் கம்பனி ஒன்றில் நல்ல சம்பளத்தில் வேலை கிடைக்கவும் வீட்டிற்கு எழுதிவிட்டு வேலையில் சேர்ந்து விட்டான்

இதனால் உஷாவிற்கு அவனை நேரில் காண இயலாவிட்டாலும் புகைப்படத்தில் அவனது எழிலுருவைக்கண்டு இதயம் விம்மினாள்.

ஒரு வாரம் முன்பு வெளியான தேர்வு முடிவில் அவன் முதலாவதாக வெற்றி பெற்றிருந்ததால் வெளிநாட்டில் மேற்படிப்பு படிக்க அரசாங்கம் அவனைத் தேர்ந்தெடுத்திருந்தது. அதற்காகத்தான் வந்திருந்தான். முன்பெல்லாம் 'போர' டித்த அந்த ஊர் இப்போது மோகனுக்குச் சுவைத்தது. உஷாவின் கனிவும், எழிலும் அவனது இதய வீணையின் நரம்புகளை நளினமாகத் தடவின. அவளைக் காணும் போதெல்லாம் ஓர் இனிய கவிதையைத் தடிப்பது போல் நெஞ்சில் மகிழ்ச்சி பதும்பும் அவையெல்லாம் பாட்டாய் முகிழ்க்கும்.

மோகன் வெளிநாடு செல்லு முன் அவனுக்கும் உஷாவிற்கும் மணமுடிக்க விரும்பினாள் அன்னம்மாள். மோகனோ சற்று யோசித்துவிட்டு „இல்லையம்மா இரண்டு ஆண்டுகள் தானே என் படிப்பு. நிமிடமாக ஓடிவிடும். எனக்கு அவள், அவளுக்கு நான் என்பது உறுதியான பிறகு உங்களுக்கு ஏன் இந்தக் கவலை?" என்றான். உள்ளிருந்த உஷாவின் காதுகளில் அவன் சொற்கள் அமுதமாக விழுந்தன. ஆனால் இரண்டு வருடங்கள் பிரிந்திருக்க வேண்டும் என்று நினைக்கும்போது நெஞ்சம் கனத்தது. இமைகளுக்கிடையே கசிந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். அவள் உள்ளம் தன் வேதனையைப் பாடலாக்கியது




அடைமழையில் பெருக்கெடுத்த காட்டாறு போல் நாள் ஓடியது. அன்று மோகன் கிளம்பவேண்டிய நாள். புறப்படத்தயாரான மோகன் உஷாவைக் கண்டு விடைபெற

தண்ணீர் குடிக்கும் சாக்கில் உள்ளே சென்ருன். அங்கே அவளைக் காணுது போகவே தோட்டத்திற்கு வந்தான்.

அங்கே மல்லிகைப் பந்தலைப் பற்றியபடி சோகச் சித்திரமாக நின்றிருந்த அவளைக் கண்டதும் மனம் நெகிழ்ந்து "உஷா" என்ருன் பின்புறம் வந்து. உஷா சட்டென்று திரும்பி குனிந்து வணங்கினுள். அவளை அன்புடன் பற்றி நிறுத்தி, "உஷா, இரண்டே ஆண்டுகள். பிறகு பறந்து 'வந்துவிடுவேன்" என்று ஆறுதல் கூறிவிட்டு நகர்ந்தான். தன்னுயிரே தன்னுடலினின்றும் பிரிந்து கண்முன்னே நடப்பது போலுணர்ந்தாள் அப்பேதை. அவளின் இதயத்துடிப்பு கீதத்தின் ஒலித்துடிப்பாய் இழைந்தது.

காலத்தேவனின் கையில்ருந்த தூரிகை நாட்கள், வாரங்கள், மாதங்கள் என்ற வண்ணங்களைத் தீட்டிக்கொண்டே சென்றது. முதலில் ஓராண்டு வரை மோகனிடமிருந்து அருவிபோல் கடிதங்கள் வந்து குவிந்தன. உஷா, 'அன்புள்ள அத்தான் வணக்கம், என்று பதில் எழுதி நாணத்துடன் நாக்கைக் கடித்துக் கொள்வாள். ஆனல் நாளாக, ஆக மோகனிடமிருந்து வரும் கடிதங்களின் எண்ணிக்கை குறைந்து இறுதியில் நின்றே போயிற்று. மோகனின் பெற்ருேர் மகேசுவரனும், அன்னம்மாளும் கவலைகொண்டு எழுதிப் பார்த்தார்கள். பதிலில்லை. அவன் திரும்ப வேண்டிய நாளும் வந்துபோயிற்று' தகவலில்லை. உஷாவின் இதயத்தைக் கசக்கியது வேதனை.

அந்த நிலையில் அன்று வந்த கடிதம் ஒரு சூருவளியைக் கிளப்பி விட்டது. கல்கத்தாவில் வேலையாயிருந்த மோகனின் நண்பன் சேகர் தான் எழுதியிருந்தான். மோக



னுக்கு மற்றும் ஓராண்டு ஆராய்ச்சி இருப்பதாகத் தெரியவருவதாக எழுதியிருந்த அவன்,படிக்கப்போன இடத்தில் வில்லி என்ற ஆங்கில நங்கையை மணந்துகொண்டிருப்ப தாகத் தானறிவதாகவும் எழுதி யிருந்தான். மகேசுவரன் பதறிப் போனுர். சினத்தால் உடல் துடித் தது. அன்னம்மாவும், உஷாவும் அதைப் படித்தார்கள். "புஷ்பம் மாதிரி ஒரு பெண் ஏங்கிக்கொண் டிருக்கும்போது பாவி இப்படி செய்துவிட்டானே" என்று தலை யிலடித்துக்கொண்டார் மகேசுவரன். ஆனல் அன்னம்மாவோ, "சரி விடுங்கள். நமக்குப் பிள்ளை கிடை யாது, பெண்தானென்று இருப் போம். ஒரு பேதையின் மனதை உடைக்கிறவனுக்குத் தாயாக இருப்பதைவிட மலடியாக இருக் கலாம்" என்ருள். அவளு டைய திடமான வார்த்தையைக் கேட்டு மகேசுவரன் திகைத்தார். "இல்லை அத்தை,அப்படிச் சொல்லா தீர்கள். விரும்பியவளை மணக்க அவ ருக்கு உரிமையில்லையா? ஆனல் அவரையே கணவராக வரித்துவிட்ட நான் அவர் நினைவில் ஒன்றி வாழ் வேன்." உஷாவின் உறுதிமிக்க இச் சொற்களைக் கேட்டதும் அன்பு ததும்ப அணைத்துக்கொண்டாள் அன்னம்மா.

தன் துயரை மறக்க, உஷா ஆசிரியை பயிற்சியில் சேர்ந்தாள். அந்த ஊருக்கே ஆசிரியையாகவும் வந்துவிட்டாள். நாட்கள் உருண் டோடின. அவனைப்பற்றி ஒரு தகவ லும் இல்லை. மோகனைப்பற்றி நினைக் கும் போதெல்லாம் அவள் நெஞ்சம் சோககீதமிசைக்கும்.

அன்று பள்ளிக்குச் செல்வதற் காக வெளியே வந்த உஷா தங்கள் வீட்டிற்கெதிரே குதிரைவண்டி யொன்று வந்து நிற்பதைப் பார்த்து சற்று நிதானித்தாள். அதிலிருந்து இறங்கியவனைக் கண்டதும் திகைத் தாள்.

மோகன்தான் இறங்கினுன்.

அவனைக் கண்டதும், "ஹலோ, உஷா" என ஆர்வத்துடன் அழைத்தபடி நெருங்கினுன்."வாருங் கள்" என அழைத்துவிட்டு உள்ளே சென்ருள் உஷா. அப்பொழுது வெளியேவந்த மகேசுவரனும், அன் னம்மாளும் முகம் சுளித்தார்கள். மோகனே இதையெல்லாம் கவனிக் காது ஷூவை அவிழ்ப்பதில் ஈடுபட் டான். மகேசுவரனல் பொறுக்க முடியவில்லை. "எங்கே உன் வில்லி? அவளை அழைத்துவர தைரியமில் லையோ?" என்ருர்.

மோகன் சாவதானமாக நிமிர்ந் தான். "வில்லியா?யாரது?"என்ருன்.

"என்னடா விளையாடுகிருய்? இதற்கு அர்த்தம் என்ன?" என்ற படி அவன் நண்பன் சேகர் எழுதிய கடிதத்தைக் கொண்டுவந்து அவன் முன் எறிந்தார் மகேசுவரன்.

அந்தக் கடிதத்தைப் படித்துவிட் டுச் சிரித்தான் மோகன். "ஓஹோ இதுதான உங்கள் கோபத்திற்குக் காரணம்? உஷாவின் அன்பை சோதிக்க, என் நண்பனை விட்டு இப்படி எழுதச்சொன்னேன். இதில் ஒருவரிகூட உண்மையில்லை. ஏன் உஷா, நீ கூடவா நம்பிவிட்டாய்?" என்ருன் மோகன். அன்னம்மாவிற் கும், மகேசுவரனுக்கும் அவன் பதில் நெஞ்சில் பாலை வார்த்தது.

"இப்படித்தானு பரீட்சை செய்வது? பாவம் உஷா தவித்துப்போய் விட்டாள். அடுத்த முகூர்த்தத்தில் அவள் கழுத்தில் மூன்று முடிச்சு போடுடா" என்ருள் அன்னம்மாள்.

"நான் ரெடி" என்றபடி உஷா 'வை ஆர்வத்துடன் பார்த்தான். "நான் வருகிறேன்" என்றவண்ணம் அவள் செல்வதைக்கண்டு 'எங்கே உஷா?" என்ருன்.

"பள்ளிக்கு" என்ருள் உஷா.

"இனிமேல் எதற்கு? இங்கிருந்தே ராஜிஞமா கடிதம் அனுப்பி விடேன்" என்ருன் மோகன்.

உஷா அவனை உற்றுப் பார்த்தாள். "என்னை மன்னியுங்கள். எப்பொழுது என் அன்பில் சந்தேகம் வந்து சோதிக்கவேண்டும் என்று உங்களுக்குத் தோன்றிவிட்டதோ அப்பொழுதே நம் இணைப்பில் வலு குறைந்துவிட்டது. பெண்மைக்கு உரிய மதிப்பை உங்களால் தர இயலவில்லை. மணம்புரிந்தாலும் நம் வாழ்க்கையில் ஐயம் புகாதிருக்கும் என்று நான் எண்ணவில்லை. என் உள்ளத்தில் பதிந்த உங்களை தெய்வமாக பூஜிப்பேன். ஆனுல்...ஆனுல்" என்று தடுமாறிய உஷா, "சிறு குழந்தைகளின் புன்சிரிப்பில் நிம்மதி காண்கின்றேன்" என்றுவிட்டு நிதானமாக நடந்தாள்.

பெண்மையைச் சோதிக்க எண்ணிய ஆண்மை நிலை குலைந்து நின்றது!


# படிமுறை அட்சர கணிதம்

108 நாள்களுக்குரிய பாடவிதானமும் பயிற்சிகளும், விடைகளும் கூடியது.

பாடநூற் பிரசுரசபையின் அங்கீகாரம் 1967 டிசம்பர் வரை பெற்றது.

ஆக்கியோன்.

**A. J. ஆசீர்வாதம்** B. Sc. (Lond)

[ஆசிரியர் சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்]

6 ஆம் வகுப்புப் படிமுறை அட்சர கணிதம் - 1-60
7 " " " " " - 1-60

உங்கள் பிரதிகளுக்கு:-

## ஆசீர்வாதம்
## அச்சகம் சக புத்தகசாலை

32, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
(தொலைபேசி:- 274)

உருவகக் கதை

# நீதி!

எம். ஏ. ரஹ்மான்

அது வேதியன் வீட்டு ஆட்டுக்குட்டி. கழுத்திலே கட்டியிருந்த மணி, கிலுங்க, அந்த இன்பப் போதையிலே மயங்கி, வழி தப்பி விட்டது.

நீண்டநேரம் அலைக்கழிந்த அதை, ஒரு புலி சந்தித்தது. இளந் தசையின் சுவை மனதிலெழ, புலியின் நாக்கில் நீரூறிற்று.

“நான் வழிதப்பி வந்துவிட்டேன். வேதியன் வீட்டைக் காட்டுகின்றாயா?” என ஆட்டுக்குட்டி விநயமுடன் கேட்டது.

“நீ ஏன் வீட்டிற்குப் போக வேண்டும்?... உன்னை ஆண்டவன் எனது இன்றைய உணவாக அனுப்பியிருக்கின்றான்.”

“நீ முரட்டு மிருகமாக இருக்கின்றாயே... அன்புதான் வாழ்க்கையின் அடித்தளம். கொலை, ஆண்டவனால் வெறுக்கப்படும் பாவங்களுள் ஒன்று.”

புலி சிரித்தது; ஆட்டுக்குட்டி தொடர்ந்து பேசிற்று.

“புலால் உண்பதை மறுத்தலால் வரும் நன்மைகளைச் சொல்லுகின்றேன் கேள்... புல்லுங் குளையுஞ் சாப்பிட்டு வந்தால், சாந்தகுண மேற்படுகின்றது. சாந்தகுணமுள்ள மிருகங்களை மனிதர் பிரியமுடன் வளர்க்கின்றார்கள். உண்டிக் கவலையேயில்லை. அவர்களே வேளா வேளைக்கு உணவு தருவார்கள். சாப்பிடுதலும், உறங்குதலும் என இம்மையிற் சுகமாக வாழலாம்... மறுமையில், நித்திய இன்ப வாழ்வாம் சொர்க்கம் கிடைக்கின்றது.’’

புலி, முழக்கமாகச் சிரித்தது.

“குட்டி ஆடே! வேதியன் வீட்டு வாசம் உன்னைக் கெடுத்திருக்கின்றது. தன்னைப் பிறருக்காக அழித்துக்கொள்வதனாலேதான் சொர்க்கம் கிடைக்கின்றது... உனக்குச் சொர்க்கபோகத்தைத் தரவல்லவன் நான்தான். தாவர பட்சிணியாக இருப்பதனால் நீ சோம்பேறியாகி விட்டாய். உன் கழுத்திலே தொங்கும் மணி உனது அடிமைச் சின்னம்... அடிமையான உன்னிடம் அஞ்ஞானம் குடிகொண்டிருத்தல் வியப்பன்று. என்னை ஞானாசிரியனாக ஏற்றுக்கொண்டு, என் பின்னால் வா. உலக உண்மைகளைப் போதிக்கின்றேன்.”

“நீ என்னை ஏமாற்றப் பார்க்கின்றாய்”

“அப்படியன்று, நான் சத்தியஞ் செய்து தருகின்றேன். மிருகங்களுக்குப் பொய்பேசத் தெரியாது.”

புலி நடந்தது; ஆட்டுக்குட்டி பின்னாற் சென்றது.

“எங்கே செல்கின்றோம்?”

“அறிவுக் களத்திற்கு.”

சற்றுத்தூரம் நடந்ததும், புலி ஒரு மரத்தடியைக் காட்டிற்று.

மரத்தின் கிளையில், தலைகொய்யப்பட்ட ஆடொன்று தலைகீழாகத் தொங்கிற்று, இரண்டு மனிதர்கள் அதன் தோலை உரித்துக்கொண்டிருந்தார்கள்.

அக்காட்சியைக் கண்ட ஆட்டுக்குட்டி கதறி அழுதது.

"ஏன் அழுகின்றாய்?"

"அந்த ஆடு என் அண்ணன். நேற்றுத்தான் வேதியன் இவர்களிடம் விற்றான்."

ஆட்டுக்குட்டி தன்னைத் தேற்றுவதற்கு நீண்டநேரம் பிடித்தது.

"ஏன் அவர்கள் தலையை வெட்டித் தோலை உரித்து எங்களை ஆக்கினைக்குள்ளாக்குகின்றார்கள்."

"மனிதர்கள் தங்களுக்காகவே வாழும் சுயநலமிகள், தேவையில்லாத பகுதிகளைக் கழித்துவிட்டுச் சுவையான பகுதிகளை மட்டும் எடுத்து, வேகவைத்துச் சாப்பிடுவார்கள்,"

"இந்தச் சித்திரவதைக்குப் பின்னர் நெருப்பிலே வேகவேண்டுமா?"

நீண்டநேரம் மௌனம் நிலவியது.

"குட்டி ஆடே! என்ன யோசனை?"

"இந்த ஆக்கினைக்குள்ளாகாமல் மறுமை இன்பம் பெறுவதே மேல். நீ என் ஞானாசிரியன்," என்று ஆட்டுக்குட்டி புலியை வணங்கி நின்றது.


**Chandra Knitting Company**

HIGH CLASS HOSIERY MANUFACTURERS

யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்படும்
பெருமை மிகுந்த

**சந்திரா பெனியன், பெனியன் வகைகள்**

- ரீ ஷேட்
- ஸ்போட் ஷேட்
- பேபி சன் சூட்
- பேபி வெஸ்ட்
- ஸ்வெட்டர்ஸ்

முதலியவற்றையே கேட்டு வாங்கி உபயோகியுங்கள்

**சந்திரா நிட்டிங் கம்பனி**

(உரிமையாளர்: M. T. செல்லையா)

**64, பிறவுண் வீதி : யாழ்ப்பாணம்**

# புகை பிடிக்கும் கலை



எத்தனையோ கலைகளுள் ஒன்றுகப் புகை பிடிப்பதையும் சேர்த்துக் கொள்ளவேண்டிய அளவிற்கு இன்று இக்கலை கைவந்த கலையாகிவிட்டது. கையைப் பற்றிச் சொல்லும்போது தான் கைக்கும் இக்கலைக்கும் உள்ள நெருங்கிய தொடர்பு எனக்கு நினைவு வருகின்றது. புகைக்கும் சாதனங்களான பீடி, சுருட்டு என்பவற்றை இரண்டு விரல் இடுக்கில் பிடித்துக்கொள்வதில்தான் எத்தனை வகை? இக்காலக் கொண்டை வகைகளிலும் அதிகமாக இருக்கலாம் என்பதுஎனது கணக்கு.உதட்டு இடுக்கில் சிகரட்டைத் தொங்கவைப்பது ஒன்றும் சிரமமான காரியமல்ல, பற்றவைப்பதில் தான் இருக்கிறது சாமர்த்தியமெல்லாம். என் அனுபவத்தைச் சொன்னாலே போதாதா?

முதல் முதலாக நண்பன் வாங்கித்தந்த சிகரட்டை வாயில் வைத்தவுடனேயே அரைவாசிக்குமேல் முடித்துவிட்டேன். அதாவது எச்சிலில் ஊறி ஒரேயடியாக வாயில் அடைக்கலமாகிவிட்டது. பாதிச் சிகரட் நுனியில் நெருப்புக்குச்சியைத் தட்டி வைத்தபின் தான் நெருப்புப் பட்டது சிகரட்டிலல்ல; என்மூக்கு நுனியில் என்பது தெரியவந்தது. (இப்போதும் மூக்கிலென்ன கருப்பாயிருக்கு என்று கேட்பவர்களுக்கு நான் சமாதானம் சொல்வது இருக்கிறதே! அது ஒரு தனிக்கலை) இப்போதெல்லாம் கையில்வைத்துச் சீனவெடிகொழுத்துகின்ற மாதிரிப் பற்றவைத்து இழுக்கும் முறையைத்தான் பின்பற்றுகின்றேன்.

இந்தக் கலையின் பிறப்பிடம் அநேகமாகச் சினிமாத் தியேட்டர்களாகத்தான் இருக்கும். சின்னஞ்சிறு பையன்கள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு, இரண்டு கைகளுக்குள்ளும்

**க. பரராஜசிங்கம்**

சிகரட்டைப் பொத்திப்பிடித்துக்கொண்டு குனிந்த தலை நிமிராமல் புகையை இழுத்துக் கீழேயே ஊதிவிடும் கெட்டித்தனத்தைப் பார்க்கும்போதுதான் 'இவன் தந்தை என்நோற்றான்' என்ற வள்ளுவரின் தீர்க்கதரிசனம் என் நினைவுக்கு வரும்.

புகையிரதம் கண்டுபிடிப்பதற்கு ஏதோ 'தண்ணீர்க் கேற்றல்' காரணம் சொல்லப்படுகின்றது.என்னைப் பொறுத்தளவில் புகைபிடித்தல் தான் அக் கண்டுபிடிப்பிற்கு ஆதாரமாக இருந்திருக்கவேண்டும். ஆதிநாட்களில் குடுமியும் மீசையுமாக அநாகரிகமாக வாழ்ந்த தமிழர்கள் இன்று இந்த நிலைக்கு மாற்ற

மடைந்து விட்டமைக்கும் இப் புகை பிடித்தலே காரணமாக இருந்திருக்கிறது. நான் மூக்கைச் சுட்டுக் கொண்டதைப்போல் அவர்கள் தாடியை மீசையைத் தாமே எரித்துக் கொண்டிருக்கலாம்; குடுமியைப் பிறர் சுருட்டினுல் எரித்திருக்கலாம். இத் தொல்லையிலிருந்து தப்பவே அவர்கள் 'கிளீன்ஷேவ்' காரராக மாறியிருக்கவேண்டும். எனவே தமிழரது நாகரிகத்தை முன்னேற்றிய பெருமையில் பெரும்பங்கு புகை பிடித்தலுக்குண்டு. எங்களுடைய தமிழ்க் கிழவிகள் சுருட்டுப் பிடிப்பதைப் பார்க்கும்போதுதான் ஆங்கிலேயர் நாகரிகமடைய முன்னரே தமிழர்கள் நாகரிகமடைந்து இருந்தமை உண்மையென்பது விளங்குகின்றது. அதனுல் ஆங்கிலப் பெண்கள் புகைபிடிப்பதைப் பார்த்தால் கொப்பியடித்த கலை என்று எனக்குள்ளே முணுமுணுத்துக்கொள்வேன்.

புகைபிடித்தல் ஆரம்பமான காலம் நிச்சயமாக வள்ளுவர் காலத்துக்குப் பிற்பட்டுத்தான் இருக்கவேண்டும். ஏனென்ருல் எல்லாப் பொருளும் உள்ளதாகக் கூறப்படும் திருக்குறளில் இதைப்பற்றி ஒரு குறளும் இல்லை. அத்தோடு படங்களில் வள்ளுவர் தாடி மீசையோடு காட்சியளிப்பதும் என் ஆராய்ச்சியை உறுதிப்படுத்தும். சுருட்டுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை 'என்ற அக்காலப் பழமொழிதான் மருவி பிற்காலத்தில் கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்று திரிந்திருக்கவேண்டும்.

சிகரட் குடிக்கும் ஆண்களைப் பெண்கள் காதலிப்பார்கள் என்று கேள்விப்பட்டு சிகரட் குடிக்கப் பழகிக்கொண்ட என் நண்பன் ஒருவனின் கதை தெரியுமா? பஸ் ஸ்ரான்டில் நின்று வளையமாக புகைவிட்டுக் கொண்டு நின்ற அவனைப் பார்த்து ஒரு அழகான பெண் சிரித்திருக்கிருள். சிகரட்டின் மகத்துவத்தை நன்ருக உணர்ந்துகொண்ட அவன் மகிழ்ச்சியில் நெருப்புள்ள பக்கத்தை வாயில் வைத்துவிட்டான். அன்றைய அவமானத்தோடு அவன் முற்ருகக் கைவிட்டுவிட்டான் காதலிக்கும் எண்ணத்தை!

பலருடைய புகைத்தலையும் ஒப்புநோக்கி நான் கொண்டிருக்கும் முடிவு பல்லொன்றுமில்லாத கிழவர்கள்தான் சிறப்பாகப் புகை பிடிக்கிருர்கள் என்பது. சுருட்டை வாயில் வைத்துப் பற்றவைக்கும்போது, கன்னம் குழிவிழ 'பொப்—பொப்' என்று அவர்கள் எழுப்பும் சப்தத்தை வேறு யாராலும் ஏற்படுத்திவிட முடியாது, அதோடு நீண்ட


நமது புதிய விற்பனையாளர்கள்

வேல் ஸ்டோர்ஸ்.
நியூஸ் ஏஜன்ஸ்,
அச்சுவேலி.

வாசன் ஸ்டோர்ஸ்
நியூஸ் ஏஜன்ஸ்,
சாவகச்சேரி.


நேரம் புகைப்பவர்களும் அவர்கள் தான். சிலருக்கு வாயிலே சுருட்டு முளைத்திருக்கிறதோ என்று சந்தேகப்படும் அளவுக்கு எந்நேரமும் வாயில் சுருட்டு இருக்கும்.

நாளுக்கு நாள் எவ்வளவோ கண்டுபிடிப்புகள் இவ் உலகில் நிகழ்ந்தும், புகைபிடிக்கும் கலையை விருத்தியடையச்செய்ய நான் நினைப்பதைப்போல் யாரும் எதுவும் கண்டுபிடித்ததாகத் தெரியவில்லை. எந்தப் புகைத்தல் சாதனமாக இருந்தாலும் ஆரம்ப பயிற்சியாளருக்கு வசதியாகக் குறைந்தது ஒரு அடி நீளத்திலாவது செய்யவேண்டும். சின்னப் பையன்களுக்காக புகை வெளியேவராமல் புகைக்கக் கூடிய ஏதாவது கருவிகள் கண்டுபிடிக்கவேண்டும். களவாக அவர்கள் பீடி, சிகரட் குடிப்பதற்குப் படும் பாட்டைப் பார்க்கும்போது உடனேயே இதற்கு ஏதாவது கண்டுபிடித்தால் அவர்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பது தெரிகின்றது. சிகரட்டில் அரைவாசியைக் கடிக்காமலே சிலர் எச்சிலோடு சேர்த்து விழுங்கிவிடுகின்றார்களே! அவர்களுக்காக அடிப்புறத்தில் 'விற்றமின்' கலந்த சிகரட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டால் உடம்பாவது மிஞ்சும்.

இக் கலையை விருத்திசெய்யப் புகைத்தலைப்பற்றி அதிக விளம்பரம் செய்யவேண்டும். ஆனால் இக்காலத்தில் பீடி விளம்பரத்துக்குக்கூட அழகான பெண்களின் படத்தைப் போட்டுவிடுவதால். ஆண்களெல்லாம் அப்படியான பெண்களைத் தேடுகிறார்களேதவிர, பீடியைத் தேடுகிறார்களில்லை. நான் ஒரு 'அட்வைஸ்' மட்டும் கடைசியாகத் தருவேன்! அதாவது நல்ல படு கிழவர்களைத்தான் இப்படியான விளம்பரங்களுக்காக உபயோகப்படுத்த வேண்டும்.



# புதிய பாலம்



**மணிவண்ணன்**

சமூகத் தொண்டன் பொன்னம்பலம் நாயாக அலைந்தான். அலையாவிட்டால் முடியுமா? எடுத்துக் கொண்டிருப்பது எத்தனை பெரிய காரியம்? எவ்வளவு பெரிய பொறுப்பு? தொண்டு செய்வதும், பொதுக்காரியங்களுக்காக அலைவதும்தான் அவனால் செய்ய முடிந்த சுலபமான காரியங்கள். இதை இப்படிச் சொல்வதைக் காட்டிலும் பொதுத் தொண்டுகளுக்காக அலையாமலும், பாடுபடாமலும் இருக்க முடியாத ஆட்களில் அவனும் ஒருவன் என்று சொன்னால் சரியாக இருக்கும். அவன் சர்வசாதாரணமான ஏழை மனிதன்தான். பணத்தை வாரிவழங்க அவனால் முடியாது. ஆனால் உழைப்பை வழங்க முடியும். அந்தஉழைப்பு என்னும் குறையாத நிதியைச் சமூகப்பணிக்கும், பொதுக் காரியங்களுக்கும் செலவழித்துக் கொண்டிருந்தான் பொன்னம்பலம்.

வடக்குக் கரையில் உள்ள ஊரையும், தெற்குக் கரையில்உள்ள ஊரையும் ஓர் ஆறு குறுக்கே பாய்ந்து பிரித்துக் கொண்டிருந்தது. சிறிய ஆறுதான். வருடத்தில் எட்டு மாதங்களுக்கு மணல்தான் ஓடும். எஞ்சிய நான்கு மாதங்களிலோ இரு கரையும் மீறிக் கடுமையாகத் தண்ணீர் பாயும். இந்த ஆற்றுக்குச் சரியான பாலம் இல்லாமல் அக்கரை ஊர்க்காரர்களும், இக்கரை ஊர்க்காரர்களும் துன்பப்பட்டுக் கொண்டிருந்தனர். எவனோ சோழ அரசன் காலத்தில் கட்டின பழையகல்பாலம் ஒன்று ஊரிலிருந்து வெகுதூரத்துக்கு விலகிப் பத்தாவது மைலிலோ பதினைந்தாவது மைலிலோ இருந்தது. கரையோரமாகவே அந்தப் பாலம் வரைபோய்ச் சுற்றி வளைத்துஅக்கரை அடையலாமே என்றால் சுற்று வழிகாரணமாக அநாவசியமான காலதாமதம் ஆயிற்று. அந்த இரண்டுஊர்களுக்கும் வசதியாக ஊரை ஒட்டி ஒரு பாலம் இருந்தால் எவ்வளவோ நன்மையாக இருக்குமென்று எல்லோரும் விரும்பினார்கள். சமூகத் தொண்டன் பொன்னம்பலம் இந்த விருப்பத்தைவளர்த்தான்.

ஐந்தாண்டுத் திட்டம், சமூகவளர்ச்சித்திட்டம் கிராம நலத்திட்டம்என்று என்னென்னவோ

திட்டங்கள் போட்டிருக்கிறார்களே, அதற்கெல்லாம் இரண்டு ஊர் மக்களிடமும் கையெழுத்து வாங்கி விண்ணப்பம் அனுப்பினான் பொன்னம்பலம். பாலத்துக்கு அஸ்திவாரக்கல் போடுவதற்கு ஒரு மந்திரி. பாலம் முடிந்த பின் அதைத்திறந்துவைப்பதற்கு வேறொரு மந்திரி என்று வருவதைச் செய்தித்தாள்களில் நிறையப் படித்திருக்கிறான் பொன்னம்பலம். தங்கள் ஊர்ப்பாலத்தையும் ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொண்டு அரசாங்கத்தார் முடித்து வைப்பார்கள் என்று பொன்னம்பலம் கருதினான். ஆனால் அரசாங்கத்தாருக்குக் குருவிப்பட்டிக்குப் பாலம் போடமுயல்வதைவிடப் பெரிய வேலைகள் எல்லாம் இருந்தன. 'குருவிப்பட்டிக்குப் பாலம் போடாவிட்டால் இப்போது ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது' என்று பேசாமல் இருந்துவிட்டார்கள். எத்தனையோ, உள் நாட்டு வெளிநாட்டுப் பிரச்சனைகளைச் சமாளிக்க வேண்டிய தீவிரமான அரசியல் சூழ்நிலையில் குருவிப்பட்டியின் பாலத்தைப் பற்றி நினைவு வைத்துக்கொள்வதே கேவலமல்லவா? எனவே குருவிப்பட்டியிலும் அதன் எதிர்க்கரையிலும் உள்ள மக்களைத் தவிரக் 'குருவிப்பட்டிப்பாலம்' பற்றி வேறெவரும் நினைவு வைத்துக்கொள்ள மறுத்து விட்டார்கள்.

அதற்கென்ன செய்வது? அரசாங்கத்திலிருப்பவர்களுக்குக் கண்டதையெல்லாம் நினைவு வைத்துக்கொண்டு திரிய முடியுமா? தாங்கள் அரசாங்கத்தில் இருப்பதே சில சமயங்களில் மறந்து விடுகிறதே அவர்களுக்கு. ஆகவே குருவிப்பட்டியும் அதன் பாலமும் எக்கேடுகெட்டுப் போனால் என்ன?' என்று விட்டு விட்டார்கள்.

ஆனால் குருவிப்பட்டி வாசிகள் அப்படிவிடுவதற்குத் தயாராயில்லை. அந்தப் பட்டிக்காட்டு மனிதர்களிடம் உழைப்பு இருந்தது. தன்மானம் இருந்தது. தங்களையும், தங்கள் ஊர்ப்பாலத்தையும் பற்றித் தங்களிடம் ஓட்டு வாங்கிக்கொண்டு பதவிக்குப் போனவர்களே மறந்ததை அவர்கள் மன்னித்துத்தான் தொலைக்கவேண்டியிருந்தது. மன்னிப்பு என்கிற பரஸ்பர பலவீனம் இல்லாவிட்டால் இந்த உலகம்தான் என்றைக்கோ உருப்பட்டுத் தேறியிருக்குமே! எத்தனையோ அயோக்கியர்களையெல்லாம் சுலபமாக புண்ணிய பாவங்களின் பேர்சொல்லி மன்னித்து விட்டுக் குட்டிச் சுவராய்ப் போய்க்கொண்டிருக்கிற பெருமை இந்தப் பாரத நாட்டிற்குப் புதிதா என்ன?

குருவிப்பட்டிப் பெருமக்களும் அவர்களின் அன்புக்குரிய சமூகத் தொண்டனாகிய பொன்னம்பலமும் இறுதியாக ஓர் தீர்மானத்திற்கு வந்தார்கள். தங்கள் ஊர் ஆற்றின் குறுக்கே பாலம் போடுவதற்குத் தங்கள் ஊரைப் பற்றி அக்கறையும் நினைவும் இல்லாத அரசாங்கத்தை நம்பிப்பயன் இல்லை. ஒரு வேளை அரசாங்கத்துக்குத் தங்களுடைய ஆட்சியின் கீழே குருவிப்பட்டி என்று ஒரு கிராமம் இருப்பதே மறந்து போயிருக்கலாம். எனவே தங்கள் ஊர்ப்பாலத்தைத் தாங்களே அமைத்துக் கொள்வது என்ற திடமான முடிவுக்கு வருமாறு அவர்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளித்தவன்

பொன்னம்பலந்தான்!

ஊர்ப் பக்கத்திலிருந்த கருங்கல் குன்றிலிருந்து பாலத்துக்கான கற்கள் உடைக்கப்பட்டன. ஊர்ப்பொதுவில் ஒரு பெரிய சுண்ணும்புக் காளவாய் போட்டுக்காரை நீற்றினுர்கள். சில அவசியமான செலவுகளுக்காக இரண்டு ஊர்ப்பொதுமக்களிடமிருந்தும் பொன்னம்பலம் ஒரு நிதி வசூல் செய்திருந்தான். அதற்காகத்தான் அவன் நாயாக அலைந்து பாடுபட்டான், என்று தொடக்கத்தில் குறிப்பிட்டோம். இரண்டு கிராமத்து மக்களும், தங்கள் வேலைநேரம் போக எஞ்சிய நேரமெல்லாம் பாலத்துக்காக உழைத்தனர். ஆண், பெண், இளைஞர், முதியோர், வேறுபாடின்றி எல்லோரும் பாலத்துக்காகப் பாடுபட்டனர்.

ஏழெட்டு மாதங்களில் பாலம் முடிந்தது. மிகவும் நல்லவரான குருவிப்பட்டிப் பஞ்சாயத்துத் தலைவரைக்கொண்டு ஊரார் உழைப்பால் உருவான அந்தப் பாலத்தைத் திறந்துவைக்கச் செய்தான் தொண்டன் பொன்னம்பலம். எல்லோரும் பொன்னம்பலத்தின் உழைப்பைப் பாராட்டினுர்கள்.

விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட இரண்டு ஊர்மக்களும் அந்தப்பாலம் உண்டானதால் ஏற்பட்ட நன்மையை அனுபவித்தார்கள். ஏர் பூட்டிய உழவு மாடுகள், கட்டை வண்டிகள், வைக்கோல் வண்டிகள் எல்லாம பாலத்தின் வழியாக வந்து போய்க்கொண்டிருந்தன. இரு ஊர்களின் உறவும், பழக்கமும் பாலத்தால் நெருங்கிற்று. இரண்டு ஊர்மக்களும் விவசாயிகள் ஆதலால் பாலம் வண்டிகளின் போக்குவரவுக்கு மிகவும் பயனுள்ளதாகவும், இன்றியமையாததாகவும் இருந்தது.

குருவிப்பட்டிக்கு அப்பாலுள்ள பிரதேசம் வேறு மாகாணத்தைச் சேர்ந்தது. அங்கே மதுவிலக்கு இல்லை. குதிரைப்பந்தயம் உண்டு. எனவே குடிப்பதற்கும் குதிரைப்பந்தயத்துக்கும் பத்துமைல் சுற்றிச் சோழ அரசன் காலத்து கல்பாலம் வழியாகப் போய்க்கொண்டிருந்த பணக்காரர்கள் அது சுற்றுவழி என்று கருதி இப்போதெல்லாம் குருவிப்பட்டிப் பாலம் வழியாகப் போகத் தொடங்கினுர்கள். சமூகத் தொண்டன் பொன்னம்பலமும், ஊர்ப்பொதுமக்களும் கட்டின பாலம் ஏதோ சுய தேவைக்காகச் சுருங்கிய அளவில் கட்டப்பட்டிருந்தது.

முக்கியமாகக் கிராம மக்களின் தேவையை உணர்ந்து உழவு மாடுகளும், கட்டை வண்டிகளும், வைக்கோல் பார வண்டிகளும், போவதற்காகக் கட்டப்பட்ட அந்தப் பாலத்தில் இப்போது கார்களும், லாரிகளும் போகத்தொடங்கி விட்டதால் கிராமமக்கள் இடையூறு அனுபவித்தனர். கட்டை வண்டிகளும், மாடுகளும் ஊடே நுழைய நேரமே இன்றி அந்தப் பக்கமிருந்தும், இந்தப்பக்கமிருந்தும், லாரிகளும், கார்களும் மொய்த்தன. காத்திருந்தவன் பெண்டாட்டியை நேற்றுவந்தவன் கொண்டுபோனுனும் என்பதுபோல ஊர்க்காரர்கள் போட்ட பாலம், ஊர்க்காரர்களுக்குப் பயன்படாமல் கார்க்காரர்களுக்குப் பயன்படத் தொடங்கிவிட்டது. ஒருநாள் குதிரைப் பந்தயத்துக்குப் போய்விட்டுத் திரும்பிய பட்டினத்துப் பணக்காரர் ஒரு

வர் நிறையக் குடித்து விட்டுப் போதையோடு மிகப்பெரிய 'பியூக்' காரில் வந்தார். கார் குருவிப்பட்டிப் பாலத்தில் வரும்போது ஒரு கட்டை வண்டியில் மோதி வண்டிக்காரன் கீழே கார்ச் சக்கரத்தினடியில் விழுந்து நசுங்கி இறந்து போனன். இந்தச் சம்பவம் குருவிப்பட்டிக் காரர்களின் கண்களைத் திறந்தது. மறுநாள் முதல் அந்தப் பாலத்தில் கார்களையும், லாரிகளையும் விடுவதில்லை என ஊர்க்காரர்கள் எல்லோரும் சேர்ந்து மறியல் செய்தார்கள்.

குதிரைப் பந்தயத்தையும், குடியையும் நினைத்துக் கொண்டு ஆவலோடு குருவிப்பட்டிப் பாலத்தை நோக்கி வந்த கார்கள் மறியலின் காரணமாக ஏமாற்றத்தோடு திரும்பிப் போயின.

பாலத்துக்குள் நுழைகிற இடத்தில் சமூகத்தொண்டன் பொன்னம்பலம் இன்னும் நாலைந்து பேரைச் சேர்த்துக் கொண்டு நுழைய இடமின்றிக் கைகோத்து நின்றான். ஒரு பெரிய கார்க்காரர் அவர்களுடைய மறியலைப் பொருட்படுத்தாமல் இறங்கி வந்து கூப்பாடு போட்டார்.

"இது உன் அப்பன் வீட்டுப் பாலமில்லை. நீ யார் மறியல் செய்வதற்கு? அத்தனை 'மினிஸ்டரையும்' எனக்குத் தெரியும். ஒரு வரி எழுதிப் போட்டால் உங்களையெல்லாம் உள்ளே தள்ளிவிடுவார்கள்."

பொன்னம்பலம் அவருடைய பேச்சைக் கேட்டுக் கோபம் அடையவில்லை. அமைதியாகவே அவருக்குப் பதில் சொன்னன்.

"ஐயா! இது ஊர் மக்களின் உழைப்பால் உருவான பாலம். கட்டை வண்டிகளும், உழவு மாடுகளும் போவதற்காகத்தான் ஏழை விவசாயிகளாகிய நாங்கள் இந்தப் பாலத்தைக் கட்டினேம். இந்தப் பாலத்தைக் கட்டுவதற்காக அரசாங்கம் கால்பைசா எங்களுக்குத் தரவில்லை. இப்போதோ எந்நேரமும் கார்களும் லாரிகளும் இந்தப் பாலத்தை ஆக்கிரமித்துக் கொள்கின்றன. இரண்டு கிராமத்து வண்டிகளும் போகமுடிவதில்லை. நாங்கள் உழைத்ததன் பயன் வீணவதை எங்களால் மன்னிக்க முடியவில்லை. இரண்டு மூன்று நாட்களுக்கு முன் இந்தப் பாலத்தில் ஒரு கட்டை வண்டிக்காரன் காரில் நசுங்கி இறந்து போனன். இனியும் குடிகாரர்களுக்கும், குதிரைப் பந்தய வெறியர்களுக்கும் இந்தப் புனிதமான பாலம் பயன்படுவதை நாங்கள் அனுமதிக்கத் தயாராயில்லை."

"நான்சென்ஸ்! நான் யார் தெரியுமா? என்னிடம் இவ்வளவு திமிராகப் பேசுகிறாயே? நான் சுட்டு விரலை ஆட்டினல் இந்த நாட்டை ஆளும் அத்தனை மந்திரிகளும் ஓடி வந்து கைகட்டி நிற்பார்கள். தெரியுமா உனக்கு?"

"அது எனக்குத் தெரியவேண்டிய அவசியமில்லை ஐயா! இப்போது நீங்கள் இந்தப் பாலத்தின் வழியாகப் போகமுடியாது. வணக்கம். திரும்பிச் செல்லலாம் நீங்கள்" என்று பேச்சை முடித்தான் பொன்னம்பலம்.

அவனை முறைத்துவிட்டுக் காரில் போய் ஏறிக்கொண்டு திரும்பினர் அவர்.

மறியல் தொடர்ந்து நடந்தது. கட்டை வண்டிகளையும், உழவு மாடுகளையும் தான் பாலத்தில் போகவிட்டார்கள். கார்களையும், லாரிகளையும் போகவிடவில்லை. அதற்காகக் கார்க்காரர்களையும், லாரிக்காரர்களையும் கொடுமைப் படுத்தவில்லை. "இந்தச் சிறு பாலம் கிராம மக்களின் நலனுக்காக நாங்கள் போட்டது. தயவு செய்து இதை நாங்கள் விடாமலிருப்பதற்காக மன்னியுங்கள். சிறிது தொலைவுபோனால் கல்பாலம் ஒன்றிருக்கிறது. அது அரசாங்கத்துக்குச் சொந்தமான பொதுப்பாலம். அதை உபயோகப்படுத்துங்கள்"— என்று பணிவாகச்சொல்லி திருப்பி அனுப்பினார்கள்.

கார் வைத்திருப்பவர்கள் எல்லாம் பணக்காரர்கள். பணம் வைத்திருப்பவர்கள் எல்லாம் அரசாங்கத்துக்கு வேண்டியவர்கள். கேவலம் ஒரு பட்டிக்காட்டுப் பாலத்தில் போக முடியாது என்றால் சும்மா இருப்பார்களா? அவர்களால் ஆகாததும் உண்டோ? இருந்த இடத்திலிருந்தபடியே 'மினிஸ்டரோ'டும் 'ஹைவேஸ் கமிஷனரோ'டும் டெலிபோனில் பேசினார்கள். அந்தப் பட்டிக்காட்டான்கள் செய்யும் 'அக்கிரமத்தை'—எடுத்துக் கூறினார்கள்.

அதன் விளைவு? மறுநாள் குருவிப்பட்டிப் பாலத்தில் 'ஹைவேஸ் அதாரிட்டி'யோடு கூடிய விளம்பரப் பலகை ஒன்று தொங்கியது.

'இந்தப் பாலத்தின் வழியாக கார்கள், லாறிகள் தவிரக் கட்டை வண்டிகள் போகக் கூடாது. இது அரசாங்க உத்தரவு. மீறுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

இப்படிக்கு
கமிஷனர்.
அரசாங்க ஹைவேஸ் இலாகா

சமூகத் தொண்டன் பொன்னம்பலமும், ஊர்க்காரர்களும், மறியலை நிறுத்தவில்லை. அரசாங்க உத்தரவையும் எதிர்த்து மறியல் செய்தனர்.

சும்மா இருப்பார்களா அரசாங்கத்தார்? வண்டிவண்டியாக லாரி நிறைய ஸ்பெஷல் ரிசர்வ் போலீஸார் வந்து இறங்கினார்கள். அடிதான், உதைதான். அடி உதைக்குப் பயந்து பெரும்பாலோர் மறியலைக் கைவிட்டு ஓடிவிட்டனர். பொன்னம்பலமும் இன்னும் இரண்டு மூன்று ஆட்களும் மறியலை நிறுத்தவே இல்லை.

"இந்தப் பாலம் எங்கள் பிறப்புரிமை. இதை விட்டுக்கொடுக்க மாட்டோம். எங்கள் உழைப்பு எங்களுக்கே சொந்தம்" என்று கோஷமிட்டான் பொன்னம்பலம்.

"போடுடா அவன் மண்டையிலே." முரட்டுப் போலிஸ்காரன் ஒருத்தன் அவனை அடித்தான்.

மண்டையிலிருந்து குருதி ஒழுகக் கீழே வீழ்ந்தான் பொன்னம்பலம். பிரக்ஞை தவறியது.

மறுபடி அவன் தன் நினைவுற்றுக் கண் திறந்து பார்த்தபோது பாலத்தில் கார்களும், லாரிகளும் சுகமாகப் போய்க்கொண்டிருந்தன.

"இந்த உருப்படாத சமூகத்துக்கு இதுமாதிரிப் பாலங்கள் இன்று தேவை இல்லை. ஏழைகளுக்கும் நியாயத்துக்கும் நடுவிலிருக்கிற தூரத்தை இணைக்க முதலில் ஒரு புதியபாலம் போடவேண்டும். அதைக் கல்லாலும், காரையாலும் போட முடியாதே! "என்று முணுமுணுத்துக்கொண்டே எழுந்து தள்ளாடி நடந்தான் அவன்.

# கொடுத்து வைக்காதவன்

## தேவன் - யாழ்ப்பாணம்

அவளுடைய அந்த வெண்மையான, நீண்ட கழுத்து இன்றும் எனக்கு ஞாபகமிருக்கிறது. அதை வெட்டி, ஒரு அசைப்பு அசைத்தாளானால் சபை முழுவதும் திக்குமுக்காடும. ஆனால் இன்று பளிங்குச் சிலையினுடையதைப்போல் அசைவு, உயிரோட்டம் எதுவுமின்றி நிலையாக நின்றது. உணவை உட்கொண்டால் கண்ணாடிக்கூடாகத் தெரிவதுபோல் அந்தக் கழுத்தினுள் தெரியும். அதை அழகு என்று சொல்லவா? அழகு தான, கவர்ச்சிதான். சீ! நானும் ஒரு மனிதனா? என் நண்பனின் மனைவியினுடைய கழுத்தைப்பற்றி இவ்வளவு சொல்கிறேனே! அதுவும் அவனுடைய சாவீட்டில் அவளைக் கண்ட கோலத்தில் வர்ணிக்கிறேன் என்றால் மன்னிக்கமுடியாத குற்றந்தான். ஆனால் என் கண்களை என்ன செய்ய?

ஆடாமல் அசையாமல் ஒரு தூணில் சாய்ந்தவாறு வடிந்துகொண்டிருந்த ஒரு துளிக் கண்ணீரைத் துடைக்காமல் நடப்பதெல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு அவள் நின்றாள். ஒருவேளை துடைத்துவிட்டால் புதிய துளியொன்று வராமலே விட்டுவிடுமோ என்ற அச்சம் காரணமாயிருக்கலாம். முதல்நாள் பூசிய முகப்பூச்சில் வாய்க்கால் கரைத்து வந்த அந்தத் துளியும் கன்னத்து மேட்டில் நின்றுதோள்மீது குதிக்கவா வேண்டாமா என்று தயங்குவது போல் நின்றுவிட்டது. உதட்டுச் சாயம் தன் சிவப்புத்தன்மையை இழந்து, வெளிறி, வெடித்து அலங்கோலமாயிருந்தது. 'ஐயோ' என்று அலறிஅழுது துயர்தீர்க்க பாழாய்ப்போன பணமும் அந்தஸ்தும் விடுவதில்லையே!

அவளைத் தொட்டுத் தாலிகட்டிய அவன் 'பாங்க்'கில் உயர்பதவி வகித்தவன். மாதம் இரண்டாயிரம் ரூபாவுக்குமேல் சம்பளம் வாங்கியவன். அவன் என்று சொல்ல எனக்கு— மாதம் கேவலம் நூற்றியெண்பது ரூபா—பஞ்சப்படி சகலதும் உட்பட— உழைப்பவனாகிய எனக்கு என்ன உரிமையிருக்கிறது? பாடசாலையில் சிறுவயதில் ஒன்றாகப்படித்த உறவு, உரிமை அவ்வளவுதான். நாலு பெரிய மனிதர்கள் நிற்கிற இடத்தில் நான் அவனைத் தெரிந்துகொண்டவனாக காட்டிக்கொள்வதேயில்லை. தனிமையில் சந்திக்கும்போது நெருங்கிப் பழகுவோம். 'நீ...நீங்கள்' என்று நான் திணறும்போது அவன் தனக்குள்ளேயே சிரித்துக்கொள்வதை என்னால் உணரமுடிந்தது.

பின்னேயென்ன? நெடுக ஒட்டியே இருந்தோமா? இறுதியாக—அவனுடைய கல்யாணத்துக்குப்பிறகு— அதுவும் இந்த நான்குவருடங்களாகத்தானே பழைய உறவை நெருக்கமாகப் பிணைத்துக்கொண்டோம். அவனுக்குக் கல்யாணமாகி— ஐயோ, பாவம்! அவனுடைய தாம்பத்ய வாழ்வு ஐந்துவருடம்வரைதானே நீடித்தது! அவள் பாவம் என்று இரக்கப்படவேண்டுமென எனக்குத் தோன்றவில்லை. அவனைத்தான் நினைத்துக் கலங்குகிறேன். நாற்பத்தியேழு வயதைத் தொட்டுவிட்ட அவன் சாவா, அல்லது இருபத்தியாறு வயதிலேயே விதவையாகிவிட்ட

அவளா பரிதாபத்துக்குரியவர்கள்? ஆம். வாழ்க்கையின் பெரும்பாகத்தை பிரமச்சாரியாகவே கழித்துவிட்டு திடீரென தன்னிலும்பார்க்க பாதிவயதேயான ஒரு பெண்ணைத்தான் அவன் கட்டிக்கொண்டான். என்னைப்போல யாராவது அப்படிச் செய்திருந்தால் ஊர் நாக்கெல்லாம் உளறித் தீர்த்திருக்கும். ஆனால் அவன்......

ஒருவரோடும் சோலி சுரட்டுக்குப்போகாமல், தானும் தன்பாடுமென, குடி முதலியவற்றில் ஈடுபடாமல், பெண்கள் சகவாசமின்றி, ஒழுக்கமாய் வாழ்ந்தவன். வசதிகள் நிறைய இருந்தும் வழுக்கிவிடாமல் இருந்தவன். அந்த மதிப்பு ஒருபக்கம். அவனுடைய இரண்டாயிரம் ரூபா சம்பளம் மறுபக்கம். யார் துணிந்து பேசுவார்கள்?

அவள் ஒரு நடனமங்கை.

எப்பொழுதோ நடந்த ஒரு நடன நிகழ்ச்சியைப் பார்க்கச் சென்றவன்—ஏதோ நிதிக்காக அவன்மீது கட்டியடிக்கப்பட்ட சீட்டை உபயோகித்துவிட்டு— காரை எடுத்துக்கொண்டு புறப்பட்டவன் பக்கத்தில் நின்ற கார் 'மக்கர்' பண்ணுவதை அவதானித்து "ஏன்? எங்கே போகவேண்டும்? யார்?" என்று கேட்டுவிட்டான். அன்று அவன் காரிலேறி வீட்டுக்குச் சென்ற அந்தப் பெண் அவன் இதயத்திலேறி வீட்டுப் படியும் ஏறிவிட்டாள். 'மேக்-அப்'புடன் வந்து காரில் ஏறிய அப் பெண்ணின் கலகலப்பான சிரிப்பு, சரசரத்த பட்டுடை, காலில் ஒலித்த சலங்கை, உடல் முழுவதும் வியாபித்துகாரையும நிறைத்த சுகந்த வாசனை, ஒவ்வொரு ஒளிக்கம்பத்தையும் தாண்டிச்செல்லும்போது பளபளத்த அவள் பல்வரிசை... எல்லாம்... மறுநாள் காரைத் திறந்தபோது 'குப்'பென அடித்த மல்லிகை, முல்லை வாசனை...

அவள் இன்று அழுதுகொண்டு நிற்கிறாள். அவன் பிணமாய்க் கிடக்கிறான். ஏன்? 'இப்படித்தான். ஹார்ட்...' என்றார் ஒருவர். 'இந்த வயதில்தான் கவனமாயிருக்கவேண்டும். ஸ்ட்ரோக்...' என்றார் இன்னொருவர். 'கொரோ நறி துறெம்போஸிஸ்' என்றார் வேறொருவர். மனிதன் மாண்டுவிட்டான். அதற்கு ஒரு காரணமா? பெயரா?வைத்திய நிபுணர்கள் மண்டையைப்போட்டு உடைத்து, உடலைப் பிளந்து, கீறிக்கிழித்துப் பார்த்துவிட்டு சொல்வதுதான் காரணமா?

கல்யாணமாவதற்கு முன்னால் காரில் வீட்டிற்குவருவான். காவல்காரன் கதவைத் திறந்துவிடுவான். 'பைல்'களைத் தூக்கிக்கொண்டுவந்து வேலையாள் உள்ளே வைப்பான். சமையல்காரன் காப்பியைக் கொண்டுவந்து மேசைமீது வைப்பான். இரவு சாப்பாட்டுநேரமானதும் மேசைக்கு எல்லாம் தயாராய் வந்துவிடும். தானே விருப்பமானதைப் போட்டுச் சாப்பிடுவான். என்றாவது 'பெண்ணொருத்தி இதையெல்லாம் பார்த்துச் செய்தால்...' என்று நினைத்திருப்பானோ, யாருக்குத் தெரியும்? கல்யாணமான பிறகு நிலைமை மாறவில்லை. எல்லாம் அப்படியேதான் நடந்து வந்தது.

அவனுடைய தாகம அவளுக்குத் தெரியவில்லை. ஆரம்பத்தில் இருவரும் ஒன்றாகவே சாப்பிட உட்கார்ந்தார்கள். அவரவர் பரிமாறிக் கொண்டார்கள். 'உங்களுக்கு இது பிடிக்குமே, கொஞ்சம் போடட்டுமா?'

என்று அவள் ஒரு நாளும் கேட்டதில்லை. அவளுக்கு சமைக்கத்தான் தெரியாதென்றாலும் மேசையிலிருப்பதை பரிமாறக்கூடத் தெரியவில்லை. புதிதில் ஞாயிற்றுக் கிழமைகளை அவளுக்கென ஒதுக்கி வைத்து, காரில் ஊர்சுற்றியதும் உண்மைதான். அதுவும் வெகுநாள் நீடிக்கவில்லை. சங்கம், கிளப், கூட்டம், நடனம், ஒத்திகை, பயிற்சி — இப்படி அவள் பொழுது போயிற்று. அவன் 'பாங்க்' கிலிருந்து திரும்பியதும் 'அம்மா வீட்டிலே தானு, வெளியே போய் விட்டாளா, என்பது தெரியாமலே மணித்தியாலங்கள் ஊர்ந்து விடும். கடைசியில் படுக்கையிலாவது இரவில் ஒன்ருகப்படுத்து எழுந்தார்கள் என்பதில்லாமலாகிவிட்டது. சிலசமயம் அவன் 'பைல்' களுடன் மல்லாடி விட்டு படுக்கப்போகும் போது அவள் உறக்கத்தில் மூழ்கியிருப்பாள். அலுப்பாயிருக்கிறதே, இன்று வேளைக்குப் படுப்போமே, என்று நினைக்கிற நாட்களில் அவள் எங்காவது வெளியே போயிருப்பாள். எங்கேயோ விடுதிச்சாலையில் இருவர் வாழ்வது போல ஆகிவிட்டது, அவர்கள் வாழ்வு. கடைசியில் மனைவி எப்போது முழுகினுள் என்பது கூடத் தெரியாமல் வாழ்ந்த அதிசய மனிதன் அவன்.

அப்படியானுல் ஏதாவது பூச்சி, புழு? அதுதானே வேடிக்கை. கல்யாணமான சில நாட்களுக்கெல்லாம் அவள் முழுகாமலிருந்தாள், அப்புறம் மூன்றுமாதத்தில் 'அபோர்சன்' ஆகிவிட்டது. கொஞ்சநாள் நலுங்காமல் அசையாமல் படுக்கை, சிசுருஷை அப்புறம்தான் இப்படி திசை திரும்பியதோ? இன்று அவள் வாரிசு இல்லாமலே இறந்துவிட்டான். சாகும் போது, ஒருவேளை, அதை நினைத்துப் பார்த்தானே? கொள்ளிவைக்க வாவது. சீ! அப்படியெல்லாம் கவலைப் படுகிறவனல்ல அவன். கவலைப்பட்டானே, இல்லையோ, வெளியில் காட்டிக்கொண்டதில்லை. ஆனால் ... ? ஆமாம். ஒருநாள் என்னிடம் 'உனக்கு எத்தனை குழந்தைகள்?' என்று கேட்டான். கல்யாணமாகி எட்டு வருடத்தில் ஆறு பிள்ளைகளைப் பெற்ற என் வீரப் பிரதாபத்தைச் சொன்னதும் 'நீ குடுத்துவைச்சவன்' என்ருன். அவனிடமிருந்து 'குடுத்து வைச்சவன்' என்று சொல்லக்கேட்டது ஒரிருதடவைகளில் மட்டுமல்ல.

அவனுடைய வாழ்க்கையில் எத்தனையோ விருநதுகள், கொண்டாட்டங்கள் வந்துபோயின. முன்னைப் போல் தனியனுகவே கலந்து கொணடவன். அவளுடைய நடன நிகழ்ச்சிகள் எத்தனையோ நடைபெற்றன. அவன் அவற்றையெல்லாம பார்த்தான் என்று சொல்லமுடியாது. இந்த நாட்களில் என்னல் அவனுடைய போக்கில் ஒரு புதுமையைக் காணமுடிந்தது. ரோட்டில், கடற்கரையில் இளம் தம்பதிகள் கை கோத்துச்செல்வதைக் கண்டால் கண் கொட்டாமல் பார்க்க ஆரம்பித்து விட்டான். தெருவில் போகும் பெண் குழந்தைகளையும் கூர்ந்து அவதானிக்கத்தொடங்கினுன். தீய எண்ணம் அவன் மனதைத்தொட நியாயமில்லை. யார் வாழ்வை மண்ணுக்க வளருகிருளோ என்று மனதுக்குள்ளேயே நினைத்துக்கொள்வான். போலிருக்கிறது. பெண்வர்க்கத்தின் மீதே அவநம்பிக்கையும் வெறுப்பும்

அவனுக்குப் பிறந்துகொண்டிருந்ததோ?

வெகுநாட்களுக்குப் பிறகு அவன் வீட்டுக்குப் போனபோது அவன் குடிப்பழக்கத்துக்கு ஆளாகி வருவதைக்கண்டேன், காசு நிறைய முடியவில்லை. எல்லாம் மேல்நாட்டு குடிவகை. விலையுயர்ந்த சரக்கு. உயிரையா கொண்டுபோய்விடும்? வழியற்றவர்கள் கண்டதைக் குடித்துப் பாழாகிறார்கள். அவன்...? இக்கால நாகரீகமாகவும் கூட்டத்தில்— அதுவும் அவன் அந்தஸ்துடையவர்



உள்ளவன் குடிக்கட்டுமே, குடி கெட்டுவிடுமா என்று சும்மா இருக்கவும் முடியவில்லை. நண்பன் என்று உறவு கொண்டாடுகிறேன். கண்டித்து ஒருவார்த்தை சொல்லவும்



கள் மத்தியில்— குடிக்கத்தெரியாதவன் மிருகமாகவும் கருதப்படுவதுண்டல்லவோ!

மாலையில் வீட்டுக்குவந்தால் அவனைச்சுற்றி சில சஞ்சிகைகள். நிர்வாணமாக வாழ்கிறார்களாமே

எங்கோ, அவர்களைப்பற்றிய படங்கள், செய்திகள் நிறைந்தவை படிக்கிறான், படம் பார்க்கிறான், அவற்றுள் சில அவனுக்கே புரியாத பிரஞ்சுமொழியில் வெளியானவை, இவையெல்லாம் அவன் கோணலான வழியில் போகவிரும்பாமல் மன இச்சைகளுக்கு விடுதலையளிக்க கண்ட மார்க்கங்கள் போலும்.

'பாங்க்'கில் கடன் வாங்கும் விஷயமாக ஒரேயொரு தடவை அவனிடத்துள்ள என் உரிமையை என் சுயநலத்துக்காகப்பயன்படுத்தினேன். அப்போது என் மனைவியும் கூடவே வந்திருந்தாள். எனக்குப் பின்னாலேயே அவள் நாணிக் கொண்டு நின்றதும், உலகத்தைத் தாங்குகிறவள் தானே என்ற நினைப்பில் இடையிடையே என் காதில் அவள் ஊதிய ரகசியச் சடங்குகளும், வெளியே அவன் கேட்டதற்கெல்லாம் 'அவர் சொன்னால் சரிதான்' என்று போட்ட பத்தினிவேஷமும் அவனை உள்ளே என்ன செய்ததோ? மழுப்பலாகச் சிரித்தான். 'குடுத்துவைச்சவன்' என்று முணுமுணுக்கிறான் போலிருந்தது. நாங்கள் அவனைப்பார்க்கச் சென்றபோது அவள் வீட்டில்தானிருந்தாள். வெளியே வரவுமில்லை என் மனைவியைப் பார்க்கவுமில்லை. எனக்கு அதெல்லாம் பொருட்டாகப் படவில்லை. ஆனால் அவனுடைய நெஞ்சை அந்த அலட்சியம் உறுத்தியிருக்கும் என்பதில் எனக்கு சந்தேகமில்லை.

ஒரேயொரு தடவை அவன் வீட்டுக்கு நான் சென்றபோது அவளைக் கண்டேன். அதுவும் அரை நிர்வாணக் கோலத்தில். எங்கோ வெளியேபோக உடையணிந்து கொண்டிருந்த பாதியில் குறுக்கே வந்துவிட்டாள். கொஞ்சமாவது கூச்சப்படவேண்டுமே, கிடையாது. நான் மிகவும் கீழாக மதிக்கப்பட்டவன். எனக்கு முன்னால் அப்படித் தோன்றுவது அவளுக்கு வெட்கமாயிருந்திருக்காது. தனக்கு சமதையான யாருக்காவது முன்னால் அப்படி வந்திருப்பாளா என்பது சந்தேகம். சமுதாயத்தின் கீழ்ப்படியிலிருப்பவர்கள் ஒருபோதும் அரை நிர்வாணக் கோலத்தைப் பொருட்படுத்துவதில்லை. பொதுக்கிணற்றில் குளிப்பவர்கள்தானே! உயர்படியில் இருப்பவர்களும் கூடிக் குடித்துக் கும்மாளமடிக்கும் வேளையில் நெகிழும் ஆடைகளைச் சரி பார்ப்பதில்லையே. மேல்படியும் கீழ்ப்படியும் சந்திக்கிற இடத்திலும் இந்த நாண உணர்ச்சி சில வரையறைகளைத் தளர்த்திவிடுகிறது. குழந்தைக்குப் பாலூட்டும் தாயை தெருவோரத்தில் பார்த்ததில்லையா? மற்றது இதோ அவள் என்முன்— வேலைக்காரர்முன்— ஆனால் இந்த நடுத்தரவகுப்புத்தான் எல்லாவற்றுக்கும் வேலிபோட்டுக்கொண்டு அவஸ்தைப்படுகிறது.

மாசு மறுவற்ற தேகம். ஓரிடத்தில் ஏதாவது பிசகு, லயக்குறைவு தென்படவேண்டுமே அவளை— அல்ல, அவளழகை—குறைசொல்ல இடமேயில்லை. அவன் ஏன் அப்படிப் போகிறான்?

எத்தனையோ தடவை [illegible]ன் வீட்டுக்கு வந்துபோயிருக்[illegible]ன். அவன் என் வீட்டிற்கு வ[illegible]லை. வரவில்லையே என்று நான் [illegible]ங்கி

யதுமில்லை. அதெல்லாம் நன்ரு யிருந்திருக்காது. ஆனுல் சாகப் போவதை முன்கூட்டியே தெரிந்து தானே, என்னவோ சில தினங் களுக்கு முன்பு ஒருநாள் அவனு டைய பெரிய கார் என் குச்சுஒழுங் கை வழியே வந்துவிட்டது. என் வாசலில் நின்றும்விட்டது. நான் தடுமாறி என் மனைவியிடம் காப்பி போடச்சொல்லுமுன் 'எனக்கு ஒன் றும் வேண்டாம். சும்மா பார்த்து விட்டுப்போக வந்தேன்' என்று என்னை மீட்டான்.

என் கடைக்குட்டியை தூக்கி வைத்துக்கொண்டு'வாரியா, கடைத் தெருப்பக்கம் போய்விட்டு வரு வோம்' என்ருன் 'சரி மாமா' என்று தலையை அசைத்தாள் அவள். மாப் பிள்ளைகள்தான் பணக்கார மாமனுர் வேட்டையாடுவார்கள் என்பதில்லை. என் கடைக்குட்டியும் முன்பின் காணுத அவனிடம் 'மாமா' என்று ஒட்டிக்கொண்ட மர்மம்? கிடக் கிறது... திரும்பிவரும்போது கை நிறையச் சட்டைகள், படப் புத்தகங் கள், பொம்மைகள்! அதில் ஒரு பொம்மை 'பற்றறி'யில் வேலை செய் வது. 'சுவிட்சை'த் தட்டிவிட்டால் ஆடும்பொம்மை. என் குழந்தையு டன் இருந்து கொஞ்சநேரம் விளை யாடிக்கொண்டிருந்தான். 'நீயும் இந்தப் பொம்மைமாதிரி டான்ஸ் ஆடுவியோ? உனக்கு அதெல்லாம் வேண்டாம்' என்ருன். பின்பு போய் விட்டான்.

இப்போது இந்த உலகத்தை யே விட்டுப் போய்விட்டான் பிரே தத்தைப் பெட்டியில்வைத்து மூடப் போகிருர்கள். உலக ஒப்பினைக்கா கப்போலும் தன் கழுத்திலிருந்த தாலியை அவனுடைய மார்பில் கழற்றிவைத்துவிட்டு அவளும் இரண்டுதுளி கண்ணீரைச் சுண்டி விட்டாள். பிரேத ஊர்வலம் புறப் படுகிறது.

வாசலில் நின்று திரும்பிப் பார்க் கிறேன். இந்த பங்களா, கார், அவனுடைய பென்ஷன், காப்புறு திப்பணம், அவனுடைய சொத்து... எல்லாம்... அவள் கொடுத்துவைத் தவள்தான், தலைமுறை தலைமுறை யாக நிம்மதியாக காலந்தள்ளப் போதும். கொடுத்துவைத்தவள்!

ஆனல் அவன்...?

—O—

மனமாதி கரணங்கள் மனுவாதி சொன்னவழி
மறுகா துயிர்ப்பு நல்கத்
தனமாதி செல்வங்கள் தனியாயுனக் கிறைவன்
தருமாறு தந்துமகிழ
கனவாதை செய்யவரு காமாதி பாவங்கள்
கண்மூட நீ விளங்கி
சனகாதி முனிவர்வழி தவமாகி வளருங்கிளி
சப்பாணி கொட்டியருளே.

—பருவங்காண் படலம், சாகுந்தலம்.

# பரியாரி பரமர்

**- சாளு -**

பரியாரி பரமர்என்றால் பாம்பு படுத்துறங்கும், விஷம் விட்டிறங்கும். எங்களூரில் இவரைத் தெரியாதவர்கள் இல்லை. சிறுவியாதி சிரங்குமுதல் கடும் வியாதி காய்ச்சல் வரை தோன்றியதற்கும் மறைந்ததற்கும் இவர்தான் காரணகர்த்தா. பேதிக்குக் கொடுப்பதில் பெரும் பெயர் வாய்ந்தவர், கைபிடியில் கைதேர்ந்தவர், கண்வைத்தியத்தில் கடும் பண்டிதர், மாட்டுவைத்தியத்தில் மகா நிபுணர்.

தமிழறிவுள்ளவர், பரமபக்தர், புராணத்திற்குப் பயன் சொல்வதில் புகழ்பெற்றவர். ஆன்மாக்கள் நல்வினை தீவினைக்கு ஈடாகப் பிறந்து இறந்து உழலுவது என்பர் சித்தாந்த சாத்திரிகள். ஆனால் எங்களூரில் பரியாரி பரமரை அறியாமல் ஒருவர் சுகமாகப்பிறந்ததுமில்லை, சுகமாக இறந்ததுமில்லை. நன்மையாகவோ தீமையாகவோ எதுதான் நடந்தபோதிலும் பங்குபற்றுவார் பரமர். மானிப்பாய் இணுவில் போன்ற பெரும் ஆஸ்பத்திரிகளில் சந்தேகப்பட்டவர்கள் இவரிடம் வருவார்கள். இவரும் சந்தேகப்பட்டால் மறு உலகம்செல்வார்கள். இவர்செய்தபாவம் யாதோ அறியோம், இவர் மனைவி நாற்பத்திரண்டாவது வயதில் உயிர்துறக்க, தனது மூத்தமகனைச் சிங்கப்பூருக்கு அனுப்பிவிட்டு, இளையவனைத் தன்னுடனேயே வைத்துக் கொண்டார். பிற்காலத்தில் ஒருவன் இல்லாவிட்டால், பரம்பரைக் குணம் பாழாகிப் போய் விடுமல்லவா?

சிங்கப்பூரிலிருந்து கிரமமாகப் பணம் வந்து கொண்டிருந்தது. அதைக் கொண்டு துத்தம் துருசு, பெருங்காயம் முதலிய மருந்துச் சரக்குக்களை வாங்கி தனது தொழிலைச் சீராக நடத்தி வந்தார். கலியாணவீடு சாவீடுகளில் தனது மகன் அனுப்பிய பச்சைக் கம்பளிப் போர்வையுடன் பிரசன்னமாவார். வெள்ளிப் பூண்போட்ட பிரம்பு கையில்; ஒரு சோடிசெருப்பு கால்களில்; நாலுமுள வேட்டி அரையில், மருந்துச் செப்பு மடியில், இவைகளெல்லாம் ஒருங்கு திரண்டு வடிவமெடுத்தவர் தான் பரியாரி பரமர். மழைகாலம் பனிகாலங்களில் மகன் அனுப்பிய 'காக்கிச் சட்டையை முதுகுப்பக்கத்தில் பூட்டத்தக்கதாக அணிந்து திரிவார். இப்படியணிந்தால் நெஞ்சில் குளிர் பிடியாது என்பது இவர் கொள்கை. இக்காலங்களில் இவருக்குத் தொய்வு தோன்றும். தனது வைத்தியத்தில் அதிகம் நம்பிக்கையில்லாதபடியால் பள் வல்லியைக் கொண்டே வைத்தியம் செய்விப்பார். வல்லி இவரது கையாள்.

⁂

தேவையான சகல மூலிகளையும் வேர் விராய்களையும் பரமருக்கு



உதவி வந்தவர் வேலர். மருந்துரைத்தல், குளிகை உருட்டல் முதலிய பெரும் தொண்டுகளையும் வேலர் ஆற்றிவந்தார். பரமர் நினைத்தால்போதும் வேலர் செய்து முடிப்பார். பரமர் இல்லாவிட்டால் வேலர் இல்லை. வேலர் இல்லாவிட்டால் பரமர் இல்லை. அவ்வளவாக ஒருவரை ஒருவர் அறிந்து அதற்கேற்றவாறு நடந்துவந்தார்கள். 'சினிமா' மடுவங்களிலும், நாடகக் கொட்டகைகளிலும் இருப்பது போல, பரமர் வீட்டிலும் மூன்று வித ஆசனங்கள் உண்டு...இல்லை... மூன்று ஆசனங்கள்தான். சாய்வு நாற்காலி பரமருக்கு. பதிந்தவாங்கு வேலருக்கு, தரை வல்லிக்கு.

⚜ ⚜ ⚜

நெஞ்சடைப்பு, வயிற்றுக் கோளாறுகள் போன்ற கழுத்துக்கு கீழேயும் அடிவயிற்றுக்கு மேலேயும் உள்ள சேஷ்டைகள் எல்லாவற்றிற்கும் பெருங்காயக் குளிகை. சருமத்தில் உண்டாகும் புண், சொறி சிரங்கு, குட்டை, வேர்க்குரு, கரப்பன் முதலிய நோய்களுக்கு துத்தம் துருசு வெளிப் பூச்சு.

"துத்தமும் துருசு மாருப்
புண்ணுடன் சுவாச காசம்
பத்திரமான கண்ணிற்
படலமே காசம் போக்கும்
உத்தம மான வேல
முறு வாந்தி விக்கல் வெப்பு
மெத்திய சுரமே யீழை
வீட்டுமென் றுரைப்பர் சித்தர்"

என்று சில நேரங்களில் வாகடம் பாடுவார் பரமர். துத்தம் துருசு சேர்ந்த ஒளஷதங்களை மூன்று பெரும் போத்தல்களில் அடைத்து வைத்திருப்பார். ஒன்று ...துத்தம் துருசு முக்காற்பங்கு, நீர் காற்பங்கு. இரண்டு...துத்தம் துருசும் நீரும் சமபங்கு. மூன்று...துத்தம் துருசு காற்பங்கு நீர் முக்காற்பங்கு. சிங்கப்பூரிலிருந்து மூத்தவன் அனுப்பிய கறள்பிடித்த 'ரொட்ஜர்ஸ்' கத்தி, சாவணம், காம்புச் சத்தகம் முதலிய வெட்டுக் கொத்து ஆயுதங்களும் இவர் வசம் எப்பொழுதும் இருக்கும். வேறுபல மூலிகைகளையும் வேர் குழைகளையும் என்ன செய்வதென்று அறியாதவராய் முற்றத்தில் பரப்பிவைத்திருப்பார். இவரின் வைப்புச்செப்பு இவ்வளவுதான். இவைகளைக் கையில் வைத்துக்கொண்டு வேலரின உதவியால் தீவிர பரிகாரம் செய்து வந்தார் பரமர்.

⚜ ⚜ ⚜

புண் வைத்தியமென்ருல் அயலூரிலிருந்தும் அழைப்பார்கள். விதம் விதமான வியாதிகளுக்கு விதம் விதமான வைத்தியம். பிறபொருள் உடம்பில் நுழைந்து கண்ணுக்கெட்டிய தூரத்திலிருந்தால் சாவணம் கொண்டு பிடுங்கி, இதரை வாழைப் பொத்திப் பாலை வெளியில் பூசி, அதே பூவில் வறைசெய்து பத்தியமுமென்பார். நாய்கடி, பூனைகடி, எலிகடி முதலிய கடிகளுக்கு முருங்கையிலை அரைத்து, சுண்ணம்பு கலந்து சாத்துவார். பாம்புகடிக்கு வேப்பிலைகையில் கொண்டு உருக்கொண்டு சந்நதமாடி மந்திரிப்பார்,

"வெட்டலாற் கால்கை யூறு
மிகு நகச் சுற்றினலே
தட்டிடு கொதிப்பே யாதி
சார்ந்திடி லுப்பு மஞ்சள்
மட்டதாயரைத்து நீரில்
வளமுடன் கரைதீ வைத்தே
சுட்டிட வெடுத்துச் சீலை
தோய்க்கக்கட்டாறு மன்றே"

என்று குரலெழுப்பி, அனுபவித்து இராசமாலிகையில் பாடி

ஞரென்றால், நகச்சுற்று, நோயாளி யை மூன்றுதரம் வலம் வந்து விடை பெற்றேகும்.

⁂

இவர் சொல்லிய முறையில் பத்தியம் வைத்துக் கொடுப்பதென் றால், சமையல் செய்கிறவர்களுக்குப் பயித்தியம்தான். இதற்கும் பரியாரி பரமர் மருந்து செய்வார். நோயா ளிகளின் பிறந்த தினம், நேரம், நட் சத்திரம், லக்கினம் முதலியவைகளை அறிந்து, பழம் பஞ்சாங் கங்களைப் புரட்டி குறிப்பெழுதி, ''சனி உமக்கு எட்டாமிடத்திலே இருப்பதால்தான் உமக்கு இந்த வியாதி கண்டிருக் கிறது ஆனால் வியாழசுகமிருப்ப தால்''என்று கைவிரல்களை எண்ணி வாய்க்குள்ளும் மு ணு மு ணு த் து ''வேலரே அந்த சீதகேசரி மாத் திரையில் நாலு எடுத்துவாரும்'' என்று கட்டளையிடுவார். வேலரும் பெருங்காயக் குளிகையில் நாலைப் பக்குவமாகச் சரைகட்டி நேயாளி கையில் கொடுக்க, ''காலை இரண்டு தேனிலும், மாலை இரண்டு முலைப் பாலிலும் உரைத்தருந்தும்'' என்று கூறி நோயாளியைக் கைவிட்டு மறுதொழிலில் பிரவேசிப்பார்பரமர். வேலர் பத்தியம் எவ்வகை என்று அனுசரித்தனுப்புவார்.

⁂

பரியாரி பரமரின் வைத்தியத் தில் பலமுறைகள் உள. சிலவியாதி களைச் சீக்கிரத்தில் குணப்படுத்த லாம் - உதாரணம் சில குழந்தை களுக்குப் பரமரைக் கண்டால் நோய் நீங்கும். சிலருக்கு அதிக ரிக்கும். இது அவரது முகவாசி. ஆண் பெண் இரு பாலர்க்கும் தலையிடி முதலிய 'தொற்றி' நோய் கண்டு, பரமர் கைப்பட்டால் குண மாகாமலுமிருக்கும். இது இவர் கைவாசி. நாட்பட்ட சகலவிதமான ரோகங்களுக்கும் இவரிடத்தில் கை கண்ட சில சூரணங்கள் உண்டு... உதாரணமாக...வாலிபந் தொட்டே வயிரவிக்குக் குடிகொண்டுவந்த அடிவயிற்றுக் கோளாறு, பதி னைந்து நேர வேளை சண்டமாரு தச் சூரணத்தால் வெய்யிலைக்கண்ட பனிபோல் ஆகிவிட்டது.

வெறுந்தமிழைப் பேசியும், தனியாக எழுதியும் வருபவர்களும், ஆங்கிலம் படித்த மாயாவாதம், 'கிறிக்' படித்த வேதாந்தம், முத் திக்குக் குறுக்குவழி கண்ட துவை தம் அத்துவைதம், வெறும் சமஸ்கிரு தம் இன்னும் இப்படி இப்படிப் புதிய தும் பழையதுமான தொல்லைகளில் ஈடுபட்டு, மன நோயைத் தேடி யதுமல்லாமல் எண்சாண் உடம்பை யும் அதற்குப் பிரதானமான தலை யையும் வீணாக நோய்க்குள்ளாக்கிக் கொண்டு வருந்துவோருக்கு கண் கண்ட சிரஞ்சீவிபோல இவர் கை யில் ஒரு தைலம். இதன் குணங் கள் தலைக்கொழுப்பைக் கரையப் பண்ணும். தலைவீக்கத்தை வற்றப் பண்ணும். சகலவித வாதங்களையும் போக்கடிக்கும் - கைகாற்பிடிப்புப் போன்ற 'பிடிச்சுராவி' வியாதிகளை மடியச்செய்யும். நாரிப்பிடிப்பை ரத் துச்செய்யும்... இத்தியாதி.

⁂

பரமரின் தொழில்கள் பல சோதிடம், மாந்திரீகம், காணி வழக்குத் தீர்த்தல், பேயகற்றல், கணவன் மனைவி சச்சரவு அகற் றல் இவைகள் அவற்றிற்சில இராம நாடகத்தில் இராமர்வேஷம் போட்

டாடினார் என்றால் சீதாதேவி மாத்திரம் அந்நேரத்தில் உயிருடனிருந்தால் கண்ணீர் விட்டு அழத் தொடங்கிவிடுவாள். வனவாசத்தில் உண்பதற்குச்சரியான உணவு கிடைக்காது, அகப்பட்ட பழங்களையும் காய்களையும் உண்டு, நூறுருத்தல் நிறைகொண்ட மரக்கிரீடத்தை தலையில் மாட்டிக்கொண்டு இராமபிரானாடுவாரானல் இவர் உடபு துரும்பாக இழைத்துப் போய்விடமாட்டாதா? அப்படி உடம்புக்கு ஏதாவது நேர்ந்தால் வல்லி இருக்கிறான் என்ற துணிவுதான் போலும்! மகாபாரதத்தில் துரியோதனனாக வேஷம் தரித்து ''அண்ணன் தம்பி அஞ்சுபேரும் ஆடிஆடி வாருங்கள்...நான்...ஆடும்இவ்வாட்டத்தைப் பார்த்து ஓட்டம் பண்ணச் செய்கிறேனே" என்று கதறிச் சுழன்று ஆடினாரானல், நாட்டுக் கூத்துப் பார்க்க வந்வர் பலருக்கு வீட்டுக்கு போகமனம்வரும். சிலருக்கு குடல் கலங்கி வெளியில் வரும். இதற்கும் வைத்தியம் செய்வார் பரமர்.

* * *

எங்களூரில் பரமர் பெரும் புகழைப் பெற்றதற்கு மூலகாரணம் அம்பாளை அனுதினமும் இடைவிடாமல் உபாசனை செய்ததே. மானிடராய்ப் பிறந்தவர்கள் பிறகு என்ன பிறவிதான் எடுத்தபோதிலும், நோயின்றிச் சுகமாக வாழ வேண்டுமென்பதே இவருடைய சீவியத்தில் குறிக்கோளாகஇருந்தது. அல்லாவிட்டால், விதிவசத்தால் இறந்தவர்களைவிட பரியாரி பரமர் மற்றவர்களுக்கு விதேக முத்தி கொடுத்து வந்தது எப்படி?

---





## சந்தா விபரம்

தனிப்பிரதி 30 : சதம்
ஓராண்டுச் சந்தா : ரூபா நான்கு
மூன்றாண்டுச்சந்தா: ,, பத்து
ஆயுட்சந்தா : ரூபா நூறு

சந்தாப் பணத்தை காசுக் கட்டளை அல்லது அஞ்சல் கட்டளை மூலம் அனுப்பவும்.

பிறகு அனுப்பலாம்' நாளை அனுப்பலாம் என்றிராமல் இன்றே சந்தாப்பணத்தை அனுப்பி எங்களுக்கு உதவுங்கள்.

பணம் அனுப்பவேண்டியமுகவரி:

கலைச்செல்வி
கிளை அலுவலகம்,
கந்தரோடை, சுன்னாகம்.

# எனக்கு !

சிற்பி

ஏன் கண்ணே !

உன் உணர்ச்சித் தந்தி கிடைத்தது. நடந்ததை அறிந்தேன். உன் நிலை கண்டு, உன் செயல்கண்டு நான் உண்மையில் வருந்துகின்றேன். கவலை என்னை வாட்டுகின்றது. இவ்வளவு தூரம் நீ கெட்டுப் போவாய் என்று நான் கனவிற்கூடக் கருதவில்லை.

ஆம்! நாம் நினையாதது தானே நடக்கின்றது. இது தான் உலக இயற்கை. இந்த ஒரு நிலையை எண்ணித்தான் என் வருத்தத்தைச் சிறிது குறைக்க முடிகிறது. ஆனால் இதே நிலையில் நீ சென்று கொண்டிருப்பதும் அதை நான் வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பதும் முடியாது.

இந்த நிலைக்கு, இந்த இழி நிலைக்கு ஒரு முடிவுகண்டே தீர வேண்டும். உனது மற்றைய நண்பர்களிலும் பார்க்க நீ தான் அதிகமாக எனக்குத் தேவையாய் இருக்கின்றாய்; இன்றியமையாதவனாய் இருக்கிறாய். அதை நான் மறுக்கவில்லை. ஆனால் அந்தச் செருக்கிலே, நீ நினைத்தபடி நடப்பதைத் தான் வெறுக்கின்றேன்; மறுக்கின்றேன்.

இப்போது நீ பார்த்து மகிழ்ந்தாயே அந்தப் பெண்ணை! அவள் யார் தெரியுமா?... உனக்கெங்கே தெரியப் போகின்றது! முன்பெல்லாம் நான் அனுமதி அளித்தபின் உன் தொழிலைச் செய்யும் நீ, இப்போது உன் வேலையை முடித்த பின்தானே எனக்கு அறிவிக்கின்றாய்! இந்த ஒழுங்கீனத்தை நான் முளையிலேயே கிள்ளி எறிந்திருக்க வேண்டும். நாளடைவில், என் கண்டிப்பு வெளிப்படும் முன்னரே நீ நல்லவனாகி விடுவாய் என்று நினைத்தேன். ஆனால் ஏமாற்றம் தான் கிட்டியது.

கண்ணின் வேலை பார்ப்பது தானே என்று நீ வாதாடலாம்; நான் ஒத்துக் கொள்கின்றேன். ஆனால் எதைப் பார்ப்பது? எப்போது பார்ப்பது? யாரைப் பார்ப்பது? இதைப்பற்றி நீ சிந்தித்ததுண்டா? பார்க்கும் சுதந்தரம் இருக்கின்றது என்பதற்காக எப்போதும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருப்பதா? சுதந்திர நாட்டிலே இருக்கின்றோமே என்பதற்காக நாம் நினைத்ததையெல்லாம் செய்யலாமா? அப்படி நாம் செய்தால், தமிழ்நாடுமுழுவதும் கீழ்ப்பாக்கமாகவல்லவாமாறிவிடும்? இந்தச் சமயத்தில், அமெரிக்காவில் நடந்த ஒரு கதையைச் சொல்ல விரும்புகிறேன்.

அமெரிக்க நாடு சுதந்திரமடைந்தகாலம். ஒருநாள் ஒரு செல்வப் பிரபு தன் கைப்பிரம்புடன் உலாவப்

புறப்பட்டார். தனியாகவே சென்று கொண்டிருந்தபடியால் தன் கைப் பிரம்பைச்சுழற்றிக் கொண்டே சென்ருர். எதிரே இன்னெரு மனிதர் வந்துகொண்டிருந்தார். பிரபு பிரம்பைச் சுழற்றுவதை நிறுத்தவில்லை. எதிரே வந்தவரின் மூக்கைப் பதம் பார்த்து விட்டது பிரம்பு. "மற்றையோர் வருவது உங்கட்குத் தெரியவில்லையா?" என்று கேட்டார் வந்தவர் மூக்கைத் தடவியபடியே பணிந்துபோக விரும்பவில்லை,முதலாமவர். "நான் இப்போது சுதந்திர நாட்டில்தானே இருக்கிறேன்" என்ருர். சுதந்திர நாட்டில் இருந்தால் எதுவும் செய்யலாம் என்பது அவர் சித்தாந்தம். அடிபட்டவருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. "எனது மூக்கு எங்கே தொடங்குகின்றதோ அங்கே முடிகிறது உன் சுதந்திரம்" என்ருர் அவர். பின்னே என்ன நடந்தது என்பதைப்பற்றி நாம் கவலைப்படத் தேவையில்லை. நமக்குத் தேவையானது இவ்வளவு தான்.

நான் ஏன் இக் கதையைச் சொன்னேன் என்று உனக்குத் தெரிந்திருக்கும். எனது வேலை பார்ப்பதுதானே என்று நினைத்துக் கொண்டு, எல்லோரையும் எல்லாவற்றையும் பார்க்கக்கூடாது. எதற்கும் ஒரு அளவு இருக்கவேண்டும்; எல்லை வேண்டும். அளவிற்கு மிஞ்சினுல் அமிர்தமும் நஞ்சாகிவிடும்; எல்லையை மீறினுல் தொல்லைப்பட நேரிடும்.

என் கண்மணியே,

உள்ளதை உள்ளபடியே உரைக்கின்றேன். இந்த வேதாந்தங்களையெல்லாம் உனக்குச் சொல்லுகின்றேனல்லவா? ஆனுல் நீ அப்படித் தவருக நடக்கும்போது,என்னுல் அதைத் தடுக்க முடியவில்லை. ஏன் நானே உன்னைத் தொடர்ந்து உனக்குப் பின்னுல் வரவேண்டியவனுக ஆகி விடுகின்றேன்.

பாய்க் கப்பலைப் பற்றிக் கேள்விப் பட்டிருப்பாய். கடலில் அக் கப்பலைச் செலுத்தவேண்டுமானுல் அக் கப்பலிலிருக்கும் ஒரு கம்பத்தில் ஒரு பெரிய பாயை விரிப்பார்களாம். வீசும் காற்று அப் பாயில் பட்டு மிக விரைவாய் அக் கப்பலைச் செலுத்துமாம். எந்த நேரத்தில் எங்கே பாய் விரிக்க வேண்டுமென்பதைத் தீர்மானிக்க வேண்டியது மாலுமியின் பொறுப்பு. பாயை விரித்தவுடன், திடீரெனப் புயல் காற்று கிளம்புமானுல் கப்பல் ஆழ் கடலில் அங்கும் இங்கும் அலைக்கழிக் கப்படும். பாயின் 'பிடி' மாலுமியின் கையில் இருந்தாலும் அந்த நேரத்தில் மாலுமியால் ஒன்றும் செய்ய முடியாதல்லவா? அதே நிலையிற்ருன் நானும் இருக்கின்றேன். அதனுற்ருன், வெள்ளம் வருமுன்னே அணை கோலுவதுபோல் இந்த உரைகளை உனக்குக் கூறுகின்றேன். இந்த நிலையில் நீ நீடித்து இருப்பதானுல் உன்னுடன் கூட என்னையுமல்லவா கெடுப்பவனுக ஆகிவிடுவாய்!

ஏழைகளைக் கண்டால் எட்டி விலகுகின்ருய். பிச்சைக் காரர்களைக் கண்டால் பெருமிதத்துடன் அப்பால் செல்லுகின்ருய். நோயால் வருந்துபவர்களை, கஞ்சிக்கில்லாமல் வாடி வதங்குபவர்களை, ஏறெடுத்துப் பார்க்கின்ருயில்லை. ஆனுல் ஆரணங்குகள் அழகிகள், வனிதாமணிகள் என்ருல்

உன் இமைகளை அகல விரித்துப் பார்க்கின்ருயே!

அவர்களைப் பார்க்க வேண்டாம் என்று நான் சொல்லவில்லை; அழகை அனுபவிக்கத்தான் வேண்டும்; ரசிக்கத்தான் வேண்டும். தமிழர்கள் அழகை ஆழ்ந்து, ஆராய்ந்து, அனுபவித்து அதனல் ஆக்க வேலைகள் புரிந்து அவனியில் அழியாப் புகழை அடைந்தவர்கள்தானே! ஆனல் அந்த அழகிகளைப் பார்க்கும்போது எனக்குச் 'செய்தி' அனுப்புகின்ருயே அதுதான் கீழ்த்தரமானதாக இருக்கின்றது.

ஏழைகளைக் கண்டால் எட்டி விலகாதே. பசியால் வாடிப் பட்டினியால் துடிப்பவர்களைப் பார். பார்த்துக் கொண்டே உணர்ச்சித் தந்தி மூலம் எனக்கு அறிவி. என்னலான உதவிகளைச் செய்து விடுகிறேன். பாவம் அவர்களுடைய ஒரு நேரப் பசியை யாவது நாம் போக்கலாமல்லவா?

ஏழைகளிடத்தேயுள்ள குறை பணமில்லாதது, நோயாளிகளிடத்திலேயுள்ள குறை சுகாதார வசதிகள் இல்லாமை. இந்தக் குறைகளை நன்கு கவனிக்கவேண்டும். ஆனல்...பிறர் செய்யும் குற்றங்களைப் பார்ப்பதைத் தான் நான் வெறுக்கின்றேன். தவறு செய்வது மனித இயற்கை. மற்றவர் தவறிழைத்தால் நீ அவர்களைக்கண்டு சிரியாதே. பல்லி, மற்றையோருக்கு—மனிதருக்குப் புத்திமதிகள், எச்சரிக்கைகள் செய்யுமாம். ஆனல் தன் சொந்த வாழ்க்கையில் நடக்க விருக்கும் தீமைகளை அறிய அதனல் முடியாதாம். இதைப்போற்ருனே நீயும் இருக்கின்ருய். மற்றவர்களைப் பார்த்துச் சிரிப்பதும், எள்ளி நகையாடுவதுந்தானே உன்னுடைய வேலைகளாயிருக்கின்றன, ஒரு நாளாவது உன்னை நீயே பார்த்ததுண்டா?

அன்று கதிரவனின் கொடுமையைத் தாங்கமுடியாது நீ எவ்வளவு கஷ்டப்பட்டாய். நான்கூட அதைப் பார்த்தும் பாராதவன்போல் இருந்தேன். மற்றவர்கள்படும் துன்பம் எப்படி இருக்கும் என்பதை அப்போதாவது நீ உணருவாய் என நினைத்தேன். உன்னல் பொறுக்கமுடியாது போயிற்று. உன் ஆயுதமாகிய கண்ணீரைப் பெருக்கினய். நான் இளகினேன். உன்னைப் பாதுகாக்க, அந்த வர்ணக் கண்ணுடியை உனக்குக் கொடுத்தேன். ஆனல் நீ செய்ததென்ன? உன் வருத்தம் உனக்கு மறந்தே போய்விட்டது.உன்னை ஒருவரும் பார்க்க மாட்டார்களே என்ற துணிவுடன் உன் பார்வைக்கு அகப்பட்ட எல்லா மெல்லியர்களையும் பார்த்துத் தீர்த்தாய்.

பெண்களைப் பார்; அவர்கள் பின்னற் சடைகளைப் பார்; அன்ன நடையைப் பார்; வண்ண உடைகளைப் பார்; ஆனல் ஒன்று, ஒரு தங்கையை, தாயை எப்படிப் பார்ப்பாயோ அப்படிப் பார்; அதற்கு மேலே போனுயோ வந்தது ஆபத்து.

"என் வேலையென்ன? அதைச் சொல்லுங்களேன்!" என்று உனக்குக் கேட்கத் தோன்றலாம், நானுக உனக்கு ஒன்றுஞ் சொல்ல விரும்பவில்லை. ஏனெனில் நான் சொல்வதிலும் தவறு இருக்கலாமல்லவா? ஆகவே அறிஞர்கள் சொன்னதை உனக்குச் சொல்லுகின்றேன். "கண்காள் காண்மின்களோ, கடல் நஞ்சுண்ட கண்டன்றன்னை" என்று அறிவுரை கூறியிருக்கின்ருர்கள் ஆன்ருேர்கள். "ஐவகை வென்ருேன் அடியினையல்லது கைவரைக்

காணினும் காணுவென்கண்" என்று கவுந்தியடிகள் கூறியதாகச் சிலப்பதிகார ஆசிரியர் கூறியிருக்கின்றார். இன்னும் எவ்வளவோ பெரியோர்கள் உனக்கு அறிவுரை கூறியிருக்கின்றார்கள்.

நம் எல்லோரையும் ஆக்குவித்து ஆட்டுவிக்கும் ஒருவன் இருக்கிறான் என்பதை நான் நம்புகின்றேன். அந்த உயர்ந்தவனை, உத்தமனை, உலக முதல்வனை, உருவமாக்கி வைத்திருக்கின்றனர் முன்னோர். அந்த உருவங்களைப்பார்; நன்றாகப்பார்; உள்ளத்தில் பதியும் வரைக்கும் பார்; உணர்ந்துபார். அருளமுதம் பொழியும். அப்போது உன்னுடன் சேர்ந்து நானும் ஈடேறலாமல்லவா?

இன்பத்தை நாடிச் செல்வதே மனித இயற்கை. அந்த இயற்கையை மீறி, ஏதோ வேற்றுலகச் சிந்தனையில் மூழ்கி விடும்படி உன்னை நான் வேண்டவில்லை. இம்மையிலும் இன்பம் வேண்டும்; பின்பும் இன்பம்வேண்டும். ஆனால், இப்போது நமக்குக் கிடைக்கக்கூடிய இன்பங்களைத் தேடுவதில், நாம் ஒரு ஒழுங்குடன் இருக்க வேண்டும். இந்த உலக இயற்கையை ஒட்டி ஒப்பற்றவோர் நூலையே எழுதியபடியாற்றானே திருவள்ளுவரை இன்று எல்லோரும் போற்றுகின்றோம்! காதல் என்னும் களங்கமற்ற பாதையில் செல்லும்போது, நீ எனக்குக் கை கொடுத்து உதவுவாயெனில், நான் அதை மறுக்கமாட்டேன். ஆனால், அப்போதும், நெறிதவறி வெறியை உண்டாக்கினால், உன்னை வெறுப்பேன்.

நல்ல நூல்களைத் தேர்ந்தெடுப்பதில் நீ எனக்கு உதவி புரி.

இவ்வளவையும் சொல்லிவிட்டேன். அதிகமென்றே நினைக்கின்றேன். இனி நீ என்னை மீறினால் உன்னைக் கட்டுப்படுத்த முடியாது. அதை நான் நன்றாக அறிந்து தானிருக்கின்றேன். குதிரைகளுக்கு முகமூடி அணிவதுபோல், உன்னைக் கட்டுப்படுத்த முடியுமா? ஆனால் ஏதோ உன்னிடம் எனக்கு இருக்கும் அபார நம்பிக்கைதான் என்னை இவ்வளவும் எழுதத் தூண்டியது.

என் நம்பிக்கையை நாசமாக்க மாட்டாய் என்று நினைக்கின்றேன். வேண்டாதவற்றைப் பார்க்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால், மேலே தூங்கும் கதவுகளை இழுத்து மூடிவிடு.

நான் கூறியவற்றை நன்றாக யோசித்துப்பார். நல்ல மாற்றத்தை என் உரைகள் உண்டாக்கினால் நான் மகிழ்வேன்.

உன் நலம் நாடும்
நான்.

என்பவளச் செவ்வாயே!

வணக்கம்.

ஆச்சரியப் படுகின்றாயா? ஒரு நாளுமில்லாத திருநாளாய் இன்று வணக்கத்துடன் வருகின்றாரே என்று திகைப்படையலாம். அல்லது சாம, பேத, தான, தண்டம் ஆகிய நான்கினுள் ஒன்றாகிய தானத்தைப் பயன்படுத்தி உன்னைப் பணிய வைக்க முயற்சிசெய்கின்றேன் என்றுநினைக்கலாம். எதை எதையோ நினைக்க உனக்கு உரிமை உண்டு. அதில் தலையிட நான் விரும்பவில்லை.

வழமைபோல் உன்னுடன் வாய்ச் சண்டை செய்வதற்கு நான் வரவில்லை. ஆணவத் திமிருடன் நடத்

தும் பலப்பரீட்சை ஆபத்தை விளைவிக்குமென்று இதுவரை எனக்குத் தெரியாது. சண்டை மூலம் உண்டாகும் வெற்றி என்றும் நிலைத்து நிற்காது. சமாதான வழியில் மற்றையோரின் கருத்துகட்குச் செவி சாய்த்து அன்பு மூலம் ஏற்படும் வெற்றியே என்றென்றும் நிலைத்து நிற்கும். இந்தப்பெரிய உண்மையை இப்போதுதான் நான் உணர்கிறேன், வெவ்வேறு கொள்கைகளை உடையவர்களும் தமக்குள் சண்டைசெய்து வாளை வீணாக்கக் கூடாது. கொள்கைகளில் வேற்றுமை இருந்தாலும் மனிதன் என்ற அளவில் அவர்கள் நண்பர்களாய் இருக்கலாமல்லவா? இந்த உண்மையின் உயர் தனிப்பண்பை எல்லோரும் உணர்ந்து உலகில் வாழ்ந்தார்களானால் உலகம் எவ்வளவு விரைவில் நல்லவர்கள் வாழுமிடமாக மாறிவிடும்?

ஆகவே என் நண்பா! நமது பழைய மனக்கசப்புகளை மறந்துவிடுவோம். இன்று முதல் நாம் புது மனிதர்கள். நமது எண்ணம், கருத்து ..த்தை ஆகியவை வெவ்வேறாயினும் நாம் நண்பர்களாய் வாழ்வோம்.

நண்பன் என்று கூறும்போது நண்பனின் தவிர்க்கமுடியாத கடமைகளும் என் நினைவில் வருகின்றன. ஒருவன் நல்ல பணிகள் புரியும்போது அவனை வாழ்த்தி ஊக்கப்படுத்துவதும், தீய செயல்கள் செய்யும்போது அவற்றைத் தடுத்து நிறுத்தி நல்ல புத்திமதிகள் கூறி அவனைக் காப்பதும், நண்பர்களது தலையாய கடனாகும். ஆகவே நண்பன் என்ற முறையில் உன்னிடம் இப்போது சில கூறுகிறேன். உள்ளம் கொதிப்படையாது, உண்மைநிலை தவறாது, உள்ளன்புடன் கேட்டு உகந்ததைச் செய்வாய் என்றே நம்புகிறேன்.

இன்று நீ பேசக்கூட முடியாமல் களைத்துப்போய்க் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றாயல்லவா? இதன் காரணத்தை நீ நன்றாக ஆலோசித்துப் பார்த்ததுண்டா? பனிக்காலமாதலால் தொண்டை கட்டிவிட்டது என்று நண்பர்கள் சிலர் சொன்னதை நீ நன்றாக, மகிழ்ச்சியுடன் ஆமோதித்துவிட்டாய். ஆனால் உண்மைக் காரணம் இதுதான் என்பதை நீ உள்ளத் துணிவுடன் கூறுவாயா? நான் வெளிப்படையாகக் கூறுகின்றேன் நீ இப்போது பேசக்கூட முடியாத நிலையில் இருப்பதற்குக் காரணம் நேற்று மாலை, உன் நண்பர்களுக்கு நீ அளித்த பிரசங்க விருந்துதான். பிரசங்கம், மேடைப்பேச்சு ஆகியவற்றின் எதிரியல்ல நான், ஆனால் உனது சொல்மாரி வேறு 'பாணி'யில் அமைந்திருந்தது. செல்வி. க...வை எங்கோ ஓரிடத்தில் சந்தித்துப் பேசியதாக யாரோ உன் காதில் போட்டுவிட்டார்கள். அதற்கு நீ தலையும் வாலும் வைத்து இன்னும் என்னென்னவோ அலங்காரங்கள் செய்து, நண்பர்களின் மத்தியில், ராஜ நடை நடக்கவிட்டுவிட்டாயே அவர்களும் அதை ரசித்தபடி கேட்டுக் கொண்டிருந்தார்கள். இந்தத் திருப்பணியினால் ஏதாவது நன்மை ஏற்படுமா? இதுமாதிரி நடக்கவிருக்கும் மற்றைய இளைஞர்கட்கு இது ஒரு எச்சரிக்கையாக விருக்கும் என்று நீ வாதாடலாம். இதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. இப்போதைய தினத்தாள்களில் எத்தனை காதல் விவகார வழக்குகள், வரலாறுகள் மணமுறிவுகள் வெளியாகின்றன. இவை நாளுக்கு

நாள் அதிகரித்து வருகின்றனவே தவிரக் குறைந்துகொண்டு வருகின்றனவா? இவைகள் இளைஞர்களின் மனதில் புதுப்புது வழிகளைக் கண்டு பிடிக்க உதவுமேதவிர, அவர்களுக்கு எச்சரிக்கையாக இருக்கமாட்டா!

குற்றங்களை மறைப்பதுதான் நன்மை பயக்குமா? இல்லை. ஒருவனுடைய குற்றங்களைச் சொல்லும் போது, கூடவே அந்தக் குற்றங்களும், அவனுடைய குருட்டுப்போக்குமே, அவனது கோரமுடிவுக்குக் காரணமாயிருந்தன என்பதும் தெரிவிக்கப்பட்டாற்ருன் இவைகள் இளைஞர்கட்கு எச்சரிக்கையாக இருக்கும். புராணங்களை நான் மதிப்பதும் இந்த ஒரே ஒரு காரணத்தினுற்ருன். இன்று அரசாங்க இலாகாக்களில் அமர்ந்திருக்கும் அனேகர் கைக்கூலி முதலியவை பெற்றும் பெரிய மனிதர்களாக மதிக்கப்படுகின்றனர்; பெருமையுடன் வாழ்கின்ருர்கள். இவர்கட்கு அரசாங்கம் தக்க தண்டனைகள் கொடுத்து, ஊழல்களைக் களையாத வரையில் இவர்களின் குற்றங்களையும் தீச்செயல்களையும் அம்பலப்படுத்துவது தீமையாகவே முடியும். லஞ்சம் பெற்ருற்ருன் பெரியோனுக வாழலாம் என்ற தப்பான எண்ணத்தை இளைஞர்கள் மனதில் உண்டாக்கலாமல்லவா?

தவறு செய்வதுமனித இயற்கை. உலகத்தில் தவறு செய்யாதவர்களே இல்லை. மனிதருக்குள் மாணிக்கமெனப்போற்றப்படும்மகாத்மாகாந்தி கூடத்தான் தவறு செய்துவிட்டேன் என்று பலமுறை கூறி வருந்தியிருக்கின்ருரல்லவா? ஆகவே ஒருவர் செய்யும் தவறுகளைப் பெரிதுபடுத்திப் பிறரிடம் சொல்லித் திரிவது பேடிகளின் செய்கையென்றே கருதுகின்றேன்.

உண்மையாகவே மற்றவன் குற்றம் நீங்கி நல்லவனுகவாழவேண்டும் என்று ஆசைப்பட்டால் நான் இப்போது செய்கின்றேனே அதுபோல அவனிடம் நேரிலே சென்று உன் எண்ணங்களைத் தெரியப்படுத்து. அவன் மனித மனம் படைத்தவனுக இருந்தால், நீ சொல்பவற்றை நன்ருக ஆராய்ந்து பார்த்து, நல்லன வாயின் கொள்ளுவான்; அல்லதாயின் தள்ளுவான்.

மற்றையோருடன் பேசும் போதும் சில வேளைகளில் நீ அளவிற்கு மீறிப் பேசிவிடுகின்ருய். சொல்லத் தகாதவற்றையெல்லாம் சொல்லிவிடுகின்ருய். அதனுல் மற்றையோருக்கு ஏற்படும் துன்பத்தை அப்போது நீ உணரமாட்டாய். அம்பு தைத்தவனுக்கு அதன் கொடுமை தெரியுமேதவிர, அம் பெய்தவனுக்கு அதன் கொடுமை தெரியாதே! வில்லம்பைப் பொறுத்த அளவில், எய்தவன் கவனமாய் இருந்தால் எப்போதும் தப்பித்துக்கொள்ளலாம். ஆனுல் சொல்லம்பைப் பொறுத்த அளவில் அதை எய்தவனுக்கும் இடையூறுகள் நேரும். இதைக் கருதித்தான் திருவள்ளுவரும்.

''யாகாவராயினும் நாகாக்க
காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப்
பட்டு"

என்று என்ருே சொல்லிப் போயிருக்கின்ருர்.

'தனியாகப் பிறந்துவிட்டேன் அதனுல் ஏங்குகின்றேன். அந்தப் பயத்தைப் போக்கவே என்வாயில் வந்தவற்றையெல்லாம் பேசிவிடுகின்றேன் அதனுல் ஓரளவிற்கு என் பயத்தைப்

போக்கடிக்க முடிகின்றது' என்று நீ கூறுகின்றாய்.

உன் பயம் அர்த்தமற்றது. சரியான வழியில் நடந்தால் ஒருவருக்கும் பயப்படத் தேவையில்லை. மடியில் கனம் இருந்தாற்றானே வழியில் பயம். அதை விட்டுவிட்டு. வீணே அலறிக் கொட்டி விபரீதத்தை விலைக்கு வாங்குவது நல்லதா?

கடவுள் ஏன் இரண்டு காதுகளைப் படைத்துவிட்டு உன்னை மாத்திரம் தனியனாக்கிவிட்டார் என்பதற்கு ஒரு பெரியார் கூறிய விடை தெரியுமா?

" நாம் ஒரு மடங்கு பேசினால், அதைப்போல் இருமடங்கு கேட்க வேண்டும் என்பதற்காகத்தான்". ஆகவே உன்னைப்பற்றி நீ கவலைப் படத் தேவையில்லை. கடவுளின் படைப்பை எண்ணிக் கலங்கவும் தேவையில்லை

"நன்மை செய்யப் பிறந்த நீ நன்மையைச் செய்யாவிட்டாலும் தீமையையாவது செய்யாமலிரு" என்று விவேகானந்தர் கூறினார். அதையே உனக்குச் சொல்ல விரும்புகின்றேன்.

குற்றம் சாட்டிவிட்டேன் என்று நினையாது இவைகளைக்களைந்து நல்லவனாக வாழ்ந்து என் உள்ளத்தைக் குளிரப்பண்ணுவாய் என்றே நினைக்கின்றேன்.

உன் அன்புள்ள
நான்.

என் சாதுவான காதே!

பணிவுடன் வேண்டுகின்றேன் என்னை மன்னித்துக்கொள். உரிய காலத்தில் உனக்குப் பதில் கொடுக்கவில்லையே என்று வருந்துகின்றேன். ஆனாலும் பொறுமையே உருவமான நீ என் தாமதத்தைப் பொருட்படுத்தமாட்டாய் என்றே நினைக்கின்றேன்.

உன்மேலுள்ள அசட்டையினால் உனக்கு இதுவரை பதில் அளிக்கவில்லை என்று தவறாகக் கருதமாட்டாய் என்பது எனக்கு நன்கு தெரியும். உன் நணபர்களுக்குச் சொல்ல வேண்டியவை எவ்வளவோ இருந்ததால் உன்னைப்பற்றிய சிந்தனையை ஒதுக்க வேண்டியதாய் இருந்தது இன்றுதான் அவர்கள் இருவருக்கும் என் புத்திமதிகளைக் கூறினேன். இப்போது சிறிது ஓய்வுடன் இருக்கின்றேன்.

உனது உண்மையான நிலையைப் பற்றி ஒளிவு மறைவின்றி வெளிப்படையாகக் கூறியதையிட்டு மகிழ்கின்றேன். அதற்காக உன்னை

---

தென்றலங் களிதருந் தெய்வக் கன்னியாய்த்
துன்றிய பூணெலாந் துளங்கத் தோன்றல் பால்
மன்றலிற் றேழிபின் மலர்ந்து மென்மெலச்
சென்றெளிர் செலவெனத் தேங்கிச் சென்றதே.

—வசந்தங்காண் படலம், சாகுந்தலம்

மெச்சுகின்றேன். உனது பரிதாப நிலையை எண்ணி வருந்துவதாகக் கூறுகின்ருய். நீ எனக்குத் தீமை செய்ய விரும்பாவிட்டாலும் அப்படி நடப்பதைத் தடுக்க முடியவில்லையே என்று வருந்துகின்றேன் என்று எழுதியிருக்கின்ருய்.

ஆனல் இதற்காக நீ சிறிதும் கவலைப்படவேண்டாம். உண்மையில் நீ எனக்குச் சிறிதும் தீமைகள் செய்வதில்லை. பதிலாக எவ்வளவோ நன்மைகளை இதுவரை செய்திருக்கின்ருய். மற்றைய நண்பர்கட்கு இருக்கும் வாய்ப்பு உன்னிடம் இல்லை. காண விரும்பாதபோது கண்கள் தங்களைத் தாங்களாகவே மறைத்துக் கொள்ள முடியும். பேச விரும்பாத போது மூடிக்கொண்டிருக்கும் சக்தி வாய்க்கு உண்டு. ஆனல் நீ கேட்க விரும்பாதவற்றையும் கேட்டுக் கொண்டுதானே இருக்கவேண்டி இருக்கிறது.

இயற்கையிலேயே உனக்கேற்பட்ட இத்தன்மைக்காக உன்னை நான் குறை கூறுவேனு? ஆகவே வழமை போல் எல்லாச் செய்திகளையும் எனக்கு அனுப்பிவிடு. அவற்றை ஆராய்ந்து பிரித்தெடுப்பது என்னுடைய வேலை.

ஒரு அறிவுரை மாத்திரம் உனக்கு நான் கூறுகின்றேன். நீ கேட்கவிரும்பாத—கேட்கக்கூடாத செய்திகள் சிலரிடம் இருந்து வருமென்று கருதினல் அவர்களிருக்கும் பக்கமே தலை காட்டாதிருப்பது நலம்.

அதிகம் எழுத விரும்பவில்லை. மற்றவை பின்.

அன்புள்ள
நான்.


**நினைவுமலர்கள் வெளியிடுவோரே!**
**பாடசாலை அதிபர்களே!**
**புத்தக ஆசிரியர்களே!**
**பத்திரிகை நிர்வாகிகளே!**

குறைந்த செலவில்
**சிறந்த 'புளக்'குகள்**
செய்யவேண்டுமானல்
எங்களுக்கு எழுதுங்கள்.

**Sri Lanka Block Makers**

131, MESSENGER STREET, COLOMBO.

# வனமுல்லை

உருவகக் கதை

சு. வே.

மனிதமகா சக்தியின் திருவடி தீண்டப்படாத கானகப் பகுதி அது. அதனால் அது எதனையும் மனங் கொண்டவாறு ஆக்கியோ, ஆக்கியதனை அளித்தோ காலக்கருவுயிர்ப்பிலே விளைந்து வளரும் வெறுமைத் தன்மையாலும் வெறுப்பாலும் அழித்தோ திருவிளையாடல் புரியவில்லை. இயற்கைப் பெருந் தேவி சிருட்டித்த இயற்கை, மாசுபடாத நிறைவோடும் தனித்துவத்தோடும் குடியிருந்தது ஒரு வேளை, விதிவிதித்த தேவன் வராமையாலே, கன்னிமை கழியாத இளம் பெண்போல, காலக் கழிவை பெருமூச்சால் வரவேற்று, மோனத தவம் புரிகிறதோ!

எத்தனை எத்தனையோ இயற்கை மர்மங்கள் குமைந்துகிடந்த அவ் வனத்தின் இதயப் பகுதியைக் கூறு செய்து கொண்டு ஓர் ஆறு ஓடியது. அது, தனக்குச் சேய்மையில் எங் கெல்லாமோ மமை பொழிந்தபோது வந்ததனைத்தையும் வரவேற்று, பின் வாரி வழங்கிவள்ளலாகிவிடும்; நுங் கும் நுரையுமாகப் பொங்கிப் பெருகி பேராறுக விஸ்பரூபம் கொள்ளும். மற்றக் காலங்களிலே வறுமை வாய்ப் பட்ட மானஸ்தன் போல, சுருங்கக் கூடிய அளவு சுருங்கி, மலைப்பாம் பாய் நெளியும்.

அந்த ஆற்றின் ஒரு கரையின் ஒரு பகுதியை வனமுல்லை தொன்று தொட்டு சுதந்தரித்து ஆட்சி செய்தது. அங் குள்ள ஒவ்வொன்றும் மற்றெவ் வொன்ருல் விலங்கிடப்படாமல், தன் னிச்சையாய்,இயற்கை விதித்த விதிப் படி வாழ்ந்தமையால் ஒவ்வொன்றும் தன் தன்னளவில் ஆட்சிக்குரிமைபூண் டிருந்தது. வனமுல்லையும் தன்னள வில் அரசியாய் அங்கு கொலுவிருந் தாள்.

நல்லுணர்வுகள் மனத்தில் விளை கையில், வளர்கையில், முதிர்கை யில் இளமையிலும் செழுமையிலும் மாற்றேறிக் காணுதல் போல, காலங் கண்ட அவ்வனமுல்லை, செழித்து மதர்த்து இளமைத் தோற்றங்கொண் டிருந்தது, முதுமையிலே இளமை முற்றிநிற்க, அதற்குக் காயகல்பம் அளித்த மருத்துவன்யாரோ! அந்த ஆரு! பசுமையிலே பழுத்த பூரண பசுமை, மதர்ப்பிலே முற்றிய பூரண மதர்ப்பு, செழிப்பிலே செழித்த பூரண செழுமை என்பவற்றுக்கு இலக்கியம் அவ்வனமுல்லை.

அது அல்லி மனோபாவங் கொண்டு, கொழுகொம்பெதனையும் தேடி அணையாது தருக்கி, தான் பெற்று விட்ட கொடிகளில் ஒன்றை மற்றென்றுக்குத்துணையாக்கி, சுற்றித் திரண்டு படர்ந்தும் நிமிர்ந்து நிற்க முயன்றும், பச்சைப் பாம்புகள் பிணைந்து நெளிவது போல, தரை யிலே இளங்கொடிகளைப் பிணைத்து நெளிவது போல, தரையிலே இளங்

கொடிகளைப் பிணைத்து ஓடவிட்டுப் வளர்ந்திருந்தது.

வான் முகில்கள் நிறை சூலி களாய் மெல்லென ஆடியசைந்து வர கார்காலம் பிறந்தது. வீண் பழிகேட்ட பத்தினிப்பெண்ணின் உள்ளுணர்ச்சி வேகம்போலே கலங்கி, சுருண்டுபுரண்டு ஆரவா ரித்து விரைந்தது ஆறு. வனமுல்லை யின் அல்லிராச்சியத்துக்கு அடங்கி நடப்பதுபோல அதன் பாதங்களைக் கழுவிக்கொண்டு சென்றது.

எந்த 'அல்லி'களுக்கும் பருவம் வாய்த்த வேளையில் உள்ளம் துடிக்கும்; பின் கொந்தளிக்கும் பின் ஓலமிடும். அந்த உள்ளம் அடங்காமல் மெய்ப்பாடுகள் சில வற்றையேனும் தோற்றுவிக்கும் சார்காலம் வனமுல்லைக்குத் தக்க பருவவேளையாக வந்து வாய்த்தது. அதனல் அது மலர்ச்சிபெற்றுச் சிரித்தது. சிரிப்பு, எண்ணிலடங்கா வெண்மலர்களாய் அதன் அங்க மெங்கும் விகசித்தது. அரும்புகளும் போதுகளும் மலர்களும் அலர்களும், பச்சைப் பசுங் கடலின்மீது வெண் ணுரைத் திரளாய்க் கிடந்தன. ஊழ்த்த மலர்கள் அதனடியில் நில பாவாடை விரித்திருந்தன. இப் போது வனமுல்லை, அழகுக் கொள்ளை.

## 2

ஒருநாள் அந்த ஆறு முல்லை மலர்மாலை யொன்றைத் தன் அலைக் கரங்களில் ஏந்திக்கொண்டு வந் தது. ஏந்திவரும் இயல்பு அந்த ஆற்றுக்கு அந்தக்காலத்துக் குண மாகாதே! ஒருவேளை அதன் மென் மையைப் பரிசித்தும் தூய்மையை உற்றுணர்ந்தும் அறிந்துகொண்ட ஞான விளைவுதான் அதற்குக் காரணமோ! அந்த இடத்தில் வந்த தும் குறும்புக்காரச் சிறுவனைப் போலச் சுழித்தோடி, அம் முல்லை மாலையை வனமுல்லையின் அடியிலே, நிலபாவாடையின் மீது கிடத்தி விட்டது.

அந்த முல்லைமாலை பெண் ணொருத்தியின் கொண்டைமாலை. வாழ்க்கையின் இன்ப துன்பக் கூறு களின் சுவை நுகர்ந்த அனுபவஸ் தர்களிடம் கவிழ்ந்துகிடக்கும் ஒரு வகைச் சோர்வு, அவர்களுக்குப் பெருமையையும் பொலிவையும் அளிப்பதுபோல, அந்த வாட்ட மடைந்த மாலையிலும் ஆத்மார்த்த மான களை சோபித்தது. வாடி, கருகி அழுகும் நிலையிலே கிடந்த அதில், ஒருசில மலர்கள் அதற்குச் சீவத் துடிப்பு உண்டெனக் காட்டின.

அதனைக் கணப்பொழுதுகூடப் பார்க்கப் பொறுமையற்றுக் குலுங் கிய வனமுல்லை, "ஓ! ஆறே, என் தூய்மையான பேரெழில் இதனல் களங்கமடைவதை நீ அறியாயோ? கொண்டுவந்த இதை நீயே கொண்டுசென்று விடு" என்று அலறியது.

கற்பாறையிலே ஏறிக்குதித்த ஆறு, சிரித்துக்கொண்டே, "இது என்றுகூருதே; இவள் என்று கூறு. இவள் உன் தங்கை. பிறகு வருகி றேன்" என்று சொல்லிச் சென்றது.

பரிபூரண தூய்மையிலே படிந்து விட்ட பொட்டுக்கரைபோல, அம் முல்லைமாலை வனமுல்லைக்குத் தோற் றந் தந்தது. அதைச் சகிப்பது சாவை அணைப்பதுபோன்றவெறுப் பை அளித்தது.

9

''ஏய்'' வனமுல்லையிடமிருந்து துடுக்காகத்தான் வார்த்தைகள் வெளிப்பட்டன. "தொந்தம் பந்தம் என்று கூறிக்கொண்டு நீ இங்கே விழுந்துகிடப்பது சூதோ? சூழ்ச்சியோ?"

''சூது, சூழ்ச்சி என்ற பதங்களின் பொருள் இன்னதென்று தெரியாதபோது, அவை என்னளவில் வெறும் ஒலிகள் தாம்''

''அப்படியானல் தொந்தமும் பந்தமும் எங்கிருந்து வந்தன''

''நீயும் நானும் எல்லாவகையாலும் ஒரே அச்சில் வார்க்கப்பட்டவர்கள்போலிருக்கின்ருேமாம்''

"எனது ஈடும் எடுப்புமற்ற பவித்திரமான அழகினுக்கும்உனக்கும் ஒற்றுமையுண்டா? முற்றிய அறிவிலிகளும் கூறுருர்களே"

''இப்போதிருக்கும் என் நிலை அப்படிப்பட்டது;நான் வந்த நெடுவழி அதற்கு ஒரு காரணம். அன்றியும் அனுபவ வயது...''

"ஓகோ, அனுபவமா? அதன் பொருள் தெரியுமா உனக்கு. காலங்கண்ட எனக்கு அனுபவம் கற்பிக்க ஒரு குருவை இன்றுதான் கண்டுகொண்டேன்!"

''அக்கா, என்னளவில் அனுபவம் காலமுதிர்வால் மாத்திரம் உண்டாவதில்லை. இன்ப, துன்பங்களின் பலகோணக் காட்சிகளைக் கண்ட, கேட்ட, உற்றுணர்ந்த அறிவால் ஏற்படுவது''

''என்னடி பிதற்றுகிருய்? என்னளவில் இன்பம் என்ற ஒன்றுதான் முழுமை. துன்பம் என்ற சொல்லே எனக்குப் புதுமையடி"

''அக்கா இன்பத்தின் குளிர்மையிலும் பார்க்க துன்பத்தின் சூடு மேல். துன்பம் சுடச்சுட ஒளிவிடும். அன்றியும் உனது முழுமையான இன்பம், அதன் ஒரு பின்னமே, பருவம் வந்து வாய்ந்த வேளையில் மலர்ந்து சொரிவது தானே உனது இன்பப் பரிபூரணம்.''

''அதைவிட வேறென்ன உண்டு?''

'எத்தனை எத்தனையோ உண்டு'

''என்னடி உளறுகிருய், நரை மூதாட்டிகள்போல. அத்தனை அத்தனையையும் நீ கண்டுகொண்டாயா?''

''அப்படிக் கூறிக்கொள்ள என் எள்ளத்தனை அறிவு இடங்கொடுக்கவில்லை, ஏதோ சத கூறிட்ட கோணின் அளவு தெரியும்''

''எங்கே அதையுந்தான் பார்த்துவிடுவோமே. உம்...''

## 3

''அந்த வீட்டையும் அங்கிருந்த 'அவளை'யும் என்னல் மறக்க முடியாது. அவள் சின்னஞ் சிறு கிளியாய், திரிந்து பறந்துவரும் சிட்டாய், மருட்சிகொண்ட மாளுய், மயிலாய், ஈற்றில் மணப்பெண்ணுய், பருவங்காட்டிய வழிநடந்தபோது' அவள்காட்டிய கோலங்கள் என்னில் நீங்கா நினைவுகளாகி விட்டன எனக்கும் அவளுக்குமுள்ள உறவு முறைகள் பலப்பல. அவள் எனக்கு அன்பூட்டிவளர்த்த தாய்; நெறிகாட்டி படர்ந்துவளர வழிசெய்த தந்தை; தன் அந்தரங்கத்தைத் திறந்துகாட்டிய தோழி; அணைத்து முத்தமளித்து என்னைப் பரவசப்

படுத்திய குழந்தை.

"என்னை மலர்வித்தஅந்தமுதற் கார்காலம், என் நினைவிலே சாகா வரம் பெற்றுவிட்டது. நான் மலர்ந்த அன்று அவள் அடைந்த மகிழ்ச்சிப் பிரவாகத்துக்கு அணையில்லை. கன்னிப்பெண்ணான அவள், குழந்தையாகமாறிக் குதூகலித்தாள்.

"நான் யாருக்காக மலர்ந்தேன்? என்ற வினவுக்குரிய விடை அந்த வேளையிலே எனக்கு விளங்கவில்லை. ஆனால், யார்தீண்டவேண்டுமென்று என் உள்ளந் துடித்ததோ, அவளே என்னைத் தீண்டினாள். மலர்களைப் பறித்துத் தன் அங்கைகளிலே தாங்கிக்கொண்டு, வீட்டினுட் சென்றாள். அங்கே பாலமுருகன் குஞ்சிரிப்போடு நின்றான். அவன் மலரடிகளில் என்னைத் தூவி வணங்கிவிட்டு, ஒரேயொரு மலரை எடுத்துத் தன் கூந்தலிலே வைத்துக்கொண்டாள். அப்போது என்றுங் கண்டறியாத சாந்தி என்னுட் படர்ந்தது. விளங்காத அந்த வினவுக்குரிய விடையும் அப்போதுதான் விளங்கியது மலர்ந்து சொரிவதிலே பேறில்லை. உரிய உரிய இடங்களுக்குச் சமர்ப்பணமாகிவிடுவதிலேதான் திருப்தி பிறக்கிறது.

"ஒருநாள் நிகழ்ந்த மங்கலப் பெருவிழாவிலே கன்னியான அவள் சதியாகித் தன் பதியைச்சேர்ந்தாள் அவளது கன்னிமைக் கனவுகள் யாவும் சங்கமித்து நனவாகிவிட்டன. இப்பொழுது ஒன்றான அவள் இல்லையாகிவிட, அவனிலே ஒன்றித்த ஒன்றாகித் தன்னை அர்ப்பணித்துவிட்டாள்.

"அப்பொழுது, என்னிலே கொள்ளை கொள்ளையாக அரும்பு கட்டி, வாய்விண்டு, மணம் பரப்பி மலர்கள் குலுங்கத்தொடங்கின. ஒன்று தானும் ஊழ்த்தமலராய் நிலத்தில் விழ அவள் தாங்கமாட்டாள். மலர்ந்த மலரிலே பாதியை ஒரு மாலையாகக் கட்டிப் பாலமுருகனுக்குச் சூட்டிவிடுவாள். ஒருமாலை கட்டித் தன் தேவன் கண்டுகளிக்கக் கூந்தலிலே சூட்டிக்கொள்வாள்.

"ஒருநாள் மாலை நேரத்திலே அவனும் அவளும் வெளியே புறப்பட்டனர். இந்த ஆறு வரும் வழியிலே, வீதியைக் குறுக்கிடும் இடத்திலே ஒரு பாலம் உண்டு. அழகு கொஞ்சும் இடம் அது. சௌந்தர்ய நர்த்தனத்தின் நிறைவை அங்குக் காணலாம். மாலை மயக்கிலே, அவனும் அவளும் ஒருவருள் ஒருவர் குடியிருந்து, வார்த்தை என்னுங் கருவி செயலற்றுவிட, மனக் கருவியாலே பேசிப் பழகிக்கொண்டிருந்தனர்.

"தூங்கிக்கிடந்த மௌனத்தைக் கலைத்து, அவளது கூந்தலில் இருந்த என்னைப் பார்த்துக் கொண்டு பேசினான் அவன்;'அர்த்த சந்திர வட்டமாகச் சூட்டப்பட்ட இந்த மாலையால் உன் அழகு பன்மடங்கு சோபித்திருக்கிறதே'. என்னிலும்பார்க்க மென்மையான அவளிதயம் அச்சொல்லைத் தாங்கிக் கொள்ள வலுவின்றி அழுதது 'என்னால் மாலையா? மாலையால் நானா?' என்று கண்ணைக்கசக்கினாள். தானேயன்றி வேறெதுவுமே அவன் மனத்திலே குடிபுகக்கூடாது என்பது, அவளது அந்தரங்கத்திலுள்ள உரிமைப் பிரகடனம். அடுத்தகணம் தான் ஆசையாகத் தொடுத்துச் சூட்டிக்கொண்ட என்னை ஆற்றில் வீசியெறிந்தாள்

உடனே அவன் சிரித்தான்; சிறிது போது கழித்து அவளும் சிரிக்கும் சத்தம் கேட்டது.

"ஆறு என்னைத் தாங்கியது. அது தன்னோடு எங்கெங்கும் என்னையும் அழைத்துச் சென்றது, எங்கெங்கெல்லாம் அது பயன்பட வேண்டுமோ அங்கங்கெல்லாம் அது சென்றது. வாய்க்கால் வழியோடி, ஏரி குளங்களை நிறைத்துவிட்டு வந்தது. அதன் பயன் கருதாக் கொடையை மாஞ்சோலைகளும் தென்னந்தோப்புகளும் செந்நெற் கதிர் சுமந்துநிற்கும் கழனிகளும் வாழ்த்துகின்றன."

4

"நீ, அவள், ஆறு... இப்பொழுதுதான் மின்னல் போல் ஒன்று என்னுள் ஒளிவிடுகிறது" என்று முணுமுணுத்ததுவனமுல்லை.

"அக்கா, ஆறு மீண்டும் என்னை அழைக்கிறது, நான் வருகிறேன்"

"தங்காய், வேண்டாம்; நீ போகக் கூடாது; போவதற்கு நான் அனுமதிக்கப் போவதில்லை"

"அப்படியென்றால்..."

"நீ பெரியவள்; உன் முன்னிலையிலே நான் மகாசிறியவள், உன்னைப் பன்முறை வணங்காது போனால் என் ஆத்மா சாந்தியடையாது"

அப்போது ஆற்றின் அலைக் கரமொன்று முல்லைமாலையை ஏந்திக் கொண்டு சென்றது. முல்லை மாலை, "அக்கா, யாராலும் எக்காலத்தும் வணங்கப்படும் தகுதி எனக்கு வேண்டாம். நான் அர்ப்பணமாகும் பேறு கிடைத்தால், அதுவே போதும்"

---

# மதிப்புரை

விவேகானந்தா திருக்குறட் கலண்டர்:
வெளியிடுவோர்: விவேகானந்தா அச்சகம் & புத்தகசாலை, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.

தமிழ் மொழிக்குத்தரணியிலே தனிச் சிறப்பைச் சிந்திக் கொண்டிருக்கும் பொதுமறையாந் திருக்குறளினை அனுதினமும் மனனம் பண்ணக்கூடிய வகையில் தன்னகத்தே அடக்கி, அமெரிக்காவிலே, கீழ்த்திசையின் ஒளியைப் பரப்பியஉதயசூரியனும் சுவாமிவிவேகானந்தரின் நாமத்தைஏந்தி 1964ஆம் ஆண்டிற்குரிய விவேகானந்தா திருக்குறட் கலண்டர் வழமைபோல அழகிய உருவில் வெளியாகியுள்ளது.

கொக்குவில் இ. சி இரகுநாதஐயர் அவர்களின் வாக்கிய கணிதமுறைப்படி கணிக்கப்பட்ட திதி, நட்சத்திரம், ஆகியவற்றைக் கொண்ட திகதித் தாட்களுடனும் பலதுறைகளிலும் சிறந்து விளங்கிய—விளங்கும் தலைவர்கள், தொண்டர்கள், கிறீஸ்தவ, சைவசமயப் படங்களைக் கொண்ட அட்டைகளுடனும் இவ்வாண்டுக்குரிய விவேகானந்தா திருக்குறட் கலண்டர் வெளியாகிப் பொலிவுடன் காணப்படுகின்றது.

"கலைச்செல்வி"க்கென அனுப்பப்பட்ட இவ்வழகிய கலண்டரை நன்றியுடன் ஏற்றுக்கொள்கின்றோம்.

மணி

# திருமண அழைப்புகள்

"நிகழும் சோபகிருது வருடம் ஆவணி மாதம் இருபத்தொன்பதாம் நாள் சனிக்கிழமை பகல் 2-28 தொடக்கம் 2-42 மணி வரையுமுள்ள தனு லக்கின சுப முகூர்த்தத்தில். முறையே எங்கள் சிரேஷ்டபுத்திரியும் சகோதரியுமான திருநிறைச்செல்வி... அவர்கட்கும். திருநிறைச் செல்வன் ... அவர்கட்கும் திருமண மகோற்சவம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் பந்துமித்திரரும் குடும்ப சமேதரராய் சமுகம் தந்து, தாம்பூலம் தரித்து, புதுமணத் தம்பதிகளை ஆசீர்வதித்து, எம்மையும் மகிழ்வித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கொண்டாட்டம் மணமகளில்லத்தில் மூன்று நாட்கள் நடைபெறும். இங்ஙனம் தங்களது நல்வரவை எதிர்பார்க்கும்,...'

கையிலிருந்த திருமண அழைப்பிதழை ஐந்தாவது தடவையாகப்படித்தேன், அதே தினத்தில் அதே 'சுபமுகூர்த்தத்தில், நடைபெறுவதாகவிருந்த மற்றும் ஆறுதிருமணங்கள் பற்றிய அழைப்பிதழ்கள் எமது 'நல்வரவை, எதிர்நோக்கிக் காத்துக் கிடந்தன. அந்த அழைப்பிதழ்களிலும் ஏறக்குறைய மேற்கண்டவாறே வாக்கியங்கள் அச்சிடப்பட்டிருந்தன. அழைப்பாளரின் கருத்து ஒற்றுமையைஎண்ணி வியந்தவாறே கற்பனையில் ஈடுபடலானேன்.

## அழைக்கின்றார், அழைக்கின்றார்

நமது வாழ்க்கையில் திருமணம் எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் திருமண அழைப்பிதழ்களும் என்றவாறு காலம் மாறிவிட்டது. குறிப்பாக கிராமப்புறங்களில் தப்பித் தவறி யாருக்கும் அழைப்புக்கிடையாமல் விட்டால் அதையே சாட்டாக வைத்து கல்யாண வீட்டிற்குப் போகாமலே இருந்து விடுபவர்கள் பலருண்டு. அழைப்புக்கிடைத்த வேறுசிலர் தபால் வினியோகத்தில் பழியைப் போட்டுவிட்டு அழைப்புக்கிடைக்கவில்லை என்று சாட்டுச் சொல்லித் தப்பிவிடுவதும் அதிசய

ரீ. பாக்கியநாயகம்

மல்லனவே அழைப்பு அனுப்புப வர்கள் தங்களது கண்களில் எண்ணெய் விட்டபடி அதிக கவனத்துடன், யார் யாருக்கு அழைப்பு அனுப்ப வேண்டும், எம் மாதிரிக் கொடுத் தனுப்பவேண்டும், என்பது பற்றி திருமணத்தினத்திற்கு மாதங்கள் முன்னரே உட்கார்ந்து திட்டம் தீட்டுதல் அவசியமாகும். அழைக்கப் படுபவர் முன்னர் குடியிருந்த வீடு, தற்போது வசிக்கும் வீடு, தெருவின் பெயர் முதலிய யாவற்றையும் நூற் றுக்கு நூறு நிச்சயப்படுத்த, மேற் கொண்டு பல துப்பறியும் நிபுணர் களையும் அமர்த்தல் அவசியம். ஏனெ னில் சிலருக்கு அழைப்பை அனுப் பியிருந்தாலும் அவர்கள் விவாகத் திற்கு வராமலிருந்து விடுகிறார்கள். காரணம் கேட்டால் "உங்களது அழைப்பு ஒருவேளை நான் முன் னர் குடியிருந்த பழைய வீட்டிற்குப் போயிருக்கக் கூடும். நான் வீடு மாறி வெகு நாளாகி விட்டதே" என்று சொல்லுகிறார்கள்

இந்தச் சங்கடங்கள் அனைத் தையும் தவிர்ப்பதற்காகவே எனது திருமணத்திற்கு ஒருவருக்கும் அழைப்பிதழ்கள் அனுப்பாமல், பத் திரிகையில் விளம்பரப் படுத்தி விடு வதே சிறந்ததென எண்ணினோம். இலங்கையின் பிரபல பத்திரிகை கள் அனைத்திலும் விவாகம் பற்றி விளம்பரம் கொடுத்தோம். திரு மணம் நடைபெற்றுச் சில நாட் களின் பின்னர் எனக்கு மிகவும் தெரிந்த பெரியவர் ஒருவரை வீதி யில் சந்தித்தேன். "என்னப்பா, எல்லோரும் காலாகாலத்தில் கல் யாணம் செய்கின்றார்கள்: நீ மாத் திரம் இன்னும் அதைப்பற்றி நினைக்கிறாயில்லையே. அந்தந்தக் காலத்தில் அந்தந்தக் கடமைகள் நிறைவேற்ற வேண் டும்" என ஓர் பிரசங்கமே அவர் செய்ய ஆரம்பித்து விட்டார்.

"உங்களுக்குத் தெரியாது போலும்: நான் கல்யாணம் செய்து மாதம் ஒன்று ஆகிவிட்டதே. எல்லாப் பேப்பர்களிலும் திருமணம் பற்றிப் போட்டிருந்தேன். நீங்கள் தான் வந்து கலந்து கொள்ள வில்லை" என்று அவரைநோக்கி நான் ஒரு போடு போட்டேன்.

அசைந்தாரா அவர். அது தான் இல்லை. "பேப்பர்லதானா போட்டாய்? எனக்கு அழைப்பு அனுப்ப உனக்கு மனம் வரவில்லை? பேப்பரை எங்கப்பா நான் பார்க் கிறது" என்றார் அந்த முதியவர்.

முகூர்த்த நாளும்
முடிவாச்சா,

திருமணம் நடைபெறும் சுப முகூர்த்தங்களைக் கணிப்பதற் கென்றே தற்போது பல வகையான பஞ்சாங்கங்கள் நமமிடையே உலா வுகின்றன. முன்பெல்லாம் சோதி டர்கள் செய்துவந்த இத்தொண் டை இப்போது பஞ்சாங்கங்கள் பறித்துவிட்டன வென்றே கூற வேண்டும். மூன்றுமாத இடை வெளிக்குப் பின்னர் ஒரு சுபமு கூர்த்தவேளை வருவதாயிருந்தால் அதே சுபமுகூர்த்தத்தில் திருமணம் நடத்திவிடப் போட்டி போட்டுக் கொண்டு பல குடும்பத்தினர் ஆயத் தங்கள் செய்வர். எனக்கு வந் துள்ள ஆறு அழைப்புக்களிலும் ஒரே நேரம் குறிப்பிடப்பட்டிருக் கிறது. ஆறு வீடுகளுக்கும் சென்று கலந்துகொள்வது எப்படி என்று உங்களிற் சிலர் எண்ணக்கூடும்

அழைப்பிதழின் கடைசி வசனத்தை மறுபடியும் சற்றுப் படித்துப் பாருங்கள். 'கொண்டாட்டம் மணமகளில்லத்தில் மூன்றுநாட்கள் நடைபெறும்".

'அன்றையத்தினம் ஆறு கல்யாண வீடுகளுக்குப் போகவேண்டி ஏற்பட்டது; அதனுல்வரமுடியவில்லை' என்ருே '' சுபமுகூர்த்தத்தன்று நான் ஊரிலில்லை! கொழும்பு சென்றிருந்தேன்' என்ருே சாட்டுச் சொல்வீர்களானுல் அது கண்டிப்பாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. இவ்வாறு பலர் சொல்லித் தப்பித்துக் கொள்வார்களென்பதை அறிந்தே, பல அழைப்புக்களில் 'கொண்டாட்டம் மூன்று தினங்கள், என்று பெரிய எழுத்தில் அச்சிட்டு விடுகிருர்கள் போலும்! மூன்று தினங்களில் உங்களுக்கு முப்பது கல்யாணவீடுகளுக்குப்போக நேரமிருக்கிறதே!.

### வாராய், நீ வாராய்

அழைப்பிதழை மீண்டும் கவனித்தோமானுல், அழைப்பவர்களது உறவுமுறைகள் அழுத்தமாக அச்சிடப்பட்டிருப்பதையும்அவதானிக்க முடிகிறது. 'எங்கள் சிரேஷ்ட புத்திரியும் சகோதரியுமான' என்று காணப்பட்டால், மணப்பெண்ணினுடைய பெற்ருேரும் அவரது சகோதரருமே நமமை அழைத்திருக்கிருர்களென்பது தெரியும். 'சிரேஷ்ட' என்பதிலிருந்து அவரது மூத்தமகளுக்கு இப்போதுதான் கல்யாணம் நடைபெறுகிறதென்றும், இது வரைதான் வேறெந்த குடும்ப வைபவங்களையும் நடத்தி சனங்களை அழைக்கவில்லையென்றும பெண்ணின் தந்தை அழாக்குறையாகக் கூறுவதையும், பெண்ணுடன் பிறந்த சகோதரன் 'நானிருக்கிறேன் எனவே எதற்கும் பயப்படவேண்டாம்' என்று மாப்பிள்ளையைத்தேற்றுவதையும் மறைமுகமாக அவதானிக்க முடிகின்றதல்லவா?

'சிரேஷ்ட' என்பதில் இன்னெரு உட்கருத்தையும்நாம் விளங்கிக் கொள்ளலாம். 'சிரேஷ்ட' என்னும் போது 'கனிஷ்ட' என்பதும் அக்குடும்பத்தில்இருங்கிறதென்பது புலனுகின்றது. 'எனது மூத்த மகளின் விவாகத்திற்கு மாத்திரமல்ல இனிமேல் நடைபெறவிருக்கும் எனது இளைய மக்களது திருமண வைபவங்களுக்கும் காலாகாலத்தில் தாங்கள் வந்து சிறப்பிக்க வேண்டுமென்று இப்போதே பெண்ணின் தகப்பனுர் உங்களுக்கு அழைப்பு விடுகிருர், 'சிரேஷ்ட' என்ற பதத்தின் மூலம்!.

அழைப்பிதழ்களில், 'தாங்களும் தங்கள் பந்து மித்திரரும் குடும்ப சமேதராய்' என்று போடப்பட்டிருப்பதைக் கண்டு, தங்களது குழந்தை குட்டிகள், உற்ருர் உறவினர் அனைவரையுமே கல்யாணவீட்டிற்கு அணியாக அழைத்துச் செல்லும் ஒரு சிலரும் நம்மிடையே உண்டு. கல்யாணப் பலகாரங்களை தங்கள் பிள்ளை குட்டிகள் ஓர் கை பார்க்க வேண்டுமென்ற குறிக்கோள் இவர்களுக்குஇல்லாமலிருந்தாலும், இந்த அணியைக் கண்டு பெண்ணின் தகப்பனுர் மூர்ச்சையேபோட்டுவிடுவது முக்காலும் உண்மையாகும். பலகாரத்தைப் பஸ்பமாக்குவது ஒருபுறமிருக்க, பிள்ளைகளின் கும்மாளத்தைச் சகிக்க எந்தப்பெரியவரால்

அங்கு முடியும்? ஒலி பெருக்கியின் சப்தம்,இவர்களின் முன்னிலையில் நிச்சயம் பிச்சைவாங்கியே தீர வேண்டும்!.

## கல்யாண சமையல் சாதம்

'சமூகம் தந்து' என்ற சொல்லுக்கு பின்னுல் 'தாம்பூலம் தரித்து என்ற சொல்லைக் கருத்தாய்ப்படிப்பவர்கள் அபூர்வம்.நாகரீகம் மிகுந்துள்ள இந்நாட்களில் கல்யாண வீடுகளுக்கு நாம் சென்ருல் 'சிகரெட் தரிப்பதையே அதிகம் விரும்புகின்ரோம். பிள்ளை குட்டிகளுடன் நீங்கள் சென்று விவாக வீட்டில் விருந்துக்கு அமர ஆயத்தப்பட்டீர்களானுல் அப்புறம் பெண்வீட்டார் பாடு அதோகதிதான்.அதைத் தவிர்ப்பதற்காகவே திருமண அழைப்பிதழ்களில் பலர் 'தாம்பூலம் தரிப்பதுடன் (சாப்பாட்டிற்குத்தரித்திராமல்) சென்று விடுங்கள்" என அன்புக் கட்டளையிடுகின்றனரே!

கடைசியாக, 'புதுமணத்தம்பதிகளை ஆசீர்வதித்து, எம்மையும் மகிழ்வித்தேகுமாறு' என்ற பதத்தைப் பார்ப்போம். புதுமணத் தம்பதிகளை நாம் ஆசீர்வதிக்கவே வேண்டும். முற்காலத்தில் கல்யாண வீடுகளில், 'பதினுறும் பெற்று பெருவாழ்வு வாழ்க' என்று ஆசீர்வதிப்பதே பெரிய ஆசீர்வாதமாகவிருந்தது ஆனுல் இந்த பதினுறுபெறுங்கொள்கை, இக்காலத்துக்குச் சற்றுமே உகந்ததாகத்தெரியவில்லை. வாழ்க்கைச் செலவு'புளூபு' காய்ச்சல் போல் ஏறிக்கொண்டு வரும் இந்நாட்களில் இரண்டு பிள்ளைகளைப் பெற்றுத்தாபரிப்பதே பெரும்சிரமமாயிருக்கிறது. பதினுறு பெற்றுவிட்டால் கேட்கவா வேண்டும். எனவே 'பதினுறும் பெற்று வாழ்' என்று இந்தக்காலத்தில் வாழ்த்துகிறவர்கள், உண்மையில் பெண்வீட்டார்மீது கொண்ட ஆத்திரத்தினுலே அவ்வாறு கூறுகின்றனர் போலும். பல பிள்ளைகளைப் பெற்று, வறுமையில் உழன்று, மிகவும் கஷ்டப்படட்டும் என்பதே அவர்களது உட்கருத்தாகும்!

'எம்மையும் மகிழ்வித்தேகுமாறு எனப் பெண் வீட்டார் குறிப்பிடுவது, தாங்கள் அதுவரை சோகத்தில் தத்தளிப்பதை எடுத்துக் காட்டுகின்றது. பெண்ணைப்பெற்றவரென்ருல் சோகத்திற்குக் கேட்கவா வேண்டும். போதாக்குறைக்கு ஓர் கல்யாணத்தை நடத்துவதென்ருல் அங்கு ஏற்படும்செலவு கொஞ்சநஞ்சமானதா. எனவே இவ்வித மனக் கவலைகளைத் தீர்த்து, தங்களையும் மகிழ்வித்துப் போகுமாறு அவர்கள் நம்மைக் கேட்கின்றனரல்லவா!

இதை எழுதும்போது எனது மனைவி இன்றையத் தபால்களை என்னருகே வைத்துச் செல்கிருள். ஆம்: வந்த கடிதங்களில், ஓர் புதுமனைப் புகுவிழா அழைப்பும், ஓர் சிசு காதணி விஞ்ஞாபன அழைப்பிதழும் காணப்படுகின்றன. எமது நல்வரவை எதிர்பார்த்து ஏங்கும் இவர்களை மகிழ்வித்து தாம்பூலம் தரித்து ஏக நான் ஆயத்தமா என்று மணிபர்சை பார்த்துச் சொல்கிறேன். சற்றுப் பொறுங்கள்


# ஏன் மறைத்தேன் என் பெயரை?

எழுத்தாளர்கள் புனைபெயருக்குள் மறைவதற்கும், ஒரு குறிப்பிட்ட புனைபெயரைச் சூடுவதற்கும் தகுந்த காரணம் இருக்கின்றதா என்ற ஆராய்ச்சியில் இறங்கினோம். சுவையான விளக்கங்கள் கிடைத்தன. ஐந்து எழுத்தாளர்கள் தமது காரணங்களை இங்கே விளக்குகின்றார்கள். உதயணன், புத்தளம் கச்சேரியிலும், அன்புமணி மட்டக்களப்புக் கல்வியலுவலகத்திலும், யாழ் நங்கை வீரகேசரியிலும் பணிபுரிகின்றார்கள். செங்கை ஆழியான், செம்பியன்செல்வன் ஆகிய இருவரும் இலங்கை பல்கலைக் கழக மாணவர்கள்.

கலைச்செல்வி பொங்கல் மலர் - எழுத்தாளர் பக்கம்.

# ஒரு கதை கேட்கிறீர்களா, கதை?

கலைச் செல்வி ஆசிரியர் என்னிடம் கதை கேட்கவில்லை. 'உமது பெயரை ஏனய்யா மறைத்தீர்' என்றுதான் கேட்டார். இது ஒரு அநியாயமான கேள்வி. எனது பெயரை நான் எப்படி மறைக்க முடியும்? நான் மட்டும் கொஞ்சம் மறைந்து நிற்கிறேன் – அவ்வளவு தான். அதற்காக, 'அப்படியா சங்கதி, அதைப்பற்றி எழுதும் ஒரு கட்டுரை' என்று என் உயிரை வாங்கியிருக்க வேண்டாம். "ஐயா ஆசிரியரே, என்னை வெளியே காட்டிக்கொடி கட்டிப் பறக்க விரும்பவில்லை – அதனால் மறைத்தேன். என்னை மறைத்துக் கொள்ளாமல்இருக்க முடியவில்லை – அதனால் மறைந்தேன். இப்போதைக்கு இது போதும். 'சட்டைப்பிடி' யை விட்டு விடுங்கள்".



இனிக் கதைக்கு வருவோமா, கதைக்கு!

ஒரு ஊரிலே சிவஞானம் சிவஞானம்! என்றுஒருவன் இருந்தான். அவனுக்குப் பூங்கோதை, பூங்கோதை என்று ஒரு மனைவி இருந்தாள். அவள் ஒரு குருடி. அவர்களுக்குச் சமீபத்தில் ஒரு குழந்தை பிறந்தது. அதற்குச் சரசு என்று பெயர்வைத்தார்கள். இவ்வளவுதான் தற்சமயம் சொல்லக்கூடிய அவர்களுடைய குடும்ப விபரங்கள்.

அவன் தனது ஓய்வு நேரத்தில் வீட்டுக்குப் பின்புறம் இருந்த லத்தைக் கொத்திவிட்டுச் சில காய்கறி விதைகளைத் தூவிவிட்டான்.

சில விதைகள் வெடித்து முளைத்து உன்னைப்பார் என்னைப் பார் என்று வளர்ந்து வந்தன. சில செடிகளைப் பொறாமையாலோ, ஆற்றாமையாலோ –சே, அப்படியிருக்காது – அறிவில்லாத தன்மையால் 'மிருகங்கள்' அழித்து விட்டன. சில செடிகள் வளரவும் முடியாமல் சாகவும் முடியாமல் வளர்ந்தும் வளராமல் செத்தும சாகாமல் நின்று அத்தோட்டத்திற்குத் திருஷ்டி கழித்தன. சில விதைகளைப் பற்றிய செய்தி இதுவரை இல்லை.

காலம் வந்ததும் சிவஞானம் ஒரு பெரிய கூடையைத் தூக்கிக் கொண்டு தோட்டத்திற்குள் நுழைந்தான். கூடை நிறையக் காய்களைப்பறித்துப் போட்டதும் அவனுக்கு ஒரு இளம் எழுத்தாளனுக்குத்தனது முதற்படைப்பைப் பத்திரிகையில் கண்ட பெருமை ஏற்பட்டது. அதை நாலு பேருடன் பகிர்ந்து கொண்டாலொழிய நித்திரை வர மாட்டாது போலவுமிருந்தது. அதனால் தனது தேவைக்கு எடுத்துக் கொண்டது போக மிஞ்சியதை பக்கத்து வீடுகளில் வசித்த பரமசிவத்துக்கும், பக்கிரிசாமிக்கும், பார்வதிப் பாட்டிக்கும், பவளக்கொடிக்கும் அனுப்பி வைத்தான்.

"காய்கறி பயிரிட இந்த மண் ஏற்றதல்ல. அதனால்தான் கத்தரிக்காய் சளசளக்கிறது. நீங்கள் நல்லவிதைவாங்கியிருக்கமாட்டீர்கள். சமையலுக்குவாங்கி வந்த காய்களில் பழுதானவற்றைக்காயவைத்துப்போட்டிருப்பீர்கள். அதனால்தான் வெண்டிக்

காய் வழுவழுக்கிறது,"என்பது பரமசிவத்தின் கருத்து.

"நீங்கள் பார்க்கும் வேலைக்கும் தோட்ட வேலைக்கும் வெகுதூரம். நீங்கள் சரிவரத் தோட்டத்தைக் கவனித்திருக்கமாட்டீர்கள். அதனால் தான் புடலங்காயில் புழுவிருக்கிறது, பாவக்காயில் கசப்பிருக்கிறது" என்பது பார்வதிப்பாட்டியின் விமர்சனம்.

'சிவஞானமாவது பயிர் செய்வதாவது. எங்காவது என்னைப் போல நுழைந்து திருடியிருப்பான்' என்று பக்கிரிசாமி நினைத்துக்கொண்டாலும், "ஆகாகா ஓகோகோ, மிளகாய் மட்டும் ஆளளவு உயரத்திற்கு நிற்கிறதே, உங்கள் திறமை யாருக்கு வரும்" என்று வெளியே சொல்லிக் கொண்டான்.

பவளக்கொடியோ அப்படியும் சொல்லவில்லை. இப்படியும் சொல்லவில்லை. பேசாமல் இருந்துவிட்டாள்.

நாட்கள் போய்விட்டன.

ஒரு நாள் பரமசிவம் ஓடி வந்தார். "நீங்கள் ஸ்டேசன் பக்கம் போனீர்களா? உங்களுக்கு ஒரு பார்சல் வந்திருந்ததே" என்று சிவஞானத்திடம் சொன்னார். பூங்கோதையின் தகப்பனார் பார்சல் ஒன்றை அனுப்பியது உண்மைதான். சிவஞானம் போய் அந்தப் பார்சலைக் கொண்டு வந்ததும் உண்மைதான்

எழுத்தாளன் புனைபெயர் என்ற மாயக் கயிற்றை வாசகன் கையில் தந்து தனது படைப்பான ஏணியில் ஏறவிடுவதுபோல சிவஞானம் ஒரு கதை புனைந்தான். 'மாமா யாழ்ப்பாணத்திலிருந்து கொஞ்சம் மரக்கறி அனுப்பியிருக்கிறார்" என்றுசொல்லித் தோட்டத்துக் காய்களைப் பறித்து முன்போல் நாலு வீட்டுக்கும் அனுப்பிவைத்தான்.

பரமசிவம் நல்லவற்றைப் பற்றி மட்டுமே சொன்னார். ஆதாரங்களோடு சொன்னார். ஒரு படி மேலேயே சொன்னார். பார்வதிப் பாட்டிக்குக் கெட்டதைப்பற்றி மட்டுமே பேசிப்பழக்கம். ஆகையால் அவள் கெட்டவற்றை மட்டுமே குத்திக் காட்டினாள். ஆதாரங்களோடு காட்டினாள். ஒரு படி இறக்கியே காட்டினாள். 'அன்றைக்கு இவன் திருடினான். இன்றைக்கு மாமா திருடியிருக்கிறார். அவ்வளவுதான் வித்தியாசம்' என்று பக்கிரிசாமி மனதில் நினைத்துக்கொண்டாலும், "அடேயப்பா, உங்கள் மாமாவின் திறமை யாருக்கு வரும்" என்று வெளியே சொல்லிக்கொண்டான். பவளக்கொடி நல்லதைக் கொள்வதாம் கெட்டதைத் தள்ளலாம் என்று எண்ணினாளோ என்னவோ, பேசாமல் இருந்துவிட்டாள்.


சிவஞானத்திற்கு இப்பொழுது நிம்மதி கிடைத்தது. ஏன் கிடைத்தது? எப்படிக் கிடைத்தது? ஏனோ கிடைத்தது. எப்படியோ கிடைத்தது............!.

நாளடைவில் சிவஞானத்தின் நாடகம் எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. தெரிந்தும் சிவஞானம் உட்பட யாருக்கும் கவலைப்படத் தோன்றவில்லை. ஏன் தோன்றவில்லை? எதற்காகத் தோன்றவில்லை? ஏனோ தோன்றவில்லை...எதற்காவோ தோன்றவில்லை...!

கலைச்செல்வி ஆசிரியர் கேட்ட கேள்விக்குச் சரியான பதிலைச் சொல்லிவிட்டேனா,அல்லது இன்னும் சொல்லவேயில்லையா? சொல்லிவிட்டேன் என்று எண்ணுபவர்களுக்கு முழுக்க முழுக்கச்சொல்லிவிட்டேன். சொல்லவில்லை என்று கருதுபவர்களுக்கு ஒன்றுமே சொல்லவில்லை - சொல்லத் தேவையில்லை!


# ஞானோதயம் ஏற்பட்டது!

மிகச் சிறு வயதிலிருந்தே நான் 'கல்கி' 'ஆனந்தவிகடன்' முதலிய பத்திரிகைகளில் வரும் கதைகளை ஒன்றும்விடாமல் படிப்பது வழக்கம். அவற்றை எழுதியதாகக் குறிப்பிடப் படும் பெயர்கள் மிக வேடிக்கையாகவும் விசித்திரமாகவும் இருக்கும். 'கல்கி' 'லாங்கூலன்', 'கர்நாடகம்', 'சசி' 'எல்லார்வி' 'ஆர்வி' முதலிய பெயர்கள் அர்த்தமற்றவையாக இருந்தன. பின்னால் இவையெல்லாம் புனைபெயர்கள் என அறிந்து கொண்டேன். அழகான சொந்தப் பெயர்களை விட்டு இப்படியான கண்ராவிப் பெயர்களைப்போடுகிறார்களே என்று எனக்குள் நானே பச்சாத்தாபப்பட்டுக்கொள்வேன். அப்போது நான்பாடசாலையில் நடமாடிய கையெழுத்துப் பத்திரிகைகளில் எழுதுவது வழக்கம். திடீரென்று எனக்குஒருஞானோதயம் உண்டாகியது. எழுத்தாளன் என்றால்புனை பெயர் இருக்க வேண்டும். அப்போதுதான் அச்சுப் பத்திரிகையில் எழுதுபவர்களைப்போல இருக்கும் என்ற எண்ணம் தோன்றியது. 'என்ன பெயர் வைக்கலாம்?' என்று ஆராயத் தொடங்கினேன். என்னுடைய பெயர் அப்போது 'சிவகப்பிரமணியம்' என்று வழங்கியது, சுருக்கமாக 'ஆர். எஸ். எஸ். மணியம்' என்று கையெழுத்துப்போடுவேன். நண்பர்கள் நாவில் அது 'மணி' என உலவி வந்தது. விடுமுறையின்போது நண்பன் ஒருவன் எனக்கு எழுதிய கடிதத்தில் 'அன்பின் மணி ...என்று அ[illegible]திருந்தான். அவனுக்கு நான் [illegible]திய பதிலில் கீழே கையொப்பம் இடும்போது "இப்படிக்கு அன்பு, மணி" என்று எழுதினேன். அதைச் சேர்த்து வாசித்தபொழுது அதில் எனக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டது. "அன்புமணி" "அன்புமணி" என்று எனக்குள் பலதடவை சொல்லிப் பார்த்தேன். அதில் புதிய புதிய அர்த்தங்கள் எல்லாம் தோன்றின. எல்லாவற்றுக்கும் மேலாக என்னுடைய குணவிசேஷத்துக்கு அதுமிகவும் பொருத்தமாக இருந்தது. பாடசாலையில் உள்ள அதிபர் ஆசிரியர், மாணவர் அனைவரது அன்புக்கும் நான் பாத்திரனாக இருந்தேன். அது போலவே நானும் எல்லோரிடத்தும் அன்பு செலுத்தினேன் (இப்போதும் என்னோடு சம்பந்தப்பட்டவர்களுடன் அப்படியேதான்.) இதையே புனைபெயராக வைத்துக் கொண்டால் என்ன என்று தோன்றியது. அது முதல் அப் பெயரிலே கதைகளை எழுதி வந்தேன், இதைப் போலவேதான் மற்றைய புனை பெயர்களின் பின்னாலும் ஏதாவது ஒரு கதைஇருக்கும்என்று உணர்ந்து கொண்டேன். கண்ராவித் 'தோற்றம்' கொண்ட புனை பெயர்கள் எல்லாம் அர்த்தமுடையவையாகத் தோன்றின. ஆளுக்கு மதிப்புக் கொடுக்காமல் எழுத்துக்கு மதிப்புக் கொடுப்பதற்கு புனைபெயர் உதவுகிறது என்ற நம்பிக்கை ஏற்பட்டது ஆனால் ஈழத்துப் பத்திரிகை உலகில் இன்று நிலைமை நேர்மாறாக இருப்பதை நோக்கும்போது 'ஏன் மறைத்தேன் என் பெயரை?' என்று சுழிவிரக்கப்படத் தோன்றுகிறது.



# "யாழ்நங்கை"யானேன்!

எஸ். எஸ். ஸி பாஸ் செய்தாயிற்று. அடுத்தபடியாக என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தகாலம். கதை எழுதும் ஆர்வம் என்னைப்பிடர் பிடித்துக்ந்திகொண்டிருந்தது. தென்னகத்து பிரபல பெண் எழுத்தாளர்களான 'லக்ஷ்மி' ராஜம் கிருஷ்ணன், அனுத்தமா, சூடாமணி, ஆனந்தி, 'குகப்பிரியை', ரங்கநாயகி முதலிய பலர் என்முன்னே தோன்றித் தோன்றி என் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டிருந்தார்கள்



அவர்களைப் போல நானும் ஏன் எழுதக் கூடாது? ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை பெண்கள் எழுத்துத்துறையில் அக்கறை காட்டியதாக எனக்குத் தெரியவில்லை. ஏன், இன்றுங்கூடப் பெண் எழுத்தாளர்களை விரல் விட்டு எண்ணக்கூடிதாக இருக்கும்போது, ஆறு, ஏழு வருடங்களுக்கு முன்பு நிலைமை எப்படி இருந்திருக்கும்?

அன்று நானறிந்தவகையில் "புதுமைப்பிரியை" என்ற ஒரு பெண்மணிதான் எழுத்துத்துறையில் ஈடுபட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவரை நான் நேரில் காணவில்லை இருப்பினும் அந்தப் பெயரை என் மனத்தில் ஒரு துணையாக வைத்துக்கொண்டேன். துணிவு பிறந்தது. எழுதவேண்டியதுதான். என்ன பெயரில்எழுதுவது? சொந்தப் பெயரில் ஆரம்பிக்கலாமா?

"வேறே வேலையில்லாமல் கதை எழுதப் போகிருயா?" என்று, என்னை ஒரு தினுசாகப் பார்ப்பவர்களும், "போடி பைத்தியம்! கதை எழுதப் போகிருவாம் கதை!" என்று 'கிண்டல்' செய்பவர்களுமே என் சுற்ருடலில் இருக்கும்போது,எனக்கு எப்படிச் சொந்தப்பெயரில் எழுதத் துணிவுவரும்.? கற்பனையில் உதிப்பவைதான் என்ருலும், உருவகப்படுத்தும் பாத்திரம் நானுகவும், எழுதுகிற ஒவ்வொரு வசனத்தின் கருத்தும் நான் செய்பவற்றைப் பிரதிபலிப்பது போன்றும், என்னைத் தெரிந்தவர்களுக்கு தோன்றினல்—எப்படி இருக்கும்? என்ற கற்பனைப் பயம்வேறு என் சொந்தப் பெயரை எழுத்துத் துறையில் நினைக்காமல் செய்துவிட்டது.

ஆதலினல் புனை பெயருள் புகுந்து எழுதவிரும்பினேன். பின்னர் கொஞ்சக்காலம் போனல் எல்லாந் தெரியப்படுத்தினல் போயிற்று என்பது என் நினைப்பு. ஆனல் இலக்கிய ரசிகர்கள் எழுத்தாளர்கள் பற்றிய விஷயங்களை மணந்து மணந்து பிடித்துவிடுகிருர்கள் என்ற ரகசியம் அப்பொழுது எனக்கு எங்கே தெரிந்திருந்தது?

அது சரி. என்ன பெயர் வைக்கலாம்? ஏதாவது ஒரு "பிரியை" என்று வைக்கலாமா? சே! மற்றவர்களை ஏன் அநாவசியமாகக் 'காப்பி' அடிக்கவேண்டும்? சொந்தமாக நமக்கு மூளை கிடையாதோ? நானும்

ஒரு புதுமைப்பிரியைதான் என்றாலும், அதேசமயம் சில விஷயங்களில் பழமைப்பிரியையுங் கூட. அதனாலே இரண்டையும் கைவிடாத பெயராக வைத்துக்கொள்ளத் தீர்மானித்தேன்.

அப்பொழுது 'சோமு'வின் 'கடல் கண்ட கனவு' கல்கியில் தொடர் கதையாக வந்துகொண்டிருந்தது. யாழில் இன்னிசை மீட்டி கதாநாயகனைக் கவர்ந்த ஒரு நங்கை என்னை யும் கவர்ந்து விட்டாள். அவள் பெயரைக் கவர நான் ஆசை கொண்டேன்.

யாழ்மீட்டிப் பரிசு பெறப்பட்ட தல்லவோ யாழ்ப்பாணம்? அந்த யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்த பெண்ணல்லவோ நான்? அப்படியாயின் நானும் "யாழ்நங்கை" தானே! சபாஷ் ஆயிற்று! நான் 'யாழ்நங்கை' யானேன்!

# இரண்டாம் அவதாரம்.

அப்படியொன்றும் பாரதூரமான இரகசியமில்லை; எழுத்தாளன் எனப்படுபவன் புனைப்பெயருள் மறைந்திருந்து எழுதினால்தான் சிறப்பு என்றோ, அவ்வாறெழுவது ஒரு 'பாஷன்' என்றோ கருதுபவனல்லன் நான். என் சிறுகதையையோ, நாவலையோ, படித்துவிட்டு, என்னையறிந்தவர்கள் என்னை யார் என அறியாமலேயே பாராட்டி, பப்பாசி மரத்தில் ஏற்றி விடவேண்டும் என்று விரும்பியவனுமல்லன்.

அப்படியானால்—

ஏன் மறைத்தேன், என் பெயரை?



பூவை எஸ். ஆறுமுகம் கூறுவது போல, இந்த எழுத்தாளன் இருக்கின்றானே, அவனும் ஒரு பிரம்மா தான்— இண்டாவது பிரம்மா. எனக்கு இந்தப் 'பிரம்மாக்களி'ல் எல்லாம் நம்பிக்கைகிடையாது.

இந்தப் பிரம்மாக்கள் இருக்கின்றார்களே அவர்கள் நேரத்திற்கேற்ப, இடத்திற்கேற்பப் பல அவதாரங்கள் எடுக்கக்கூடியவர்கள். தாம் படைத்த படைப்புகளுக்கு 'வக்காலத்து' வாங்கவும், தமக்குத்தாமே 'முதுகு சொரியவும்' பல புனைப்பெயர் அவதாரங்கள் எடுத்து வருபவர்கள். தம்மைத் தாமே தூக்கி எடைபோடும் (அவர்கள் பக்கம் சாயும் தராசு) நவீன 'புனைப்பெயர் விமர்சகர்கள்!'

—இந்த 'அவதார புருசர்களைப்' பற்றி நானறிய நேர்ந்த, எழுத்துலகில் ஈடுபட்ட என் ஆரம்பகாலத்தில், நானும் எண்ணினேன்.—புனைப் பெயரில் எழுதினால், இன்னொரு புனைப்பெயரில், அல்லது சொந்தப் பெயரில், என் படைப்புகளுக்கு, மற்றவர்கள் செய்வதுபோல, நானே 'வக்காலத்து' வாங்கலாம் என.

கண்ணன் ஓர் அவதாரபுருஷர்; பல அவதாரங்கள் புனிதமான பல நோக்கங்களுக்காக எடுத்தவர். அப்படியாயின் நான் ஏன் எடுக்கக்கூடாது, என் 'படைப்பிற்கு' இலக்கிய மதிப்பீடுசெய்ய?

'செங்கை'களையுடைய விஷ்ணு ஓர் 'ஆழி' வாசி.

நான்என் பெயரை மறைத்ததற்குரிய முக்கிய காரணமிதுதான்.

ஆனால், என்படைப்பிற்கு நானேசிரஞ்சீவித்தன்மை வழங்கும் துரதிர்ஷ்டமான நிலை—மிகக் கேவலமான நிலை இதுவரை உருவாகவில்லை; அத்தகைய நினைவின் சிறு எச்சம்கூட இன்றெனக்கில்லை.

—என் மூத்த அண்ணருக்கு ஒருபுனைபெயர், புதுமைலோலன் அண்ணருக்கு ஒரு புனைபெயர் என்றால் தம்பிக்குமேன் ஒரு புனைபெயர்இருக்கக்கூடாது என்ற ஓர் எண்ணமும் என்பெயரைமறைக்கத்தூண்டியது.

கடைசியாக ஒன்று—செங்கை ஆழியான் என் இரண்டாவது புனைப்பெயர் அவதாரம். முதலாவது அவதாரத்தை இங்கு நான் சொல்லத் தயாராகவில்லை; அதீத காதலின் விளைவு அது. இரண்டாவது அவ

தாரத்திற்குப் பின்னும் சில அவதாரங்கள் எடுத்திருக்கின்றேன். அவை ஒன்றும் உங்களுக்கு வேண்டாம்.


—உங்களைப்பொறுத்த மட்டில் நான் 'செங்கை ஆழியானு'கவே இருந்து விடுகின்றேன்.

# வரலாறு இதுதான்!

'தான்'னின் 'நானை' மறைப்பது ரிஷிகள் செயல், 'என்'னின் 'நானை' மறைக்க வலுவற்ற நான்என் 'பெயரை'மறைத்தேனு? என்னைப்போன்றவர்களின் பெயர்மறைப்புக்கு நோக்கம் மூன்று.

வெட்கம். காப்பு. 'பாஷன்'—

நான் எழுத ஒருபொழுதும் வெட்கப் பட்டதில்லை, ஏனெனில் 'அரிச்சுவடி'யை சரியாக- முறையாக — கற்காத 'படிக்காதமேதை'களும், எழுத வெட்கப்படாதபோது, நான் எதற்காக வெட்கப்பட வேண்டும்? 'அஞ்சுதல் அஞ்சாமை' முட்டாள்களின் செயல்என்கிறீர்களா? நானும் ஒப்புக் கொள்கிறேன்.



'அப்படியானுல் நீங்களும்...'

'ஏன் இழுக்கிறீர்கள், கேட்டு விடுங்களேன் 'முட்டாளா?' என்று! இவர்களுக்கும் எனக்கும் பலத்த வேறுபாடுண்டு. இவர்களின் 'அபூர்வ குண இயல்பு'களில் ஒன்றுகூட எனக்குக் கிடையாது.

இலக்கியக்கூட்டமென்ருல், கூழ் முட்டை சகிதம் செல்லல்.

பிறன் மனைவியைப்பற்றி, அவள் கணவனுக்கே மொட்டைக்கடிதம் எழுதல் [இதுவே இலக்கியசேவையின் உச்சக்கட்டம்]

தன்னினத்தானையே காட்டிக் கொடுத்தல்.

மாறுபட்ட கருத்துடையானை காடையர்கொண்டு தாக்கல்.

அத்துடன், இவர்கள் இலக்கியம்பற்றி—அரைவேக்காட்டு உணர்வில் தெரிவிக்கும் கருத்துகளையும், குண ஆய்வு முறைகளையும் கவனிக்கும்போது—

தந்தையிடம் உள்ள ஆத்திரத்தை, அவன் மகனிடம் தீர்க்க முற்படும் கயவர்களைப்போன்று— 'எழுத்தை' விட்டு விட்டு 'எழுத்தாளனை' விமர்சிக்க (!) முனையும்தரங்கெட்ட கூட்டம் 'எழுத்தாளர்கள்தாமே!'— எனக்கோஷிக்கும் போது—

நான் சுத்த 'முட்டாள்'களின் கூட்டத்திலிருந்து நழுவி விடுகிறேன்.

நான் 'பாதுகாப்பு'க்காக மறைத்தேனு?.

புனைபெயருக்கும் பாதுகாப்புக்கும் இன்று சம்பந்தமில்லாதபடிசெய்து விட்டார்கள், நம்மதிப்பிற்குரிய பத்திரிகையாசிரியர்கள். புனைபெயரையும் புகைப்படத்தையும் ஒன்ருகப் பிரசுரித்துவிடும்போது 'காப்பு' அல்லவா மறைந்துவிடுகின்றது.

இன்று எழுத்தாளர்களுக்கு ஆபத்து வாசகர்களால் ஏற்படுவதில்லை. [ஏனென்ருல் அவர்கள் தரங்கெட்ட கதைகளை வாசிப்பதுமில்லை. உலகிற்கு 'போதிக்கும்' புத்திசாலிகளின் உன்னத நடவடிக்கைகளிலும் ஈடுபாடுகொள்வதில்லை. வாசகர்கள் மிக மிகப் புத்திசாலிகள்.] ஆகவே, ஆபத்து சக எழுத்தாளர்களா

லேயே(?) வருகின்றது. இவர்களிடம் புனைபெயர் வெற்றியளிப்பதில்லை என்பதற்கு—

'எவ்விடத்து என்னைக் கண்டாலும் என்னை அடித்துத் துன்புறுத்த, ஓடிவரும் சகோதர எழுத்தாளர்களும் பயங்கர எச்சரிக்கைகளை' விடுக்கும் சக எழுத்தாளர்களும், அவர்கள் அனுப்பும் 'ஏவுகணைகள்' என்னிடம் நாற்சந்திகளில் நடந்துகொள்ளும் தரங்கெட்ட, அசிங்கமுறைகளும், இதற்கு—(பாவம்! இவர்கள் ஏவுகணைகள்—படிப்புவாசனையற்றதுகள். மன்னிப்போம்!)—

—யதார்த்தச் சான்றுகளாகும்,

'பாஷன்' காரணமோ என்றால் அதுவுமில்லை. தன்பெயரை மறைத்து வாழும் கொலை, கொள்ளைக் கூட்டத்தாரின் செயலே, நம்மவரிடையே பாஷனாகலாம், கொலை, சொள்ளைக் காரர்களின் செயலைப் பாஷனாக்க நான் பைத்தியக்காரனல்லவே!

ஆகவே, நான் ஏன் மறைத்தேன் என் பெயரை!

ஒரு நாட்டின் முன்னேற்றத்தையோ, அதன் சீர்கேட்டையோ அறியவேண்டுமானால் அந் நாட்டின் பலதுறைகளின் வரலாற்றையும் ஓரளவு நாம் அறிந்தவர்களாக இருக்கவேண்டும். அந்த எண்ண உணர்வின் ஊற்றில் என் மனத்தைக் கவர்ந்து 'வரலாறு'.

வரலாற்றிலே எத்தனையோ அரசர்கள்! அவர்களில் தலையாயவர்களாக என் முன்னே காட்சியளித்தவர்கள் - செம்பிய குலச்செம்மல்கள் இவர்கள் ஆட்சி தமிழகத்தின் பொற்காலத்தைச் சிருட்டித்தது. மற்றும் பல வீர அரசர்கள் ஜெயக்கொடி எழுப்பி; தன்னிகரற்று சிறு காலப் பொழுதில் ஆட்சி செலுத்தி இருந்தாலும் அவர்கள் அன்னியராகவோ' கலப்புச்சாதியினராகவோ விளங்கினர். ஆனால் — செம்பியர்குலமோ - தமிழ்ப்பரம்பரையாக மிளிர்ந்தது.

'செம்பிய குலமே! நீ ஒரு பொற்காலத்தையே சிருஷ்டித்த போது நான் எதைச் சிருஷ்டிக்கப் போகிறேன்!'—

நினைப்பாவது உயர்ந்தாக இருக்கட்டுமே!

நான் சின்னஞ் சிறு வயதிலே அன்னையை இழந்து - அவள் முகம் காணாமலே பிறந்து வளர்ந்த எனக்கு அன்னைப்பாசம் இது தான் என்று உணர்விலும் உயிரிலும் இரண்டறக் கலக்க ஊட்டிய ஒரு ஜீவன் என்னை அடிக்கடி அன்புடன் அழைக்கும் பாசத்தின் செல்லக் குரல் — 'செல்வா!'

செல்வா என்றாலே என் நினைவில் 'இனிப்பு' தித்திக்கும்.

செம்பியன் - என் இலட்சிய நோக்குத் தளம்.

செல்வன் - என் நலன் கருதும் ஜீவக் குரல்,

பெயர் மறைப்பில் பிறந்தான்— 'செம்பியன் செல்வன்!'

---



**புதிய விற்பனையாளர்.**

**ஸ்ரீ கணேசன் ஸ்டோர்ஸ்**

பிரதான வீதி, டிக்கோயா.

# கலைகளின் உறைவிடங்கள்

பாரத நாட்டில் கலைகள் வளர்ந்த வகையே தனிப்பட்டது. பாரத மக்களின் வாழ்க்கையின் அம்சம் ஒன்றும் ஒவ்வொரு கலையைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாய் விளங்கியதைப் பாரதநாட்டின் வரலாறு சுட்டி நிற்கின்றது. பாரதத்துள்ளும் தென் பாரதம் கலைகளைப் பிறப்பித்து வளர்த்தமுறை இணையற்ற சிறப்புமிக்கது. பாரதத்தின் இப்பகுதியில் வானளாவிய கோபுரங்களையும், இறைவன் பெருமையினைப் பல நிலைகளில் சித்திரிக்கும் சிற்ப வடிவங்களையும் கொண்டு சிறந்து விளங்கும் திருக்கோவில்கள் காணப்படுவன. இக் கோவில்களை நிலைக் களனாகக் கொண்டு கலைகள் பிறந்தன. விரிந்து வளர்ந்து பாரதப் பண்பாட்டின் சிறந்த உறுப்புக்களாக இன்றும் விளங்கிவருகின்றன. இக் கலைகள் தோன்றி வளர்ந்து சிறப்புற்று விளங்கிய வனப்பை வருணிப்பதே இக் கட்டுரைத்தொடரின் நோக்கம். சுருங்கக் கூறின், இக் கட்டுரைத் தொடர் திருக்கோவில்களின் பொலிவை எடுத்து விளக்கும் நோக்குடன் உருவாகின்றது எனக் கூறலாம்.



கலை என்றால் என்ன? என்ற கேள்விக்கு விடை இறுக்கும் வகையில் கலையின் வரைவிலக்கணத்தைத் தெளிவாக இதுவரை எவருங் கூறக் கேட்டறியோம். இங்கு வரைவிலக்கணங் கூறி விளங்க வைத்தல் எளிதன்று. கலையின்

கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் M. A., Ph. D.

பொது இயல்புகளைத் தனித்தனியே எடுத்துக் கூறிக் கலை என்றால் இன்னது என்பதனை ஓரளவிற்கு உணர்த்தலாம். கலை. வாழ்க்கையுடன் ஏதாவது தொடர்பு பூண்டு அமைவது அவசியம். கலையில் தேர்ச்சிபெறுவதற்கு நுண்ணறிவு இன்றியமையாதது. அவ்வாறே கலையை அனுபவித்து அதில் இன்பங்காண்பவனும் நுண்ணுணர்வு வாய்க்கப்பெறுபவனாய் இருத்தல் விரும்பத்தக்கது. கலை, கவர்ச்சி மிக்கதாக விளங்கும் இயல்பினது பார்ப்பவர்கள் எவரையும் தன்வயம் ஈர்க்குதல் சிறந்த கலையின் உயர் தனிப் பண்பாகும். கலை, சூழலில் உள்ளவனின் கவனத்தை ஈர்ப்பதுடன்மட்டும் அமையாது அவனை அடிமையாகவும் ஆக்கிவிடும். கலையில் ஒழுங்கு, கட்டுப்பாடு, நியதி ஒற்றுமை ஆகிய அம்சங்கள் இடம் பெறுவன. இத்தகைய வரம்புக்குள் அகப்பட்டுத் தம்முடன் தொடர்புறுபவர்களைப் பெரிதும் மகிழ்விப்பது கலையாகும்.

வாழ்வும் கலையும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பு பூண்டவை. வாழ்க்கை நடத்தும் மக்கள், தாம் வாழும் முறையில் நுண்ணிதாகச் சீரிய வேறுபாடுகளைச் செய்யும்பொழுதே கலைகள் பிறக்கின்றன. வாழ்வுடன் பிணைப்புறாத எவையும் கலைகள் எனப் பெயர்பெறமாட்டா. உலகில் விளங்குங் கலைகளனைத்தையும் தனித்தனி உற்று நோக்குவோமேயாகில் ஒவ்வொன்றும் வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து விளங்குவதையே காண்கின்றோம். வாழ்க்கையுடன் தொடர்புபெறாத எதுவும் எவ்வாறு பேணி வளர்க்கப்படினும், கலையாக மிளிராது. கலையின் இன்றியமையாப் பண்புகளில் ஒன்று இலாகவம் எனப்படும். இலாகவம் என்பது செய்யுங்காரியத்தில் கடைப்பிடிக்கப்படும் இலகுவான செயல்முறையாகும். காரியம் ஒன்றினை மேற்கொள்ளும்வேளை இதைக் கையாளுபவர் பிரயாசை சிறிதும் இன்றிச் செய்யவேண்டியதை இலகுவாகச் செய்வர். பெரும்பாரத்தை உயர்த்துபவர்கள் தம்முடல் வலிமையினால் மட்டுமின்றி உபாயத்தைத் துணைக்கொண்டும் உயர்த்தவேண்டுவதை உயர்த்துவதைக் காண்கின்றோமல்லவா? இலாகவத்தைத் தொடர்ந்து பிறப்பது அழகு. இவ்வழகு பார்ப்பவர்கள் தத்தம் வயமிழந்து மயங்கிச் சுவைக்கவைக்கும் பெற்றியது. செய்யுங் காரியங்களை இலாகவமாகவும் அழகைத் தோற்றுவித்தும் செய்து மற்றவர்களைக்கவர வைக்கும் ஆற்றல் எல்லோருக்கும் கைகூடாததொன்றாகும். எனவே கலைப்புலமை எல்லோருக்கும் எளிதில் அடையமுடியாதது. இவ்வாறு மிக அருமையாய்க் கைகூடுவதினாலேயே கலை ஒருகொடை என என்றும் போற்றப்படுகின்றது. ஆகவே, நுண்ணிய கலைகளில் தேர்ச்சிபெற்றவர்கள் ஒரு சிலரேயாவர். கவரும் வனப்புமிக்க இக்கலைகளாற் கவரப்பெறுபவரோவெனின் மிகப் பலர்.

கலை என்னுஞ் சொல்லுக்கு அம்சம் என்னும் பொருளும் உண்டு. அம்சங்கள் பலவற்றைக் கொண்டு ஒவ்வொரு பொருளையும் விளங்கக் காணினும் சந்திரனிடத்து மட்டுமே. அம்சங்கள் பொருந்திய

நிலையினைத் தெள்ளிதிற் காண்கின்றோம். அவன் நாள்தோறும் தேய்வதும் வளர்வதும், அவன் அம்சங்கள் இவை, என எம்மை உணர வைக்கின்றன. இவ்வம்சங்களைக் கலைகள் என்று கூறுவார்கள். வளர்பிறையில் சந்திரன் கலைகள் ஒவ்வொன்ருக அதிகரிக்கப்பெற்று பூர்ணிமைத் தினத்தன்று நிறைவு பெற்று முழுமதியாகின்ருன். இதனையடுத்துக் கலைகள் நாள்தோறும் ஒவ்வொன்ருகத் தேய்வுறுங்காலை இறுதியில் கட்புலனுகாது உருக்கரந்து மறைகின்ருன். பதினறு கலைகளையுடையவன் தண்மதி, எனினும் இக்கலைகளை நாம் தனித்தனி கண்டு பிரித்தறியும் ஆற்றலற்றவராகின்றோம். தேய்ந்தபின்பே ஒரு கலை தேய்ந்துவிட்டதென்பதையும், வளர்ந்தபின் இன்னெருகலை வளர்ந்துள்ளதென்பதையும் ஊகித்தே உணருகின்றோம். பதினறுகலைகளும் ஒருங்கு பொருந்தப்பெற்று முழுநிலவாய்த் தோன்றும் சந்திரனைக்கண்டு கண்குளிரப் பெருதவர் யார்? கலைகள் ஒருங்கு பொருந்திய முழுமதி கவிதைக்குப் பிறப்பிடமாய் விளங்கக் காண்கின்றேமல்லவா? இவ்வாறே, கவின்பெறு கலைகள் அனைத்தும் விளங்கும் திருக்கோவில் முறைப்படி அமைக்கப்பட்டு நிறைவு பொலியும்பொழுது அது அனைவரின் உள்ளங்களையுங் கவரும் இயல்பினதாக விளங்கும். இவ்வாறு உள்ளங்கவரும் கலைகளின் உறைவிடமாய் அமையும் கோவில் மக்கள்மனதைக்கவரும் வகையை விளக்குவதே இக்கட்டுரைத்தொடரின் நோக்கம்.

பழைய நூல்கள் கலைகளை அறுபத்து நான்கு வகைகளாக வகுத்துக் கூறுகின்றன. சிறந்த ஆண்மகனுகக் கருதப்படுபவன் இக்கலைகள் அனைத்திலும் வல்லவனெனச் சுட்டப்படுகின்ருன். இக்கலைகள் எல்லாவற்றையும் ஒரு சில பிரிவுக்குள் அடக்கிக் காட்டலாம். இவ்வகைப் பிரிவுக்குள்ளடங்கும் கலைகளுக்குத் தனிப்புகலிடமாக விளங்குவது திருக்கோவில். ஆன்மாக்களிடம் பூண்ட பெருங்கருணையின் விளைவால் இறைவன் திருவுருவங் கொண்டு விளங்கும் பொலிவைத் தொல் நூல்கள் வியந்து கூறுகின்றன. இவை கூறும் வகையே ஒரு தனிக்கலை எனலாம். உலகில் உள்ள பொருள்களனைத்திலும் அவன் வியாபித்து நிற்கும் உண்மையை உணர வைப்பது இறைவன் திருக்கோலம். இது எண்வகை வடிவம். வடிவம் என்ருலும் மூர்த்தி என்ருலும் ஒன்றே. எட்டுறுப்புக்களைக் கொண்டு அமையும் இயல்பினதாகையால் இது அட்ட மூர்த்தி எனப்படுகின்றது. உலகில் உள்ள பொருள்கள் அனைத்திலும் அம்சங்களாம் பெரும் பூதங்கள் ஐந்தும் கதிரவனும் முழுமதியும், வழிபடுவோனுகிய இயமானனுமே இவ்வெட்டுறுப்புக்கள்: இறைவனின் அருள் -திருவுருவம் இவ்வெட்டுறுப்புக்களை நிலைக்களனுகக் கொண்டு அறுபத்து நான்கு தோற்றங்களில் காணப்படுகின்றது. இவற்றையே சமய நூல்கள் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் எனக் குறிப்பிடுகின்றன. அஷ்டாஷ்ட என்ருல், எண் மடங்கான எட்டு எனக் கருத்துப்பெறும். இவ்வறுபத்து நான்கு வடிவங்களில் தோன்றிய

இறைவனைக் கலைவடிவாக விளங்குபவன் என நூல்கள் கூறும்.

இறைவனின்றும் பின்னமுறாது ஒன்றாய் விளங்கும் இறைவியையும் தனியே சுட்டும் பொழுது இந்நிலையினைப் பொருத்தியே கூறும் மரபு விளங்கக் காண்கின்றோம். கலாநிதி, கலாவல்லி, கலாலாபா, கலாவதி, காவ்யகலா முதலியன அம்மையின் நாமங்களுட் சில. இவை, இறைவி, கலைக்குப் பொக்கிஷமாக விளங்குவதையும், கலையாகிப் படருவதையும் கலையைப் பற்றியே சதாபேசுவதையும் கலையைத் தனக்குரியதாகக் கொண்டுள்ளதையும் கவிதைக்கலையாக விளங்குவதையும் சுட்டுகின்றன.

கலைகளுள் நுண்ணியது இலக்கியக் கலை. இக்கலையிற் புலமை ஒருவர்க்கு இயல்பாகவே வருவது. கவிஞன் கவியாகவே பிறக்கிறான். செயற்கையாகக்கவிஞன் உருவாகினாலும், கவிதாசக்தி என்பது அவனிடம் இருந்தாலொழிய அவன் சோபிக்கமாட்டான், மரத்தினுள் உருக் கரந்துறையும் தீயைக் கடைகோல்கொண்டு கடைய தீ தோன்றுவதுபோல் வெளியே புலனாகாத கவிதா சக்தியைப் பழக்கத்தினாலும் தோற்றவைக்கலாம். இக் கருத்தையே ''செந்தமிழும் நாப்பழக்கம்'' என்னும் முதுமொழியும் சுட்டிநிற்கும்.

இலக்கியம் மொழியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. மொழி ஒன்றே வாழ்க்கையில் நாம் மிகவும் அதிகம் பயிலுந் துறையாக விளங்குவதை நம்மவருட் பலர் உணருவதேயில்லை. உண்ணுவது உறங்குவது ஆகிய இரு தொழில்களையும் ஓயாது செய்துவருவது போன்றே பேசுவதையும் பெரும்பாலும் இடையீடின்றிச் செய்துவருகின்றோம். ஒலிகளை வகை வகையாக வரிசைப்படுத்தி நலம்பேணிவரும் மரபு தவறாது ஒலிக்கும்பொழுது கருத்துக்கள் பிறக்கின்றன. ஒலி என்னும் ஒளி இவ்வுலகனைத்தையும் விளங்க வைக்காது அவிந்துவிடின் உலகம் முழுவதும் காரிருளில் ஆழ்ந்துவிடும் என அறிஞர் ஒருவர் கூறியுள்ளார், இக் கூற்று இலக்கியக் கலையைப்பற்றி அவர் எழுதிய விமரிசன நூலுக்குத் தொடக்கவுரையாக அமைந்துள்ளது. இவ்வாறு ஒலிகளை மரபு தழுவி ஒலித்துக் கருத்துக்களைத் தோற்றுவிப்பது எல்லோருக்கும் சாத்தியமாகும் எனினும், ஒருசிலர் சொற்களை ஆண்டு கருத்துக்களைத் தோற்றுவிக்கும் முறை, அவற்றைக் கேட்பவர்கள் மனத்தில் ஆழப் பதியவைக்கும் ஆற்றல் வாய்ந்ததாகின்றது. கருத்துக்களை, அழகாக, கவருந்தன்மை வாய்ந்தனவாக, திரும்பத்திரும்ப நினைந்து உவகை கொள்ளும் இயல்பு பயப்பனவாக அமைப்பதில் ஆற்றல் மிக்கவர்களைக் கவி என்று கூறுகின்றோம். கவி நுண்ணறிவு மிக்கவன். நுண்ணறிவு மிக்கவர் அவாவிச்சுவைக்கும் கவிதை புனைதல் அரும் பெருங்கலை, இது எல்லோர்க்கும் எளிதிற் கைகூடாதது. இறைவன் திருவருளாலேயே இக்கவிதை கைவரும் உண்மையை உணர்ந்த ஆன்றோர் கவிதை புனைந்து அதை இறைவனுக்கே அர்ப்பணித்தனர். பாமாலை பாடப் பயில்வித்தவனுக்கு அப் பாமனின் அடியவர்கள் பாக்களால் ஆயிர

மாயிரம் ஆரங்கள் தொடுத்து அணிவித்ததைப் பெரியபுராணங் கூறக் காண்கின்றோம். ஒருபொழுதும் வாடாத இவ் வாரங்களால் இறைவனை அணிவித்து அவனழகு பொலியுங் கருணைவடிவு கண்டது மன்றி எமக்குங் காட்டிநிற்கும் இக் கலை அரும்பெருங்கலையே.

வாழ்க்கையுடன் பிணைந்து உருவாவதனால்வாழ வழிகாட்டும்இயல்பு கொண்டது இலக்கியக்கலை. இலக்கியம் செவிவழி நுழைந்து மக்களுக்குப் பெருஞ் சுவையூட்டுவது. இது மக்களை மக்களாக வாழவைப்பது. இவ்வகை நுண்ணறிவு வாய்க்கப் பெற்றதனாலன்றோ விலங்குகளின்றும் வேருகி மக்கள் மக்களாகவே வாழ்கின்றனர்! மக்களினின்றும் வேறு படுவன மாக்கள். இவைக்கு உண்ண மட்டும் வகையறியும் வாயுணர்வு மட்டுமே உண்டு. இவை செவியிற் சுவையுணரா. வள்ளுவர் கூறும் இம் மாக்களைப்பற்றிச் சிறிது விரிவாகவோ பர்த்ருஹரி என்னும் வடமொழிக் கவிஞர் தமது நீதிசதகத்தில் கூறியுள்ளார். சாகித்தியம் (இலக்கியம்) சங்கீதம் முதலிய கலைகளற்றவன் (சாட்சாத்) மிருகமேயாவன். இவ்வாறு கூறிய கவி உடனே தாமே தம்மைத் திருத்திக் கொள்ளுகிறார். இத்தகையவனை மிருகமாகவே காணுகிறோம் எனினும், இங்கு ஒன்றிரண்டு வேறுபாடுகள் நம் கண்ணுக்குப் புலனாகிக் கொண்டே இருக்கின்றன. மிருகத்திற்கு வாலுண்டு, இவனுக்கு வாலில்லை. மிருகத்தின் தலையில் இரு கொம்புகள் இருக்கின்றன. இவன் கொம்பற்றவன். மிருகங்கள் புற்கறிப்பன, இவன் புல்தின்னுன். இவ்வாறு வேறு பாடு கூறிய கவி நகைச்சுவையும் ஏளனமும் ததும்பும் வண்ணம், "இவன் புல்லைத் தின்னுதே வாழ்ந்து விடுகின்றான். இது மிருகங்கள்செய்த பாக்கியமே." என முடிவிற் குறிப்பிடுகின்றார்.

பாரதத்தின் பண்பாட்டில் முக்கிய அம்சங்கள் இரண்டு உண்டு. ஒன்று சமயம். மற்றையது தத்துவம், இவ்விரண்டும் இருபெருங் கலைகளாக மிளிர்கின்றன. மேலைத்தேயங்களிலோ வெனின் சமயமும் தத்துவமும் ஒன்றுக்கொன்று முரணான துறைகள். இந்திய தத்துவமும் சமயமுமோ வெனின் ஒன்றுக்கொன்றுதொடர்பு பூண்டவை. இந்திய தத்துவஞானி சமயத்தை எள்ளான். சமய நிலைவழி ஏகினால் தத்துவநிலையை எய்தலாம் என்பது அவன் முடிபு.

உலகியலில், மக்கள் வாழ்க்கையில் சமயம் முக்கிய இடம் வகிக்கக் காண்கின்றோம், மக்கள் வழிபடும் தெய்வம் சமய நூல்களில் இஷ்ட தேவதை எனப்படும். வழிபடும் மக்களின் நிலைக்கேற்ப இறைவன் அவர்களுக்குத் தன்னைக்காட்டி நிற்பான். இதனாலன்றோ சைவ வழிபாட்டில் இறைவன் பலதோற்றங்களிற் காட்சியளிக்க நேரிட்டது. இப் பல்வகையான தோற்றங்கள் ஒவ்வொன்றிலும் கலையழகு பொலியக் காண்கின்றோம்.

உலகியல் நெறியில் நாம் வாழ்வதை ஒட்டியே இறைவனை வழிபடும் வகையில் சமயம் அமைந்திருப்பது அதற்குத் தனிப்பெருஞ் சிறப்புத் தருகின்றது. இல்வாழ்க்

கையில் வாழும் அடியவர்கள் பெரும் பாலார்க்கு ஏற்புடைத்தாயும் இறைவன் தோற்றம் உரியவாறு விளங்கும், இறைவனையும் தன் நிலையில் விளங்கக் காணும் இல்வாழ்வான் இறைவனைத் தனக்கு நெருங்கியவனாய்க் கண்டு நெருங்கிய தொடர்பு கொள்ள வாய்ப்பைக் காண்கின்றான். இதனால் இறைவன் குடும்பமும் விரிந்தது. அவன் தலைவன்; இறைவி தலைவி; கணபதியுங் கந்தனும் அவர்கள் மைந்தர்கள். இவ்வகைத் தோற்றத்தில் இறைவழிபாடுசெய்து இன்பங்காண்பர் உலகியல் நெறி நிற்கும் மக்கள்.

ஆன்ம ஈடேற்றங்கருதி மனிதன் பல நிலைகளைத் தாண்டிச் செல்ல நேரிடுகின்றது. அவ்வந் நிலைகட்கு ஏற்ப இறைவனையும்வெவ்வேறு நிலைகளிற் காண்கின்றான். ஆன்ம ஈடேற்றங்கருதி இறைவன் இயற்றுபவை ஐம்பெருங் கிரியைகள். இவை திருவிளையாடல்களாக நிகழ்த்தப்பெறுவன. எனவே, இறைவனைப் படைக்குந் திருக்கோலத்திலும், காக்குங் கோலத்திலும், அழிக்குங் கோலத்திலும், மறைக்குங் கோலத்திலும் அருளுங் கோலத்திலும், காண்கின்றோம்.இவ்வாறு, இறைவனைப் பல நிலைகளில் சிந்தித்து உருவாக்கி தரிசித்து அவ்வவற்றிற்கு ஏற்றவாறு வழிபடுங் கலை தென்பாரதத்தில் கிரியை என்னும் பெயரில் உருவாகி வளரலாயிற்று. கிரியைகளை ஆகமங் கூறும் விதிகளுக்கமைய நிகழ்த்துவது ஒரு அருங்கலை: ஒழுங்காக நிகழ்த்தப்படும் கிரியைகள் மனத்தைக் கவரும் திறன் வாய்ந்தவை. பார்ப்பவர்கள் மனத்தை வசீகரிக்கும் வனப்பு மிகுந்தவை. இறைவன் பூசையில் இலயித்து நிற்பவரைக் கவனித்தாலே அவன் தன் வயமிழந்த நிலை தெள்ளிதிற் தெரிகின்றது, பூசை நிகழும் வேளை மனம் இறைவனிடத்திற் படியும். கைகள் அருச்சித்தலில் ஈடுபடுகின்றன. காது இறைவன் புகழ் கேட்பதில் இலயிக்கும்.புத்தி அவன் தியானத்தில் ஆழ்ந்து விடும். கண்கள் இரண்டும் இறைவன் மூர்த்தியின் வண்ணத்திற் பதியும். ஒரே வேளையில் இவ்வளவு தூரம் வசீகரிக்கும் ஆற்றல் ஏனைய கலைகளுக்கு உண்டா என்பது சந்தேகத்திற்கு உரிய விஷயமே. ஓவியத்தை எடுத்துக் கொண்டோமாயின் அது கண்ணுக்கு மட்டும் கவர்ச்சியளிப்பது. இசை செவியை மட்டிலும் பரவசப்படுத்தும். சுவை மிக்க உணவு நாவுக்கு மட்டும் இன்பம் பயக்கும். இறைவன் பூசையோ வெனின் பல்வகை இன்பங்களையும் ஒருங்கு பயந்து புலன்கள் அனைத்தையும் ஒருங்கு வயப்படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.

எமது புலன்களைச் சிதறச்செய்யும் சூழ்நிலையையே நாம்கோவிலுட் புகுந்ததும்காண்கின்றோம். ஓவியம் சித்திரம், சிற்பம் முதலியன புலன்களைப் பல நிலைகளுக்குத் தாவி அல்லலுறச் செய்யும் இயல்பின. சங்கீதம் நாட்டியம் என்னும் இருகலைகளும் இவ்வியல்பை இன்னும் அதிகமாகப் பெருக்குவன. இவற்றின் வழி ஈர்ப்புண்டவன் இவற்றையெல்லாம் தாண்டி இறைவன் எழுந்தருளியிருக்கும் மூலஸ்தானத்தைப் படிப்படியாக அடையும் பொழுது இவனனுபவம் வேறுபடு

கின்றது. இவ் வேறுபாடு அவன வன் எய்தும் பரிபக்குவத்திற்கு ஏற்ப அமையும். கோவிலுட் புகுந்ததும் புலன்கள் கலைந்த விரைவிற்கேற்ப உள்ளே புகப்புக மன ஒடுக்கமும் விரைந்து நிகழும். இவ்வொடுக்கத்தினைத் தரும் தன்மை உடையதாதல் பற்றியே கோவில் ஆலயம் எனவும் பெயர்பெற்றது. ஆலயம் என்றால் ஒடுக்கம் எனக் கருத்துப்படும்.


புலன்களை முதலில் சிதறக் கலைத்துப்பின் ஒரேவழிப் படுத்தும் முறை பெரும் பயன் தருஞ் சிறப்பு வாய்ந்தது. இவ்வகை ஒடுக்கம் செம்மையான ஒடுக்கம். இங்கு ஒருவகைச் சலனமும்காணலரிது. சேறு மிகுந்த குளத்தினுள் எருமை புகுந்து கலக்கி வெளியேறியதும் கலங்கிய நீர் படிப்படியாகத் தெளிந்து முன்னரைக் காட்டிலும் தெளிவு மிகுந்துகாணப்படுவதுடன் ஒப்பிட்டு இவ்வுண்மையை நன்கு உணரலாம்.

தத்துவம் சமயத்தை அடிவேராகக் கொண்டு உருவானது. சமய அடிப்படையில் தகுதி பெறுபவன் தத்துவவிசாரணையில் தழும்பாது உறுதியாக ஈடுபட்டுப் பேருண்மைகளை உணருகின்றான். வீடுபேற்றைஅடைப்பிக்க உபாயம் காட்டுவது தத்துவ விசாரணை. ஆறு வழிகள் வழிகாட்டும் இவை காட்சிகளாக அமைவதனால் தரிசனங்கள் எனப் பெயர் பெற்றன. சைவசித்தாந்தம் முடிவு கண்ட பேருண்மையைக் கூறுவது. இவ்வாறு தத்துவக்கலையின் வளர்ச்சியும் இந்திய அறிஞர்களின் நுண்ணறிவின் திறனைப் பறைசாற்றுகின்றது.

இதுகாறும் கூறியவாங்கு பாரத நாட்டு வாழ்க்கையில் இன்றியமையா அம்சங்கள் தனித்தனிக் கலைகளாக அமைந்திருப்பதைப் பற்றி எவரும் சிந்தியாதிருப்பது வியப்பிற்குரியதே. ஏனைய நாடுகளில் கலைகள் தோன்றித் தோன்றி மறையக் காண்கின்றோம். சில பரிசில்களைக் கலைஞனுக்கு வாங்கித் தருவதுடன் நின்றுவிடுகின்றன. கலைகளும் நிலைபெறாது மறைந்துவிடுகின்றன. தெய்விக அடிப்படையில் உருவாகிய பெருங்கலைகளோ பாரதத்தில் என்றும் மங்காப்புகழுடையனவாய் இன்றும் விளங்குகின்றன. இவை இனி வளருவதற்கு இடம் இல்லாதவாறு வளர்ந்து பூரணமான நிலையில் விளங்கி வருகின்றன இவ்வருங்கலைகள் திருக்கோவிலை நிலைக்களனாகக் கொண்டு இவ்வாறு விளங்கியதை இனித் தொடர்ந்து கவனிப்போம். இக்கலைகள் பாரதமெங்கும் பேணப்பட்டனவெனினும், இவை தென்பாரதத்தில் விளங்கும் நிலை தனிச் சிறப்பு வாய்ந்தது. பாரதத்தின் கலைபற்றிப் பல நூல்கள் வரைந்த பேரறிஞர்கள் தென்பாரதத்தின் கலைவரலாற்றை உரியவாறுவிரித்துக்கூறாது விட்டுவிட்டார்கள். இந்தியக்கலைகள் பற்றிப் பல பெருநூல்கள் யாத்த திரு ஆனந்த குமாரசாமி அவர்களும் தென்னிந்தியக் கலைபற்றித் தம் நூலில் போதிய சிரத்தைகாட்டவில்லை. திருக்கோவிலில் கட்டிடக் கலை, (architecture) சிற்பக்கலை (Sculpture) ஓவியக்கலை (Painting) சங்கீதக்கலை (Music) நாட்டியக்கலை (Dance) ஆகிய நுண்கலைகள் (Fine arts) கிரியை (Ritual) எனப்படும் வழிபடுமுறையை மத்திய நாடியாகக் கொண்டு உருவாகி வளர்ந்ததைச் சிவாகமங்களையும் ஏனைய துணை நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு ஆராயத் தொடங்குவோம்.

—தொடரும்

# வெறியும் பலியும்



முனியப்பதாசன்

"லூசியா... லூசியா... லூசியா..."

நாவாந்துறையில் புறவீதி. அப்பால் நீண்டு இன்னும் நீண்டு கிடந்தது கடல், தூற்றலுடன் தொடங்குகிறவானம், புனலாய்ச் சொரிகிற மார்கழிமாதத்தின் நடுப் பகுதி. பல நூறு ஆண்டுகளாகக் கருமைக்குமேல் கருமையை நாள் தோறும் பூசிவந்தால் முடிவில் பூசிய இடத்தில் கிளரும் பேய்க் கறுப்புப்படைபோல வானமெங்கும் கருமை பூத்துக்கிடந்தது. அவை நிமிர்த்திய தலையில் முட்டுகிறாற் போன்றதொரு அழகு. இந்தப் போதிலே இயல்பாகக் கடலின்கண் தோன்றும் பேயமைதி - நாவாந் துறைப் பிரதேசம் வானத்திடம் எதையோ எதிர்பார்த்துக் கொண் டிருக்கிற தாக முணு முணுப்பு எல்லாம் பின்னிப் பிணைந்து நின்றது.

அமைதி என்று வரையறுத்துச் சொல்ல முடியாத இந்த அமைதியைக் கிழித்து மேற்கூறிய குரல் ஒலித்தது. உற்றுக் கேட்கிற மனித மனங்களுக்கு மட்டும் புரியும் படியான தொரு வஞ்சகக் கலப்பின் சாயல் அந்தக் குரலிலே பிணைந்து நின்றது.

புறவீதியின் மேற்கே தென்னஞ் சோலைகளுக் கிடையே அமைந்துகிடந்த மண்குடிலை 'லூசியா' என்ற மூன்றாம் குரலை முடிப்பதற்குள் சம்மாட்டியார் அடைந்துவிட்டார். சுட்டமின்சார பல்ப் பால் செய்த லாந்தர் ஒன்றை ஏந்திய

வண்ணம் லூசியன் வந்தான்.

''லூசியா—?''

''சம்மாட்டியாரா?''

'சம்மாட்டியார் தான். வேறு யார் இந்த நேரத்தில் உன்னிடம் வருவார்கள். தெரியாமல் முதலே விட்டுவிட்டேன் பார். இன்னும் கிளம்பவில்லையா நீ?'

லூசியன் அண்ணாந்து சம்மாட்டியாரைப் பார்த்தான். அந்தப் பார்வையிலே சந்தேகம்- சோகம், எல்லாம் கலந்து நின்றது. கொல்லன் உலைக்களத்துத் துருத்தியில் இருந்து கிளம்பும் உஷ்ணமான காற்றைப் போல நீண்டதொரு பெருமூச்சோடு லூசியன் கூறினான். ''சம்மாட்டியாரே இந்த நேரத்திலே கடலிலே போய் என்ன செய்ய முடியும்'-புறவீதியின் கிழக்கே அலை எற்றிக் கொண்டிருந்த கடலையும்- கரும்கும் என்று கிளர்ந்தெழுகிற வானத்தையும் மாறி மாறி அவன் விரல்கள் சுட்டிக் காட்டின.

மெல்லச் சிரித்தார் சம்மாட்டியார். அந்தச் சிரிப்பு நெஞ்சின் உள்ளே அனலாய் எரிந்து கொண்டிருந்த வெறியின் கொடுந்தழல்கள் சிரித்ததால்பிளவு கண்டவாய்ப்பகுதியூடே வீசியதாகப் பட்டது.

''லூசியா''

இனம் தெரியாத நடுக்கம் அந்தப் பெயரை உச்சரிக்கிறபோது அவர் குரலில் இழைந்தது. பெரிதாய் வலிமையைக் கூட்டி இல்லாத தொன்றை வலிந்து நிருபிக்கிறவன் காட்டுகிற சிரமத்தோடு அவர் பேசினார். 'லூசியா தொழில் தெரியாதவன் மாதிரியாகவல்லவா பேசுகிறாய் நீ-இந்தப் போதுகளிலே கடலில் கிடைக்கும் திரவியங்களை உனக்குத் தெரியாதா- மந்தாரைப் போதுகளிலே பெறும் வருமானங்களை நீ எத்தனை தரம் அறிந்திருக்கிறாய்.'

'சம்மாட்டியாரே. இது என்ன பைத்தியப் பேச்சு. கேட்கிறேன். இது மந்தாரைப் போதா? கடலும் வானும் குமுறப் போகிறதான சூழ்நிலையல்லவா- முகில் ஓட்டத்தைப் பார்த்தால் பெரும் சூறைக் காற்றே எற்றப் போவதான சூழ் நிலை அல்லவா?'

சம்மாட்டியார் அப்போதைக்கு மனிதனின் நல்ல உணர்வுகளைப்

---

இலங்கையர்கோன் நினைவு விழாச் சபையினர், சமீபத்தில் இலங்கையர்கோன் நினைவுச் சிறுகதைப் போட்டி ஒன்றை நடத்தினர்- இலங்கையடங்கிலுமுள்ள எழுத்தாளர்கள் பலர் இப் போட்டியில் பங்கு பற்றினர். நீதிபதிகளாகக் கடமையாற்றிய சு. வே, குறமகள், சிற்பி ஆகியோரால் முதற்பரிசுக்குரியதெனத் தெரிவு செய்யப்பட்ட கதை ''வெறியும் பலியும்''. இக் கதையை எழுதிய 'முனியப்பதாசன்' யாழ்-இந்துக்கல்லூரி மாணவர். எழுத்துலகிற்குப் புதியவர். இப் பரிசுக் கதையுடன் எழுத்துலகிற்கு அறிமுகமாகின்றார்.

---

பொசுக்கி வந்தவர். பல காலமாய் தாம் செய்யத் தவறிய ஒன்றை வெற்றிகரமாய் இந்தச் சூழ்நிலையில் உருவாக்கி விடவேண்டுமென்ற வெறி தவிர அவருக்கு வேறு ஒன்றிலும் மனது லயிக்கவில்லை.

'அப்படியானல்'- என்று அவர் இழுத்தார். அந்த இழுவை முடியு முன்னமேயே உள்ளேயிருந்து மரியாள் கத்தினள்.

'வெளியே எதற்காக நிற்கிருய் லூசியா—இடிகிடி விழுந்து தொலைக் கப் போகிறது. உள்ளே வாவேன். சம்மாட்டியார் தன் பாட்டில் போவார்.'

லூசியனுக்கு நெஞ்சு திக்கென் றது சம்மாட்டியாரின் பழைய தீவினைகளை இவள் சீண்டுகிருளா? லூசியன் சம்மாட்டியாரைப் பார்த் தான். சம்மாட்டியாரோ லூசியனைச் சற்றும் கவனியாமல் குரல் வந்த திக்கை எட்டி இன்னும் எட்டிப் பார்த்தார். லூசியன் கையில்இருந்த லாந்தர் 'பக்' என்று அணைந்தது. குடிசை கருமையாக கருமைக்குள் பிடித்து வைத்த பண்டம் மாதிரி இருந்தது.

''நல்லது லூசியா, மரியாள் சொல்லுகிறபடி நீ செய்யலாம் ஆனல்"இடையே நிறுத்தி லூசி யனை உற்றுப்பார்த்தார் சம்மாட்டி யார். அவரது சிந்தனையிலே அந்த மண்குடிசையும் அவனது பலமான உடற்கட்டும் நெஞ்சில் வந்து மோதின், இவை தவிர ஒன்றும் இல்லை-இந்தச் சிந்தனையின் முடி வோடு விட்ட இடத்தைத் தொட்டுக் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித் தார். விடலைத் தொழிலுக்காக முன் பணமாக நான் தந்த நூற்றைம்பது -ரூபாவையும் போது புலர்ந்ததும் நாளைக்கு வைத்தாகவேண்டும்"- இடையே நிறுத்தி நிறுத்தி லூசி யன் முகத்தை அழுத்தமாகப் பார்த் துக்கொண்டு கூறினர் சம்மாட்டி யார்.

இருளில் நீண்டகாலப் பழக்கம் சம்மாட்டியாருக்கு. அந்த இருளில் அந்த மண் குடிசையின் வாயிற் புறத்துச் சாக்குத் தட்டி மெல்ல விலகியது. கருமைக்குள் கருமை அசைவது போல இருந்தது எட்டி நின்று கத்தினள் மரியாள். 'சம் மாட்டியாரே நீர் செய்த கொடுமை கள் போதாதா? மப்பும் மந்தாரையு மாய்க் குமுறப்போகிற இந்தப் பொழுதிலே மனம் வந்துவிடலைத் தொழிலுக்குப் போ அல்லது முன் பணமாக வாங்கியதை வை என் கிருயே. வலிமையற்ற எங்களை எதற்காக நீ வதைக்கிருய் மனம் மாறியதாக நடந்து கொண்டாயே, இதற்கெல்லாம் இந்த மண்டபத் தில் இருக்கும்யேசுநாதர் உன்னைக் கேட்காமல் விடவேமாட்டார்"

வானத்திலே இடி இடித்தது. அந்த இடியோசையோடு ஒத்தி சைந்ததாகக் கம்பீரமாய் ''லூசியா, வெட்கம் கெட்டவனே இன்னும் எதற்காக நிற்கிருய்? வேண்டிய பணத்தைக் கொடுத்துவிடலாம் வா உள்ளே" என்ற மரியாளின் கத்தல் உரிமையோடு முடிந்தது

'ஞாபகமிருக்கட்டும் லூசியா விடிந்தால் பணம்'—என்று கத்தி விட்டு வேகமாக நடந்தார் சம் மாட்டியார். அப்போது அவர் முகத் தை லூசியன் பார்த்திருக்கக் கூடு மானல் உலகம் வரையறைகளற்ற காலம் தொடக்கம் பெற்ற பயங்

கரங்களின் தொகுப்பு பின்னிக் கிடப்பதைக் கண்டிருப்பான்.

நெட்டைமரமென நின்றான் லூசியன். 'விடிந்தால் நாளைக்கு' என்று சம்மாட்டியார் தான் பெற்ற முன் பணத்திற்குக் கீறியிருக்கும் காலக் கோட்டை எண்ண அவனுக்குச் சிரிப்பாய் இருந்தது. இப்போது மணி மூன்றுஇருக்கலாம். பார்க்கப்போனால் இப்போது கூட விடிந்தமாதிரித்தானே. நாளை என்பது ஆரம்பித்து விட்டதே என்று கலங்கினான். 'மரியாள் ஒருமாதிரிப் பழைய வடுக்கள் ஆறி இருந்த இடங்களில் மீண்டும் புண்ணை உண்டாக்கி அனலையும் வார்த்து விட்டாள் போலத் தான் பட்டது. அவர் தனக்கு ஆற்றியவற்றை எண்ணினான். மனம் மாறி நல்லபடி வாழ்ந்த கோலத்தையும் எண்ணினான். இப்போதோ மீண்டும் சீண்டி விட்டாயிற்று என்ன நடக்குமோ? அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை.

பாவம் லூசியன்! சம்மாட்டியார் மனம் மாறவேயில்லை. பழைய சம்பவங்கள், ஏமாற்றங்கள் அவருக்கு கொடுத்துக் கொண்டிருந்த வெறி இன்றைக்கும் மந்தாரைச் சூழ்நிலையில் ஒரு பலியை உண்டாக்கி ஒன்றை ஏங்கப் பண்ண வேண்டுமென்றே வத்திருந்தார் தன்னிடம் என்பதை அவன் உணரநியாயமில்லை. அவன் நல்லவன்.

வேகமாக நடந்து கொண்டிருந்தார் சம்மாட்டியார். வேகமாக அவர் நடந்தபோது புறவீதியிலே நனைந்து கிடந்த சாதாளைகள் சதக் என்று நசிந்தன'இன்றைக்கும் தோல்வி. எல்லாம் மரியாள்தான் காரணம்' என்று அவர் கருதினார். அவரது சிந்தனையின் மையமாகவும் நடுவேயும் மரியாள் நின்றாடினாள்.

வானம் சிணுங்கத் தொடங்கியிருந்தது. இப்போது பலக்கவும் தொடங்கியது. மீன் விற்கும் சந்தை மண்டபத்தடியில் போய் ஒதுங்கிநின்றார் சம்மாட்டியார்.

மின்னல் மின்னியது. ஆழமில்லாத கரைப் பகுதியிலேகூட அலைகள் எழும்பி வெகு தூரத்திற்கு உயர்ந்து மோதிச் சிதறுவது பட்டது. வீசிய மின்னலில் வெண் நுரைகள் குமிழிவிட்டுச்சுழல்வதை அவர் கண்டார்.

அந்த வெண் நுரைகள் மரியாள் அவர் அகத்தே நடத்திக் கொண்டிருந்த வெறியாட்டத்திற்கு இன்னும் வலிமையைக் கொடுத்தன. இன்றைக்கு எப்படியும் பழிவாங்கிவிடவேண்டும்என்று கருதும் மரியாளை ஒருகாலத்திலே நெஞ்சின் மையமாகக் கொண்டு அவர் சுற்றிப் படரவிட்டிருந்த இன்பக் கற்பனைகளை அந்த வெண்நுரைக் குவியல் தட்டிவிட்டது. 'நல்ல கொழுத்த நீண்ட கயல்மீன் வெண் நுரைக் குவியல்களிளே சுற்றிச் சுழன்றாடும் கண்கள் மரியாளுக்கு' என்று அவர் எண்ணுவார். இன்றைக்குப் புறத்தேபரவிவரும் கடும் குளிரைப் போலத்தான் அவள் தண்மையானவள். தெளிந்த நல்லெண்ணெயை உடம்பு பூராவும் பூசினாற் போன்றமினுமினுப்போடு—சீ—நாய் அவள்-அதற்குமேல் அவர் எண்ணவில்லை. இன்பமான எண்ணங்களை நசுக்கி அவருக்கு அவள் மேல் அந்த எண்ணங்கள் இன்னும் பலிவாங்கித் துடிக்கப் பண்ணி

விடவேண்டு மென்ற வெறியைத் தான் கிளப்பின.

பார்க்கப் போனால் என்னைப் பற்றிப் படரவேண்டிய கொடி-எல்லாம் அப்பன் செய்தவினை என்று கலங்கினர் சம்மாட்டி. லூசியனுக்கு வீட்டில் எப்பொழுது இடம் கொடுத்தாரோ அன்றைக்கே தன் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது மாதிரித்தான் இன்றைக்கு நாவாந்துறையின் புறவீதியில்பெரிதாய் அமைந்துகிடந்த அந்த மீன் சந்தை மண்டபத்தில் ஒதுங்கியிருந்த போது அவருக்குப் பட்டது-எல்லாம் மாறி லூசியன இப்போது அவர் சிந்தையில் வந்துமிதந்தான்-

இன்றைக்கு அவன் தொழிலுக்குச் சம்மதித்துக் கிளம்பியிருந்தால் எம்படியும் அவன் மீண்டிருக்க மாட்டான். மரியாள் விதவையாக விம்முவாளே என்று எண்ணினர். இன்றைக்கும் மரியாள் தடுத்தாள்—அன்றைக்கும் மரியாள் எவ்வளவு கேவலமாகப் பேசினள். அன்றைய சம்பவங்கள் நினைவிற்கு வந்தன.

உற்றம் சுற்றம் என்கிற பந்தங்கள் அற்று ஆழமான கடலில் சுதந்திரமாய் வாழும் .திமிங்சிலம் போன்றவன் லூசியன். எப்படியோ அவன் திறமையைக் கண்டு இன்றைய சம்மாட்டியார் அவனைத் தன் வீட்டில் ஏற்றுமகனைப்போலத்தான் பார்த்தார். புதிய வசதிகளோடு அவன் நன்ருக வளர்ந்தும் விட்டான்.

அப்போது தான் இன்றைய சம்மாட்டியார் வெறிக்கும் துன்பத்திற்கும் காரணமான காட்சியைக் ண்டார். 'நல்ல பழம் தனக்கே சொந்தம்' என்று அக்கறையற்றுக் கிடந்த அவர்மனதிலே 'உனக்கில்லை. அநாதையான உன்மாமன் மகள் உன் வீட்டில் வளர்ந்தால் உனக்குச் சொந்தமாகிவிடுமா- அது வலிமையான இன்னெரு அநாதையை அணைத்துக்கொண்டு விட்டது' என்பதை அவருக்குஉணர்த்தியது.

வெளியே மழை சோனவாரியாகக் கொட்டிக் கொண்டிருந்தது. இடையே மழையை முறித்து 'ஊ' என்று கடும் காற்று வீசியது. அவரது உடம்பு நடுங்கியது. புறத்தே பரவியிருந்த வலிமையான குளிர்தான் அந்த வலிய உடம்பை நடுங்கப்பண்ணியதா? இல்லை. அந்தக்கொடிய சம்பவந்தான அதற்குக் காரணம். அழகான சிப்பி ஒன்றைப் பார்த்து வியந்துகொண்டு அதை மரியாளுக்கும் காட்டி அனுபவிக்கவேண்டு மென்ற வேகத்தோடு ஓடிய சம்மாட்டியாரின் சிந்தனையைப் பிளப்பதுமாதிரிக் குரல் கேட்டது.

'லூசியா உன் கயிற்றில் தொங்கும் யேசு நாதர் படம்பதித்த வெண்கலத் தகட்டை நீக்கி என்ரை' படத்தைப் பதித்துப் போடுகிருயா?

யேசுநாதரை ஆயிரம்தடவை மன்னிப்புக் கேட்டுக் கொண்டே அந்தக் கேள்வியைக் கேட்டாள் மரியாள்.

'என்ன மரியாளே என்னம்மா வார்த்தை. நான் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு இனிமேல் இல்லை என்கிற விடிவளித்து உன்னையும் என்னுடையவளாக்கப் போகிற யேசுநாதர் படம் பதித்த தகட்டையா நீக்கச் சொன்னுய்'- லூசியன் பதில் மரியாளுக்கு அழுகையை வெடிக்கப் பண்ணியது. கேட்போம்

கட்டாயம் 'ஓம் இதோ' என்று கழற்றி வீசுவார். அப்போது நாம் அதைத் தடுத்துவிட்டுக் கொண்டு சிரிக்க வேண்டுமென்று எண்ணிக் கேட்டவளுக்கு இது வேதனையாக வும் பலத்த அடியாகவும் இருந்த தால் அவள் விம்மி அழுதாள்.

'லூசியா இவ்வளவுதானு உனது அன்பு. பிரிய மெல்லாம் யேசுநாதர் மேற்தான், இல்லையா?'

லூசியன் பொறுக்கமாட்டாத வனுய் டக்கென்று மரியாளை அணைத் துக் கொள்கிருன்.

—இவ்வளவும் அவருக்குப்போது மென்ருகிவிட்டது. அதற்குப் பிறகு லூசியனை அழித்துவிட எத்தனை யோ சந்தர்ப்பங்களை அவர் எதிர் பார்த்தார், இன்றைக்கு நடந்தது போலத்தான் அவையும போய்விட் டன. அவர் கடைசியாகச் செய்த சூழ்ச்சி அவர்களை இறுக்கமாகப் பிணைத்துவிட்டது.

வழக்கமாகப் போகிற தூரத் திற்குக் கூட லூசியனும் சம்மாட்டி யாரும் வத்தையில் போய்விட்டார் கள். இறங்கி வலையை ஏற்றுகிற போது முரல் மீன் ஒன்று பாய்ந்து லூசியனை கிழிக்கிறது. கருங்குருதி பீறிட்டுப் பாய்கிறது. எட்டி ஒரு மாதிரி லூசியனை அமுக்கியபின்னர் சம்மாட்டியார் வேகமாக வத்தை யைத் திருப்பிக் கொண்டு வந்து விட்டார்.

எப்படியோ லூசியனை வேறு வத்தைக்காரர்கள் கரை சேர்க்கி ருர்கள். லூசியன் ஆஸ்பத்திரியில் கிடக்கிருன். இரகசியமாக மரியாள் போய்ப் பார்த்துவிட்டு வருகிருள். திருமபி வருகிறபோது அடக்கமுடி யாத ஆத்திரத்தோடு சம்மாட்டி யார் கேட்டார். "உனக்கென்னடி அத்த நாயிடம் இவ்வளவு பாசம்?" அடக்கமுடியாத ஆத்திரத்துடன் 'தூ' நாயே—மனிதன் எல்லாம்நாயா கப் போகிருனும். நாய்களெல்லாம் மனிதனுகப் போகுதுகளோ"- லூசி யன் கூறிய சம்பவத்தை நினைவிற் கொண்டு கத்தினுள். எப்படியோ சம்மாட்டியார் ஆத்திரத்தை அடக் கிக் கொண்டார். எப்படியும் இவளது பாசம் கொண்டவனைப் பிரித்து விட்டு இவளைத் துடிக்கத் துடிக்கப் பார்க்கவேண்டுமென்ற அவரது எண்ணம் அன்றைக்கு வலிமை பெற்றது.

இந்தப் பதிலை இன்றைக்கு அந்த மண்டபத்தடியே இருந்து கொண்டு எண்ணுகிறபோதுபெரும் வெறியாய் அந்த உணர்வு அவருக்கு நிறைந்தது.'காலில்' ஏறி ஊர்ந்த ஒன்றைப் பற்றி நசுக்கிய படியே சம்மாட்டியார் சிந்தித்தார்.

ஆஸ்பத்திரியில் இருந்தும் வந்த லூசியனை அவர் சந்தித்து மன்ருட்டமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அந்த நடிப்பிலே அவ ரது மனம் முரல் மீன்போல எவ் வளவு இளகியதாகவும் வளைவு கொண்டதாகவும் காட்டிக் கொண் டது. லூசியனும் நம்பினுன். திரு மணமும் செய்து வைத்தார். அந் தக்காரியங்களை ஆற்றுகிறபோது சம்மாட்டியாரின் இருதயத்தையா ரேனும் பிளந்து பார்த்திருக்கக் கூடுமானல் 'மரியாள் மணம் செய்துகொண்டபிறகு எப்படியும் அவளது அன்புக் கணவன் லூசி யனைக் கொலை செய்துவிட்டு கண் ணீரும் கம்பலையுமாக மரியாளைப் பார்க்கவேண்டும்— அவள் படுகிற வேதனைகளைக் கண்டு கெக்கள

கொட்டி நகைக்க வேண்டு'மென்ற வெறிகிடந்தது என்பதைக் கண்டிருப்பார்கள்.

புறவீதிக்கு அவர்கள்குடிவந்துவிட்டார்கள். புதுக்குடித்தனம் ஆரம்பித்தும் இரண்டு மாதங்களாகிவிட்டது. தாம் நடத்திக் கொண்டிருந்த விடலைத் துறையிலே லூசியனுக்கு நூற்றைம்பது ரூபா முற்பணம் கொடுத்து அமர்த்திக்கொண்டார். சந்தர்ப்பங்கள் இன்னும் வரவில்லை. இன்றைக்கு வந்த சந்தர்ப்பங்களைக்கூட அந்தமரியாள் தடுத்துவிட்டாளே! அவருக்கு மூளை கலங்கியது.

ஏமாற்றங்களின் கொதிப்பு அவரை வெறியனாக்கியது. வெளியே சோனாவாரியாக மழைபெய்து கொண்டிருந்தது. இடையே முறித்து முறித்துக் காற்று ஓலமிட்டது. இடையே நின்று நின்று பெய்த மழையின் ஓலம். இவற்றிற்கெல்லாம் மேலாய் அவரது நெஞ்சு ஓலமிட்டது! 'சம்மாட்டியாரே சந்தர்ப்பங்கள் நீர் எதிர்பார்க்கிறமாதிரிவராது. நீரே உருவாக்கிக் கொண்டும் பயனில்லை. துணிந்துபோம் -பலமான கைகள் இருக்கிறதே போதாதா?'–

வெறிகொண்டு ஓடினார் சம்மாட்டியார். இடையே வீசுகிற பலமான காற்று அவரை எற்றியது. மரங்களையும் கம்பங்களையும் பிடித்துக்கொண்டு மண்குடிசையையே நோக்கி ஓடினார்சமமாட்டியார்பயங்கரமாக இடி இடித்தது! மின்னல்மின்னியது!

மண்குடிசையை அண்மித்து விட்டார். எட்டிப் பார்த்தார். அவர் செவியில் லூசியன் கத்துவது கேட்டது.

'மரியாள் சம்மாட்டியார்கொடியவராக இருக்கலாம். நீயும் நானும் அவரது உப்பைத்தின்று வளர்ந்தவர்கள். வேகமாக எற்றி வீசுகிற இந்தப் புயற்காற்றிலே அவரது வத்தைகள் சின்னாபின்னமாகிப் போவதை நான் அனுமதிக்க முடியாது. போதாததற்கு நாளைக்கு விரைவாகக் கிளம்பவேண்டுமென்பதற்காக உதிர்த்து வள்ளத்திலேயே போட்டிருந்த மீன் வலைகளும் குச்சிகளும் அழிந்து போவதை நான் அனுமதிக்க முடியாது'– யேசு என்னைமன்னிக்கவே மாட்டார்.

வேகமாகத் தென்னை ஒன்று சரிந்து விழுவது மூவருக்கும் கேட்டது! லூசியன் பாய்ந்து ஓடினான். 'லூசியா கவனம்' என்று மரியாள் கத்தினாள். பளீரென்று மின்னல் வீசியது. லூசியன் கேட்டதற்கு அடையாளமாய்க் கரங்களை ஆட்டினான். சம்மாட்டியார் ஒதுங்கிக் கொண்டார்.

இப்போது சம்மாட்டியாருக்குப் பழைய வெறியில்லை. லூசியன் வார்த்தைகள் அவரைப் புற உலகத்திற்கு இழுத்திருந்தது. லூசியன் வார்த்தைகள் அப்போதுதான் அவருக்குப் புரிந்தது 'தமது வத்தைகள்' என்ற எண்ணம் அவரைப்புற உலகத்திற்கு இன்னும் இழுத்தது. லூசியனை எண்ணினார் அவர். மண்டபத்தில் இருக்கும் யேசுநாதர் போல அவன் படிப்படியாக அவரது நெஞ்சத்திலே உயர்ந்து நிறைந்தான்.

வத்தைகள் கட்டப்பட்டிருந்த இடத்தை நோக்கி ஓடினார் சம்மாட்டியார். அவரைக் சுற்றிச் சுழன்று

எற்றி எற்றி வீசியதுகோரக்காற்று. தள்ளாடித் தள்ளாடி ஓடினர். எப்படியோ மண்டபத்தை அடைந்து விட்டார். பளீரென்று பிரகாசமாக வீசுகிற மின்னலிலே கரிய குரங்கொன்று நெளிந்தும் வளைந்தும் நங்கூரத்தில் வத்தைகள் பிணைக்கப்பட்ட கயிற்றுடன் போராடுவது மாதிரி இருந்தது.

வேகமாய், இன்னும் வேகமாய் காற்று வீசியது நாலாபுறமிருந்தும் ஒரே குவியலாய்க் கொண்டுவந்த நீர் எம்பி எம்பி மேலே தூக்கி எற்றி எறிந்து. இடிஇடித்தது. பிரளய காலம் போல எங்கும் நிலை குலைந்தது! பளீரென்று மின்னல் ஒன்று பாய்ந்தது- 'மரியாள்' என்ற வெறிக் கத்தல் பிறந்தது.

சம்மாட்டியாருக்கு உடம்பு வேகமாக நடுங்கியது. அவர் விக்கி விக்கி அழுதார். 'ஓசியா! யேசு உன்னை அமரனுக்கிவிட்டார். என்னை மன்னிக்கவேமாட்டார்' என்று வெறிபிடித்துக் கத்தினர். ஆண்டுகளாய் நெஞ்சின் உள்ளே புரையோடிக்கிடந்த கொடுமைகள் எல்லாம் கரைந்து கரைந்து நீராய் அவர் கண்களிலிருந்தும் ஓடியது.

❁


# ருதா சாந்துப்பொட்டு

கண்ணைக் கவரும் வண்ணச்சாந்து
மங்கையர் அணியும் மங்கலச் சாந்து!
சிறுவர் சிறுமியர் விரும்பும் சாந்து!
குழந்தைகள் திருஷ்டி கழிக்குஞ் சாந்து!!

ருதா சாந்துப்பொட்டு பல வர்ணங்களிலும்
அரைஅவுன்சுப் புட்டிகளில் அடைக்கப்பட்டு
எமது கம்பெனியில் விலைப்பட்டுவருகிறது.

பலமாசங்களுக்குப் பழுதுபடாமல் இருக்கத்தக்கது.
முகத்தற்கு அழகையும் வசீகரத்தையும் கொடுக்கவல்லது;
மனோரம்மியமான ருதா சாந்துப்பொட்டு
தொகையாகவும் சில்லறையாகவும்
எமது கம்பெனியில் பெற்றுக்கொள்ளலாம்.

**தொகையாக வாங்குவோர்க்கு**
விசேஷ கழிவு கொடுக்கப்படும்

**எஸ். சுப்பிரமணியம் அன் கம்பெனி**
**53, காங்கேசன்துறை வீதி,**
பெரியகடை, யாழ்ப்பாணம்.

கிளை:-

**பாலேந்திரா பில்டிங்**
160, செட்டியார்தெரு, கொழும்பு - 11.

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்!


மிகச் சிறந்த
படங்களுக்கு...?

# பிறின்ஸ்

சுன்னுகம்.

# மாலாஸ்

காங்கேசன்துறை.



# கவிதைப் பொங்கல்

தங்கத் திருநாளாம் தமிழ்ப் பொங்கற் பெருநாளில்
எங்கள் கவிஞர்களை ஏற்றமுடன் நாமழைத்து
"பொங்கல் உங்கள் நாவில் போட்டுவிட்ட புதுச் சுவையை
எங்களுக்குச் சொல்லுங்கள்; எடுத்தெழுதிப் பரப்புகின்றோம்".
என்று நாம் கூற எல்லோரும் அதைக்கேட்டு
'நன்று நன்றெ"ன்று இசைந்தார்கள்; இசைத்தார்கள்.
இனிப்பாகிக் கைப்பாகி இருவர்க்குப் புளிப்பாகி
நினைவில் உவர்ப்பாகி உறைப்பாகிப் போனாலும்
தனித் திறமை பொங்கியெழும் தமிழ்க் கவிதைப் பொங்கலினை
இனிப் போய்ச் சுவையுங்கள்; இனிப்பாய் இனித்துவிடும்.

## புளிப்பு

-மஹாகவி-

புளித்தது குழம்பெனப் புதுமொழி புகன்றீர்-
போன மாதம் முழுநிலாப் பொழிந்து
வெள்ளமாய் வழிகையில், வெண்மணல் முற்றத்தென்
முன்னமர்ந் திருந்து, மூக்குநீர் வார,
முசுட்டையும், அகத்தியும், முருங்கையும், கொவ்வையும்,
சாமையும் சேர்த்துப் புளிக்கஞ்சி சமைத்து நான்
அருத்தவும், அருந்திய அன்றைக்
குறைத்தது, கைத்ததென் றுரைத்த தில்லையே!

கட்டில் நீங்கிஞர் காலேநான் எழுநகயில்,
' பனிக்குளிர் போமுன் பகலு மாமோ?
வெய்யில் எம் யன்னலில் விழுமுன. ஓடி
அடுக்களை செல்லுதல் அடுக்குமோ? கூவிய
சேவ லுக்குச் செருப்படி தகும்!" எனச்
செப்பியும், தலைப்புச் சேலே தொட் டிழுத்தும்,
உமிந்துமிந் தென்னுத டுணடீர்;
துடையாக் கடைவாய் துவர்த்ததோ அன்றே?

ஏறிப் பறித்த காய் எறிபடப் போமோ?
ஊன்றிய இருப்பு முளையினில் உடைந்து
பொச்சகன் றதை ஒரு புறம் ஒதுக் குவதோ?
சிரட்டையே இது எனச் சினந்து விழுவதோ?
கட்டுடல் கழன்ற தாயினும் காண்பதற்கு
வெள்ளை யாக உள்ள உள்ளீ
டுவர்த்தலும் கூடுமோ உமக்கு?
—புளித்த தென் குழம் பெனப் புகன்றீர் இன்றே!

"நாளையே திரும்புவன்," நான்என நடந்தவர்
இரண்டு வாரமாய் எங்கு போய்த் துயின்றீர்
"வாழி அப் பயல் புது மனையவள்!" என்று
வந்தீர்; "வரிவளை வட்டிலில் இட்ட
கோழியின் கறியும், குழம்பும், பொரியலும்,
இரசமும் எழுப்பம்!" என் றென்று வாய் மென்,
றந்தனை புகழ்ச்சிகள் அடுக்கச்,
சத்தியமாய் அவள் சமையலோ இனித்ததே?

# எங்குமே பொங்கல் இனிப்பு

## பா. சத்தியசீலன்

அன்னை இயற்கை அடுப்பிட்டாள்; ஆம் கிழக்கில்
கன்னங் கரிய மலைக்கல்! கனல் மூட்ட
ஊதுகிறுள் காற்று! உயரப் பறந்தனவே
காக்கைக் கரிகள்! கருமேகச் சாம்பர் இவை.
போக்கை மறைத்துப் புதுநெருப்பு; மேலாகப்
பொன்னுல் அமைத்த புதுப்பானை வைத்துவிட்டாள்
முன்னுல் அரிசி; முதற்பாலை இட்டாளே!
வெப்பம் வளர்ந்து விரியும்; புதுப்பானை
ஒப்பச் சிவந்து கனல, உடன் கொதித்துப்

பொங்கி வழியும் புதியஒளிப் பொங்கல்! அதை
எங்கும் உயிர்கட்கு இனிக்க அருத்தினளே.

⚜ ⚜ ⚜

காடுகளில், செந்நெற் கழனிகளில், செந்தமிழர்
வீடுகளில், மேலுயர்ந்த விண்ணில், ஒளிப்புதிதை
அள்ளிப் படைத்தாள் அவள்; அப் புதிதுண்ண
துள்ளி எழுமே உயிர்கள்! துயர்போக்கப்
பொங்கலினை உண்டு புதிய நினைவினொடு
எங்கும் இயக்கம்! இனித்த மனநிறைவு!
ஏரிகளில் அன்னை இலையிட்டாள்! அங்கெல்லாம்
வாரிப் புதிதை வழங்கினாள்—சோர்வோடு
மொட்டாய்த் துயின்ற முளரிப்பெண் வாய்திறந்து
தொட்டாள் இனிய சுவை.
ஓடைகளில் எங்கும் ஒளிப்பால் அவள் வார்க்கப்
பாடி நகரும் பனிநீத்தம்—கூடிக்
குதிக்கும் கயல்கள்! கொடியாய் அலைகள்!
கதிக்குமே இன்பக் களி!
வானில் ஒளிபொங்க வையத்தாய்க்கு ஒய்யெனவே
மேனியெலாம் பொங்கும் விளைவு! மணல்களெலாம்
பச்சைப் பசும்புற் பரவல்! கழனியெலாம்
கச்சை வரிந்து கலப்பை யுடன்உழவர்!
தோளாற்றல்! மேல்வியர்வை! தோன்றும் அயர்வொழிக்க
வாளாற்றும் கண்ணூர் வரவு! தலைகளிலே
பானை சுமந்தார் 'பழைசு' உள்ளே! நெஞ்சகத்தில்
அன சுமையோ 'புதிசு'! அன்பர்க்கு அன்னமிட்டார்!
நேற்றையப் பொங்கலதே நெஞ்சுக் கினித்ததெனில்
சோற்றிலோ உண்டு சுவை!
கார்மேகம் பொங்கிக் கழனிகளில் போய்ப்படைக்க
நீர்மேவிப் பாயும் நெடிய மடைகளெலாம்.
நீரில் நிமிரும் பயிர்கள்! அதைப் பருகி
ஊரில் நிமிரும் உவகை! கதிர்குலுங்க
வாழைத் தொடையார் வளைகுலுக்கித் தாம் நகைக்கக்
காளைகளைக் காணுங் கதிர்!
கதிர்போய் உடல்மறைக்கக் கன்னி முகம்
புதிர்தான் கதிரினிடைப் பூ!
வாழைமீன் பாய்ந்து வயலின் கதிர்அளக்கும்
நாளே அறுவடைசெய் நாள்!
அறுப்பார்! குவிப்பார்! அதனிடையில் அன்பை
நிறுப்பத் தவறுவரோ நெஞ்சத்தால்—பொறுப்பாரே
'நெல்லு மணியால் நிமிர்குன் றி'டைப்புகுந்து
தொல்லை தரவும் அவர்!
போரிடையும் காதல்! புதுமணியை இற்கொணர
நேரும்பொழுதும் நெடுங்காதல்!—ஊரில்
வரப்பில்! வயலில்! வழியில்! விழவிலென
நிரப்புவரே காதல் நிகழ்வு!

⚜ ⚜ ⚜

பட்டு விசித்த பனிநீர்ச் சுனைநாடி
சிட்டாய்ப் பறந்தார் சிறகின்றி—கட்டுடலார்!

மூழ்கினர் மொட்டாய்! முழுமலராய் மேலெழுந்தார்!
நாள்மலரை வெல்லு நயம்!
நீந்தக் கயல்கள்! நிலையில் நெடுங்கொடிகள்!
ஏந்து முலையாம் புணையேறி!—தாந்தாமே
கூவென் றொலிக்கக் குயில்கள் பறந்தனவே
பாவென்ற இன்பம் அது பார்!
நோக்கிற் கயல்கள் இரிய, நொசியுமிடை
தூக்கித் திரியும் துணைமுலையார்—நீக்கினர்
பூக்கள் பொலியும் புதுச்சுனையை; அந்நொடியே
ஆக்கினர் 'அன்பர்க்கு 'அது'!

⁂

எங்கும் நிகழ்ந்த இயற்கை நலப்பொங்கல்
இங்குற்ற தென்னும் எழில்பரந்த முன்றில்களில்
புத்தம் புதிய அரிசி புதுப்பாலில்
முத்தம்போல் வேக, முழுமகிழ்வில் அன்னையரும்
காளையரும் கன்னியரும் கரும்பைக் கடித்தந்த
நாளை உவக்கும் நல்ல சிறுவர்களும்
புத்தாடை பூண்டார்! புதுமனதில் இன்பவெடிச்
சத்தம் எழுந்ததிரும்! சாயாத் தமிழ்ப்பாப்போல்
பொங்கிற்றே பானைப் புதுப்பால்! அதுகண்டும்
மங்களங்கள் கேட்டும் மகிழ்ந்து புதிதுண்டும்
எங்கும் இனிப்புச் சுவை!

# பொங்கல்: உவர்ப்பு

## நீலாவணன்

உண்மையின் புன்முறுவல் போலக் கிழக்கெல்லாம்
வெண்ணெய் பரந்துவெளுப்பாகி, மெல்லமெல்லக்
கங்குல் நடுங்கிக் கடைகட்ட, ஆழியிடைச்
சிங்கம் பிடரிசிலிர்த்தாற் போற் செங்கதிரோன்
தோன்றுதற்கு முன்பே துணைவி துயிலெழுந்து
தேன் தமிழைக் காதில் தெளித்தாள்;
குளித்தேன் போய்.
பொங்கலுக்கு தேங்காய் உடைத்து, புதுப்பூநார்ச்
சங்கிலியும் போட்ட புதுப்பானைக் குள். நிலவை
சாறு பிழிந்த சலவைப்பால் ஊற்றி, அதில்
நீறும் புனைந்தாள்; நெருப்புச் சிறிதிருந்த
புத்தம் புது அடுப்பில் புத்தமுதம் ஏற்றுமிவள்
கைத்தலங்கள் கண்டு, கனன்று சினங்கொண்டு

சேத்துக் கிடந்த சிறுநெருப்புச் சீறி, அழற்
கொத்தாய் எரியும் கொழுந்தின் பொருமையினை
எள்ளி நகைத்தாள் இவள்; அதனைக் கண்டு, வெகு
பள்ளத்தில் நின்ற பசும்பால் வெகுண்டெழுந்து
துள்ளிற்று, பொந்தினிலே தூண்டிவிட்ட நாகம்போல்!
கொல்ல வரும்புலியைக் கூட, வசப்படுத்தும்
தாய்மையின் செங்கோல் அகப்பை தடவியபின்
செய்மை மனவயலில் வந்த அரிசிகொட்டி
இஞ்சி கரும்பு இளநீர் பழப்பாகு
மஞ்சளும் சர்க்கரையும் மாதுளையின் தேறலொடு
கொட்டி, வயிறு குளிரத் துலாவுகிருள்.
"கெட்டோம்! தாய்அன்புக்குக்கேடு நினைத்தவர் நாம்
முட்டாள்!" என, தன் முகம் பொங்கி மூச்சுவிட்டு
கொட்டி முழக்கியமும் பாற்குழம்பின்...
கண்ணீரில்,
பொங்கல் புளுங்கிப் பொதும்பி அவிந்ததுவோ?
செங்கை அமுதங் கடைதல் பொறுக்காத
கங்குல் அசுரனது கண்ணீர் ஒழுகிற்ருே?
எங்கும் இனிக்கின்ற பொங்கல், எமக்குமட்டும்
உப்பாக மாறி உவர்ப்பானேன்? உன்வாயால்
செப்படியே! என்னச், சிணுங்குமிவள் கன்னங்கள்
உப்பும் படியாய் உறிஞ்சினேன்; ஓரக்கண்
செப்படி வித்தைகளும் செய்தபின்பே...
செப்பலுற்ருள்;
தீசரின் பாவ நெருப்பேந்தி தீருன
யேசுவும், ஆட்டுக் கிரங்கியழும் புத்தனும்,
பேசரிய வெற்றிப் பெருமானுர் நாயகமும்,
மாசற்ற காந்தி, மகான்கள். அவதரித்த
புண்ணியஞ்சேர் ஆசியாப் பூமியிலே...
வந்தவர் நாம;
பென்னம் பெரிய உலகின், பெரு மனிதன்
'கென்னடி'க்கு நேர்ந்துவிட்ட கேட்டில் உலகமெலாம்
கண்ணீர் நதிகள் கதறியதைக் கண்டேனும்
எண்ணிச் சிறிதே இரங்கி, ஒரு சொட்டுக்
கண்ணீர், அனுதாபம் காட்டாத 'கார்ட்டுனிஸ்ற்'
பண்ணிய வான்கள் தமையெண்ணி, நம்பொங்கல்
கண்ணீர் சொரிந்ததொரு காரணத்தால்,
பொங்கல்
உப்பாயிற் றென்ருள், உது சரியே.
ஆனாலும்,
ஓர் நாள் உழவர் உவகைத் திருநாளில்
ஆரார் சிறுமைக்காய் ஆர்நாம் அழுதற்கு?
சீர்கண்டு பொங்கும் செழும்பாலே!
நீ அழுது,
ஊரெல்லாம் பொங்கல் உவர்ப்பு.

# பொங்கல் கைத்தது!

## அம்பி

நல்லூர் மணியிசை நாதவலைச் சுருள்
நாற்றிசை யும்விரிந் தூடுருவிப்
பல்லா யிரமுளம் பள்ளி எழுந்திடப்
பாடுங் குயில் குருவிக் குலங்கள்!

ஊருக் குணவளித் துண்ணும் உழவனி ன
உள்ளம்நிறைகிற மங்கள நாள்
ஏரைப் பிடித்திடும் ஏற்ற முணர்ந்திறை
ஏத்திப் பரவிடு மின்ப நிலை!

எல்லையில் லாவின்பம் எங்குஞ் சுரந்திட
ஏங்கு மனமுயிர்த் தோங்கி நிற்கக்
கொல்லுங் குளிர்பனி கூதிர் மறைந்திடக்
கோடை பிறந்தது நெஞ்சமெலாம்!

மாரிமழை வெள்ளம் மாய்க்கும் வெயிலிடை
மண்ணின் வளம் பெறப் பாடுபட்டோன்
பூரிப் படைந்திடு புண்ணிய நாளிலே
புன்முறு வல்செயும் வையமெலாம்!

தேனில் தெளிந்த நீ ராடிவந்தேன் அவர்
தென்றல் நீ ரோடையில் ஆடிவந்தாள்
பானை அமர்ந்த தடுப்பினிலே தமிழ்ப்
பண்பு வளர்ந்தது பாரினிலே!

கோலமிடு மகக் கோகிலப் பூங்கரங்
கோதில் பணிக்கசைந் தாடியதும்
ஞாலமெலாமொளி ஞானம் பிறந்திட
ஞாயிறெழுந்துநி மிர்தருணம்!

வெள்ளை மனத்தெழு புன்னகை போலுலை
விம்மியது அன்பு பொங்கியது!
கொள்ளை இன்ப நெஞ்சில் பொங்கியது எங்குங்
கோடி துயர் தொல்லை மங்கியவே!

பொன்னை மணியை நிகர்த்த பொருளெனப்
போற்றி யமுது படைத்து மதுக்
கன்னல் கனிவகை காயிள நீரொடு
காதற் குலங் கரங் கூப்பிநின்றேம்!

சிந்தைதவ்வொயிரமாயிரங் காலத்துச்
சீரும் மரபுஞ் செறிந் தொளிர்ந்து
செந்தமிழ விற்றழித் தேயிரந் துண்கிற
சேதிசொல்ல நெஞ்சஞ் சாம்பியதே!

ஆற்றங் கரைமர மாந்தொழி லுக்கெங்கள்
ஆக்க மிழக்கிற ஊன நிலை
நாற்ற மெடுத்துள நாசியிலே மிஞ்ச
நாணிக் குறுகி நலிநது நின்றனை!

மந்தைக் குலமென மானமிழநதுண்டு
மாண்பு தகர்ந்த தழும்புடனே
முந்தி யமர்ந் தமுதுண்ணும் பொழுதினில்
முன்னை மரபழிந் தாடியதால்,

கைத்தது பொங்கல் கனிவகை காய்கறி
கன்னல் கரும்பவை அத்தனையும்
தைத்திரு நாளில்ல தன்மான மென்றொரு
தாக மெழுந்துத ழைத்ததுவே!

# பொங்கல் புளித்தது!

## "தீமிலைத்துமிலன்"

கொவ்வையிதழ்ச் சுளைமலரப் பசும்பா லூற்றில்
குளித்தெழுந்த பனிப்பரல்கள் குறும்பாய்ப் 'பென்சில்"
கவ்விவிட்டு விட்டொளிரக் கண்களென்ற
கருவண்டு முகமலரிற் கவிழக் காதல்
நவ்வியென அவைமருள மீண்டும் நாண
நடுக்கத்தால் புல்மேய நளினம் பொங்க
யவ்வனம்பொற் குமரியவள் வீற்றிருந்தாள்
நடந்ததுகேத் திரகணித வகுப்பு மாதோ.

'தாட்டாந்தம் புரியவில்லைச் சற்றுச் சொல்லித்
தாருங்கள்' என்பாளா? சரிதான் பார்ப்போம்"
கோட்டை கட்டிக் கொண்டிருந்தான். ஆனால் அந்தக்
குயிலியவன் குறிப்பறிந்து கொண்டாளில்லை.
ஏட்டை வைத்தார் மணியடிக்க எழுந்து சென்றார்,
இடைவேளை. அவள் இன்னும் இருக்கின்றாளே!
மூட்டை கட்டி' வெட்கத்தை வைத்து விட்டு
முன் வந்தே விளக்கி அதை முடிக்கச் சொன்னான்.

காலையிலே நிலவுவரும். முல்லை பூக்கும்.
கருங்குவளை முகைவிரிந்து கனவு காட்டும்
மேலாடை விலகுமிள விரல்களோடி
வெறிக்குமுத முகமறைத்து வெட்கி நிற்கும்.
பாலோடு மகரந்தப் பொடிகலந்து
பட்டுமலர் மெருகூட்டிப் படைத்த வண்ணக்
கோலமொன்று வந்தமரும். கொடி நுசுப்போ
'கொடிகரத்தை ஒடிந்திடுவே' னென்று கூறும்.
''நன்றி''யென்றாள். 'எதற்காக இவளுக்குப்போய்
நாளதோறும் வலிந்துதவி செய்தல் வேண்டும்
ஒன்றிரண்டு முறையேனும் அன்பு நோக்கால்
உளம்காட்ட மாட்டாளா?' என்பான் 'பெண்ணை
என்றிருந்தால் அப்படித்தான், முட்டாள்' என்று
எதிர்ப்புவரும் தனக்குள்ளே இனிக்கும் அந்த
'நன்றி' இனிக் கனிந்துவிட நயனம் பேசும்
தாள்வரட்டு மௌனமனயாழ் நரம்பு மீட்டும்.
''இதைக்கொஞ்சம் சொல்லுங்கள்'' என்ற வீணை
இழைவினிலே இவ்வுலகுக் கிறங்கி வந்தான்.
'எதைச்சொல்லக் கருவண்டு இரண்டெழுந்து
இதயத்தைத் துளைப்பதையா எடுத்துச் சொல்ல?'
கதைக்கின்ற அவன் விழிகள் அவள் விழிக்குள்
காண்பதனை அவள் காண வில்லைக் கொல்லோ?
பதைப்புண்டு குனிகின்றாள், அவனும் தன்னைப்
பாங்காகச் 'சமாளித்து'ப் பாடம சொன்னான்.
''விளங்கிற்றா?'' ''ஓம்; மிக்க நன்றி'' நல்ல
வேடிக்கை. இதைத்தானா விரும்பிக் கேட்டாள்.
'உளம் கொண்டு புரியத்தான் ஒரு நாட் பாடம்
ஓதத்தான் வேண்டுமதா?' அவள் போய் விட்டாள்.
குளம் கண்ட குழுக்கன்று விழுந்து நீந்திக்
குளிக்கத்தான் நினையாதா? குளுந்த திங்கள்
எழக்கண்ட வாருதியும் இதயம் பொங்க
இசைக்கத்தான் நினையாதா?-இயற்கை நீதி.
கல்லூரித் தலைவரின்முன் தலைகுனிந்து
கைகட்டி நின்றிருந்தான். அவளும் சோர்ந்த
அல்லியெனக் கண்ணீரைக் கொட்டி நின்றாள்
அவமானம் தாங்காளாம், ஐயோ பாவம்.
''சொல்லும், இதை நீர் எழுதிக் கொடுத்தீர்?'' ''ஆமாம்''
''சுகமாக வீட்டுக்குச் செல்லும்......'' ''மிக்க
நல்லதென்று நடை கொண்டான். அவளோ வீட்டு
நாயோடு காரினிலே நகர்ந்து சென்றாள்.

''மாடியிலே பழுத்தகனி நமக்கேன் அண்ணா?
வா'' என்று கைப்பிடித்து இழுத்தாள் தங்கை
'வாடியிலே பழுத்தகனி கதலி' யென்று
வைத்திருந்தாள் பொங்கலொடு. ''நீயெடுத்துத்
தாடியம்மா!'' எனவாங்கிச் சுவைத்தான் ''என்ன,
சரியாகப்புளிக்கிறதோ?'' என்றாள். ''சும்மா
போடி இது மாடியிலேபொங்கினாற்றான்
புளிக்குமடி' எனக்கென்று புன்னகைத்தான்.

# பொங்கல் உறைத்தது

## ச. வே. பஞ்சாட்சரம்

வெடியைக் கொழுத்தி வெருண்டோடுஞ் சின்னப்
'பொடி'கள் புரியும் குதிப்பை — வடிவாக
வானரங்க மாடி மடியில் மலர்ந்துள்ள
தேனரங்கு நோக்கிச் சிரிக்கின்ருள், — நானும்
விடுக்கின்றேன் வாணம்! விரைந்தேறி விண்ணில்
படுக்கென்று மின்னி வெடித்தது — திடுக்கிட்ட
மாடி மயிலின் தலைமீது வண்ணப்பூஞ்
சாடி சரிந்து சொரிந்ததுபோல் — சோடனையாய்,
பூத்தூவ நின்றப் புதுநிலவு கண்களிலே
பாத்தூவி என்னைப் பார்க்கின்ருள். — பார்த்திட்ட
தைப்பொங்கல் காதற் சரிதம் படைத்திட்ட
அப்பொங்கல் இன்பம் அழிவித்து — தப்பியவள்
ஏமாளி போல எனைவிட்டுத் தூரத்துச்
சீமானின் செல்லக் கிளியாகி — சீமைத்தேர்
ஏறித் திரிந்து இரவிங்கே வந்துளதால்
ஊறிற்று நெஞ்சில் உறைப்பு!

மண்ணிற் படுத்து மணிமூன்றிற் கண்விழித்துக்
கண்ணுக் கிருட்டில் கடைதிறந்து — உண்ணென்று
தந்தவற்றை வாங்கித் தரும்வேளை சாப்பிட்டு
எந்தவித ஆறுதலும் இல்லாமல் — நொந்துழைத்து
'ஊதாரி' எகன் முதலாளி ஓர்பக்கம்
'போதாது' என்கப் பொதுமக்கள் — வாதாடித்
திண்டாடித் தேடுஞ் சிறுகூலி அப்படியே
கொண்டாடிச் சென்று குறைநடுவில் — அண்டையுள
அஞ்சல் மனையில் அனுப்பிடுவன் ஊருக்கு!
நெஞ்சத்திற் பொங்கல் நினைவுந்த — கெஞ்சி
முதலாளி யார்க்கு முகமன் பலபேசிக்
குதிகொண்டு வண்டிக்குள் குந்தி — புதிதென்னும்
பொங்கல் சுவைக்கப் புகுந்துள்ளான் வீட்டினிலே!
அங்கே கொழும்பில் அலுவலிலே — தங்கிடுவோன்,
அப்பொழுதே வந்தோன், அவன்தம்பி, நிம்மதியாய்
எப்பொழுதுஞ் சாப்பிட்டினிதுறங்கி — அப்படியே
சம்பளத்தில் ஊர்க்குச் சதமும் அனுப்பாமல்
வம்புகளில் கொட்டி மகிழுபவன் — தெம்பாக
காற்சட்டை என்னுங் கௌரவத்தின் சின்னமொடும்
மேற்சட்டை யோடும் வீற்றிருந்தான்! — மேற்கொண்ட
பொங்கற்படையல், பூங்கதலித் தீங்கனிகள்,
கங்குல் முழுதும் கண்விழித்து — தங்கையுடன்
ஆச்சி பொரித்த அசல்வடைகள் அமுதினிக்கக்
காய்ச்சி எடுத்த கறிவகைகள் — மூச்சே
முடங்கும் படியாக முன்னிருந்து பெற்றேர்
கடிந்து அருந்தக் களிக்கின்ருன்! — கடைக்காரன்
வந்ததிலே யார்க்கும் மகிழ்வில்லை! "செல்லுவது
எந்த றெயில்?" என்று எரிகின்ருர். — வந்திங்கு

நீட்டித்தால் நட்டம் நிகழும் எனப்பயந்து!
போட்டார் கருகல் அடிப்பொங்கல் — வாட்டி
அறுக்கின்ற தந்த னியாயம்! பொங்கலிலே
உறைக்கின்ற தந்த உளம்!
''அத்தான் மறந்தால் அடியாள் அரைநொடியிற்
செததேன் சிறிதும் உயிர்வாழேன் — செத்தாலும்
ஏறெடுத்துப் பாரேன் எவரையுமே.'' என்றங்கு
வீறெடுத்த காதலினல் வீரங்கள் — கூறிட்டாள்
மாதொருத்தி! கேட்டு மகிழ்ந்தான் அவள்தலைவன்
சோதனைக்கோ! சொல்லி ஒருமாதம்! — சாதலுக்கு
ஓலைகிடைத்து உயிர்விட்டான் அத்தலைவன்!
நாலைந்து திங்கள் நடக்கவிலை! — ஓலப்
பழஞ்சலிப்பில் பாவம் விதவையர்கள் கூவி
அழுஞ்சமயம் சற்றுஞ் சலித்து — அழுங்காமல்
தான்மட்டும் அந்தத் தசைமாடு வேறொருவன்
தேன்சொட்டும் பேச்சில் திளைத்நாடி — ஊனில்
நரமபுணர்ச்சிக் குள்ளாய் நடத்துகிருள் பொங்கல்!
வரம்புணர்ச்சிமுற்றும் மறந்தாள் — பிரிந்த
அக்கணவன் ஆவி அறிந்து அவள்பணபை
வெட்கி யுறைக்கும் வெதும்பி!
ஓடித் திரிந்து உழைக்காமல் போர்வைக்குள்
மூடிக் கிடந்து முட்டையிடும் — பேடிக்குப்
பெண்டாட்டி யாகிப் பெருநாள் பிறபோலக்
கொண்டாட்டஞ் செய்யுங் குதிப்பின்றி — திண்டாடி
அழுங்கிக் கிடக்கும் அரிவைக்கு ஊரார்
வழங்குகின்ற பொங்கல வடைப்பெட்டி — புழுங்கும்
வெறுப்பிடையில் நெய்யள்ளி வீசியதால் வெட்கும்
உறைப்பிடையில் வேகும உளம்!



கொழும்பு விவேகானந்த சபையார் அணைமயில் நடத்திய நாவலர் பேச்சுப்போட்டியில் மேற்பிரிவு, கீழ்ப்பிரிவுகளில் முதல் பரிசு பெற்றவர்கள், செல்வி. பொ. பாறுவதி அம்பாள், செல்வன் பொ. முருகதாஸ், இருவரும் கீரிமலை நகுலேஸ்வர வித்தியாசாலை மாணவர்கள்.

# தேசீய உடை......!



டாகடா வி. தகநாயக்கா

ஏன் இர்தக் கோவணத்தோடு இங்கெழுந்தருளினுய்? என்று கேட்டுவிடாதீர்கள். இது வேறுயாருமல்ல; முன்னேள் இலங்கைப்பிரதமரும். அண்மையில் டாக்டர், பட்டம் பெற்றவரும், ஈழத்து அரசியல் வானில் சுடர்விட்டு பிரகாசிக்கும், தேசியவாதியும், பொதுஜன ஊழியனும், தனித்து நின்று டலபிரச்சனைகளை நிலைநாட்டிவருபவருமான காலிப் பிரதிநிதி விஜயானந்தா தகநாயக்கா அவர்களே, பிரமசாரியாக இருந்து ஏழைமக்களின் நல்வாழ்விற்காக அளப்பரிய சேவை செய்து வருகின்ருர். நாட்டில் ஏற்பட்ட சீலை துணிகளின், தட்டுபபாட்டை அரசாங்கத்துக்கும், பராளுமன்றப் பிரமுகர்களுக்கும் பட்டவர்த்தனமாக எடுத்துக்காட்டுவதற்காகக் கோவணத்துடன் பாராளுமன்றம் சென்ற காட்சியே இக்கோலம்; இவரின் இந்தக் கோலம் அரசாங்கத்தைச் சிந்திக்கச் செய்தது. அவமானம் தாங்க முடியாத அரசாங்கம், புடைவை கொள்முதல் செய்வதற்கு உடனடியாக ஒரு கோஷ்டியை வெளிநாட்டிற்கு அனுப்பியிருக்கிறது. என்னே இவரின் சேவை!

தகாவின் இளமை அசியலில் ஒரு சிலருக்கு வெறுப்பையும், கசப்பையும் கொடுத்திருக்கலாம். ஆனல் அரசியலில் முன்னேறுவதற்காகக் கையாணட வகுப்புவாத,கோஷங்களையும். அருவருப்பான அரசியல், தந்திரங்களையும், அறவே கைகழுவிவிட்டு, எல்லாசமுகத்தவர்களும் போற்றும் பொதுசேவையாளனுக மாறியதும் வியப்புத்தானே! இனிமேல் கே. எம். பி. யாரும இப்படி நல்லவராக மாறிவிட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

டாக்டர் அவர்கள் தமிழ்பேசும் மக்களின் மொழிப் பிரச்சனை தீர்க்கப்படவேண்டுமென்பதைக் கருத்திற்கொண்டு சாதகமான பலபேச்சுக்களைப் பாரளுமன்றத்தில் அடிக்கடிநிகழ்த்தியிருக்கின்ருர். "வட கிழக்குமகாணங்களிலுள்ள கச்சேரிகளுக்கு சிங்கள் விகிதர்களை அனுப்பிப் பிரச்சனையைப் பெருக்கவேண்டாம்" என்று பெண்பிரதமருக்கு ஒரு எச்சரிக்கை விடுத்திருந்தார். இவரின் நடு நிலைமைக் கொள்கையைத் தமிழ் பேசும் மக்கள் பாராட்டத்தானே வேண்டும்.

—சம்பத்

# பரிசு ரூபா 10-00

இப் புத்தாண்டில், உங்களுள் ஒருவருக்குப் பரிசு கொடுக்க விரும்புகின்றோம். எத்தனையோ ஆயிரம் வாசகர்களில், பரிசுக்குரியவரை நாம் எப்படித் தேர்ந்தெடுப்பது? ஒரேயொரு வழிதான் உண்டு. கீழேயுள்ள பத்திரத்தில் உங்கள் பெயரையும் முகவரியையும் தெளிவாக எழுதியனுப்புங்கள். நமக்குக் கிடைக்கும் பெயர்களுள் ஒன்றைத் திருவுருளச் சீட்டு மூலம் தெரிவு செய்து, பரிசுப் பணத்தை அனுப்புவோம். 5-2-64க்கு முன் 'கலைச்செல்வி' கிளைக் காரியாலயத்திற்கு உங்கள் பெயரை அனுப்புங்கள்.


**இங்கே வெட்டுக**

பெயர்:.......................................................................

முகவரி.......................................................................

.......................................................

கலைச்செல்வி கிளை அலுவலகம். கந்தரோடை சுன்னுகம்.



"அனிச்சமும் அன்னத்தின் தூவியும்
மாதர் அடிக்கு நெருஞ்சிப்பழம்" - குறள்.



அனிச்ச மலரும் அன்னப்பறவையின் இறகும் மங்கையரின் மெல்லிய அடிகளுக்கு நெருஞ்சிப்பழம் என்றால், அவ்வித மென்மை படைத்த அவர்கள் அணிகின்ற ஆடைகள் நிச்சயம் அனிச்சமலரைவிட, அன்னப் பறவையின் இறகைவிட, மென்மையாகவே இருக்கவேண்டும். அவ்வித மென்மையோடு கவர்ச்சியும் சித்திர வேலைகளும் நிறைந்த

**நைலோன், நைலெக்ஸ், டெக்கா,**

**காஷ்மீர், பங்களூர்,**

**சேலைகளும்**

வேறு எவ்வித ஆடைகளும் என்றும் கிடைக்கும்:

# கணேசன் ஸ்ரோர்ஸ்

78, கே. கே. எஸ். வீதி, : **யாழ்ப்பாணம்.**

போன்: 7169 தந்தி : கணேசன்ரெக்ஸ்

# ஆத்மஜோதி

இது ஓர் ஆத்மீக மாத வெளியீடு. இந்தியா, இலங்கை ஆகிய இரு இடங்களிலும் உலகின் ஏனைய பாகங்களிலும் வாழ்ந்த மகான்களின் உபதேசங்களையும் கட்டுரைகளையும் வாழ்க்கை வரலாறுகளையும் கொண்டு வெளிவருவது. தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவரினதும் இல்லங்களிலும் அவசியம் இருக்கவேண்டியது மனச்சாந்தி பெறுவதற்கு வழிகாட்டுவது.

வருடச் சந்தா 3 ரூபா மாத்திரமே

**ஆத்மஜோதி நிலையம்**

**நாவலப்பிட்டியா, (சிலோன்)**

STED: 1950 ஆரம்பம்: 1950



**உங்கள் அழகைப் பன்மடங்கு எடுத்துக் காட்டுபவை**

**சரியாக வெட்டி, நுட்பமாகத் தைக்கப்பட்ட உடுப்புக்களே!**

**அழகிய கலர்களில் அமைப்புடன் தைத்த றெடிமட் உடுப்புகளை அணிந்து மகிழுங்கள்.**

# டீன் டெயில்றிங் மாட்

C 27, பெரியகடை : யாழ்ப்பாணம்.

## மனக்கவலை தீர வேண்டுமா ?

எந்தவிதமான மனக் கவலைகள், கரைச்சல்கள், இருப்பினும் அவைகளை விபரமாக எழுதுங்கள். உங்கள் காரணங்களை மந்திர சக்தியின் மூலம் நிவர்த்தி செய்து தரமுடியும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டா.



கவர்மென்ட் ரிஜீஸ்டர் மாந்திரிக வைத்தியர்

# பி. எம். திஸநாயக்கா

**நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா**

அருத எண்ணெய் தலைமைக் காரியாலயம்

**கம்பளை.**

---

உங்களுக்குத்தேவையான சாய்ப்புச் சமான்களை
மிக மலிவான விலையில் வாங்க விரும்புகின்றீர்களா?

**அப்படியானால் எங்களிடம் வாருங்கள்.**

எங்களிடமுள்ள நவீன ட்ராக்டர்களைக் கொண்டு உங்கள் வயல் வேலைகளைச் செய்யுங்கள். யாழ்ப்பாணம் பஸ்நிலையத் தருகில், எங்கள் ட்ராக்டர்களை வாடகைக்கு ஒழுங்கு செய்யலாம்.

**கொழும்பு-யாழ்ப்பாணம் லொறி சேவையும் உண்டு.**

விபரங்களுக்கு:


## ஸ்ரீதர் ஸ்டோர்ஸ்

69 கஸ்தூரியார் வீதி : யாழ்ப்பாணம்.

இலங்கை எங்கும் புகழ்பெற்று விளங்குவது

# A. J. BEEDI

**SPECIAL**



மணம், குணம்,
காரம் ஒருங்கே

புகைப்போர்
உள்ளத்திற்கு உவகை
ஊட்டவல்லது!

எல்லோரும் விரும்பிப்
பாவிப்பது!!

## ஏ. ஜே. பீடிகளையே

கிடைக்குமிடம்

## ரேஜா ஸ்டோர்ஸ்

உரிமையாளர்: வே. இராமலிங்கம்

45, 47, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு - 13
போன்: 5148

கலாதேவி அச்சகம், ...ம்.




**நவீன முறையில் படப்பிடிப்பு**

பெருப்பித்தல்,

வர்ணந்தீட்டுதல்,

புளக் செய்தல்

**மற்றும் படப்பிடிப்பு (Photography)**

சம்பந்தமான விஷயங்களில் உங்களுக்குத்
திருப்தியளிக்கக் கூடிய ஸ்தாபனம்

சொந்தக்காரர்: J. A. பேரின்பநாயகம்

சுத்தமாக

சுகாதார முறைப்படி

நவீன இயந்திரங்களினால்

**விலையுயர்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு**

தயாரிக்கும்

# பேபி மார்க்

# ஸ்பெஷல்

## பானங்களையே அருந்துங்கள்

எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

தயாரிப்பாளர்

**சுப்பிரமணியம் சோடாக் கம்பெனி**

போன்: 97 வல்வெட்டித்துறை தந்தி: SODA

கிளை:

## ராஜு ஸ்ரோர்ஸ்

போன்: 373

2/B, ஸ்ரான்லி ரோட்,

**யாழ்ப்பாணம்**

தந்தி: ESVES

சுத்தமான, நறுமணம் நிறைந்த பன்னீர் தேவைப்பட்டால்
எங்கள்

## "இரட்டைப் புரு மார்க்"

பன்னீரையே வாங்குங்கள்.

கலியாண வைபவங்கள் கோயில் திருவிழாக்கள், மற்றும் விசேட தினங்களுக்கு வேண்டிய அபிஷேகச் சாமான்கள், வாசனைத் திரவியங்கள், சகாய விலையில் கிடைக்கும்.

**எந்தவிதமான மருத்துச் சரக்குகள்**

தேவைப் பட்டாலும எங்களிடம் வாருங்கள்.

சென்னை "நாதா கெமிக்கல் கம்பனி" யாரின் ஏஜண்டுகள்.

## க. செ. கணபதிப்பிள்ளை அன் சன்ஸ்.

51, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம்

ஆரணங்கின் அகமும் மகிழ்ந்து முகமும்மலரவேண்டுமானுல்
அங்கமெலாம் அழகுநகை ஜொலிக்கவேண்டும்.


பத்தரை மாற்றுப் பசும் பொன்னில்
பற்பலநவீன டிசையின்களில்
பலரும் பார்த்துப் பாராட்டும் விதத்தில்
நகைகள் செய்து தருவோம்.

# பவானி நகை மாளிகை

உரிமையாளர் - **ஆ. தில்லைநாயகம்**

கந்தரோடை வீதி : சுன்ஞகம்.

# எஸ். இ. கணபதி அன் கோ.




இறக்குமதியாளரும்,
எஸ்டேட் விநியோகஸ்தர்களும

எங்களிடம் சகல
எண்ணெய்
வகைகளும்
மிருக, கோழி, தீன்
வகைகளும்
சகாய விலையில்
கிடைக்கும்.



Distributors for:

- B. C. MILLNG CO. LTD.
- OIL & FATS CORPORATION



Poultry Medicines of every reputed Manufacture and all Raw materials for Poultry Foods and Animal foods-available

# S. E. KANAPATHY & Co.

32, WOLFENDHAL STREET, COLOMBO - 12

Telephone : 3935 Telegram: AMBU BRIYA